20.00

www.onlineuthayan.com

பக்கங்கள்: 32

# உதயன்

சுடர் 27
கதிர் 80

வள்ளுவர் ஆண்டு 2042 மாசி 02 செவ்வாய்க்கிழமை (14/02/2012) UTHAYAN - A Lively National Tamil Daily


# இலங்கைப் போர்க்குற்றங்களை ஐ.நா.சபை விசாரிக்க வேண்டும்

## ஐரோப்பிய நாடாளுமன்றம் அழைப்பு

பிரசெல்ஸ், பெப்ரவரி14

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஐரோப்பிய நாடாளுமன்றம் கேட்டுள்ளது.


ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு, இலங்கைப் போர்க்குற்றங்கள் தொடர்பாக விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும்படி தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுமாறு ஐரோப்பிய நாடாளுமன்றம் தனது தலைமையைக் (ஈயூ. பிரஸிடென்ஸி) கேட்டுள்ளது. இது தொடர்பான பிரேரணை ஐரோப்பிய நாடாளுமன்றத்தால் வழங்கப்பட்டுள்ளது.

ஈயூ. பிரஸிடென்ஸியே ஐரோப்பிய ஒன்றியத்தின் நடவடிக்கைகள் அனைத்துக்கும் பொறுப்பானதாக இருக்கிறது. 6 மாதங்களுக்கு ஒரு தடவை இதன் தலைமை நாடு மாற்றப்படும். எனினும் ஈயூ. பிரஸிடென்ஸி என்பது ஒரு நாட்டைக் குறிப்பதல்ல ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துத் தலைவர்களையும் கொண்ட கூட்டமாக அது இருக்கும். நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்ட பிரேரணைகளின் அடிப்படையில் விடயங்கள் ஆராயப்படும்.

இந்தக் கூட்டத்தில் இலங்கை மீதான ஐ.நா. விசாரணைக்குத் தீர்மானம் நிறைவேற்றும் படியே ஐரோப்பிய நாடாளுமன்றம் பிரேரணை சமர்ப்பித்துள்ளது.

27

## ‘வீழ்ந்து நொருங்கியது மிக்’



கொழும்பு,பெப் 14

இலங்கை விமானப் படையின் மிக் -27 போர் விமானம் நேற்றுப் பிற்பகல் விபத்துக் குள்ளாகி வீழ்ந்து நொருங்கியுள்ளது.

கட்டுநாயக்கவில் இருந்து 17 மைல் தொலைவில் புத்தளம், தும்மலசூரிய பொலிஸ் பிரதேசத்தில் உள்ள ஹேவன பகுதியில் நேற்றுப் பிற்பகல் 1.36 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

கட்டுநாயக்க விமானத் தளத்

27

## மின் கட்டணமும் விரைவில் எகிறும்

எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதால் மின் கட்டணமும் எதிர்காலத்தில் அதிகரிக்கப்படும் என்று அரச தகவல்கள் தெரிவிக்கின்றன. எரிபொருள் விலைக்கேற்ப ஒரு மின் அலகு தயாரிப்பதற்கான செலவு 21 ரூபாவால் அதிகரித்துள்ளதாக மின் வலு மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் நேற்று தெரிவித்துள்ளார். இதனால் இலங்கை மின்சார சபைக்குப் பல மில்லியன் ரூபா நட்டம் ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மின்கட்டண அதிகரிப்பு குறித்து உரிய தரப்பிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதென அவர் கூறியுள்ளார். (த)

(மற்றொரு செய்தி 28 ஆம் பக்கத்தில்)

## ரயில்வேயும் எச்சரிக்கை

எரிபொருள் விலையேற்றத்தையடுத்து சம்பள அதிகரிப்பு வழங்குமாறு ரயில்வே தொழிற்சங்கங்கள் வலியுறுத்தியுள்ளன. சம்பள உயர்வு வழங்கப்படாவிட்டால் தமிழ் - சிங்கள புதுவருட காலத்தில் பணிப்புறக்கணிப்பு மேற்கொள்ளப்போவதாக அகில இலங்கை பொது ஊழியர் ஒன்றியம் நேற்றுத் தெரிவித்துள்ளது. இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மார்ச் 25ஆம் திகதிவரை அவர்களுக்கு நாம் அவகாசம் வழங்குகிறோம். தீர்வு கிடைக்காவிட்டால் ஏப்ரல் முதலாம் திகதியிலிருந்து நாம் வேலை நிறுத்தம் செய்வோம். புதுவருடகாலத்திலும் இவ்வேலை நிறுத்தம் நடைபெறும் எனச் சங்கத்தின் பொதுச் செயலாளர் சுமதிபால மானவடு கூறினார்.

## கப்பம் கோரும் கடத்தல் காரர்கள்

கொழும்பில் தமிழ் வர்த்தகரைக் கடத்திச் சென்ற ஆயுதக் குழுவினர் அவரது குடும்பத்தினரிடம் 100 மில்லியன் ரூபா கப்பம் கோரியுள்ளனர். வெள்ளவத்தை கனல் வீதியில் உள்ள தனது வீட்டின் முன்பாக கடந்த சனிக்கிழமை மாலை 42 வயதான பிரபல வர்த்தகர் ராமசாமி பிரபாகரன் அடையாளம் தெரியாத ஆயுதக்குழுவினரால் கடத்திச் செல்லப்பட்டிருந்தார். வெள்ளை வானில் துப்பாக்கிகளுடன் வந்த ஏழு பேர் கொண்ட குழுவொன்று அவரது மனைவி மற்றும் மகள் முன்பாகவே வர்த்தகரைக் கடத்திச் சென்றது. வர்த்தகரைக் கடத்திச் சென்றவர்கள் அவரது மனைவியிடம் சனிக்கிழமை இரவு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு 100 மில்லியன் ரூபா பணம் தந்தால் அவரை விடுவிப்பதாக கூறியுள்ளனர்.

## பொலிஸ் பாதுகாப்புடன் கொழும்பு சென்ற பஸ்கள்

யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்று இரவு கொழும்பு நோக்கிப் பயணமான தனியார் பஸ்கள் பொலிஸ் பாதுகாப்புடன் சென்றன.தனியார் பஸ்களின் உரிமையாளர்கள் யாழ். பொலிஸாருடன் நடத்திய கலந்துரையாடலை அடுத்து இந்த ஏற்பாடு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. யாழ். முற்றவெளி தனியார் பஸ் நிலையத்தில் இருந்து நேற்று இரவு கொழும்பு நோக்கிச் சென்ற அனைத்து பஸ்களிலும் தலா ஒரு பொலிஸார் வீதம் பயணித்தனர். (த-17)

## கடும் வெயிலில் கால் கடுக்க வீதியில் அந்தரித்த பயணிகள்

### மினிபஸ் வேலை நிறுத்தத்தால்

யாழ்ப்பாணம்,பெப்.14

தனியார் பஸ்கள் நேற்று மேற்கொண்ட வேலை நிறுத்தம் காரணமாக குடாநாட்டில் பயணிகள் போக்குவரத்தில் பெரும் கஷ்டங்களையும் சிரமங்களையும் எதிர்நோக்கியதோடல்லாமல், அவர்களது அன்றாட வாழ்க்கையும் பெரிதும் பாதிப்புக்குள்ளானது.

எரிபொருள் விலை ஏற்றத்தைக் கண்டித்து தனியார் பஸ் சேவைகள் நேற்று நடைபெறவில்லை. இதனால் அரச ஊழியர்கள், தனியார்துறை ஊழியர்கள், மாணவர்கள், நோயாளர்கள் உள்ளிட்டபலதரப்

27

## தனியார் பஸ்கள் இன்று சேவையில்

கொழும்பு,பெப் 14

யாழ்.குடாநாட்டில் இன்று மினிபஸ் சேவைகள் அனைத்தும் வழமை போன்று இடம்பெறும் என யாழ்.மாவட்டத் தனியார் பஸ் சேவைச் சங்கங்களின் இணையத் தலைவர் எஸ்.கெங்காதரன் தெரிவித்தார்.அரசுடன் நடைபெற்ற பேச்சுக்களை அடுத்துச் சுமுகமான முடிவுகள் எட்டப்பட்டமையால் தாம் மேற்கொண்டுவந்த பகிஷ்கரிப்பைக் கைவிட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார். இன்று சேவைகள் அனைத்தும் வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

27

## விஞ்ஞானபீட மாணவர்கள் விரிவுரைகளைப் புறக்கணிப்பு

### சகமாணவனை இடைநிறுத்தியதால் நேற்றுமுதல் போராட்டம்

யாழ்ப்பாணம், பெப். 14.

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர்கள் நேற்று திங்கட்கிழமை முதல் விரிவுரைகளைப் புறக்கணித்துப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். விஞ்ஞானபீட மூன்றாம் வருட மாணவர் ஒருவரைப் பல்கலைக்கழக நிர்வாகம் ஆறு மாதங்களுக்குத் தற்காலிகமாக இடைநிறுத்திய செயலைக் கண்டித்து இந்தப் போராட்டத்தில் மாணவர்கள் குதித்துள்ளனர். இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது :-

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்துக்கு இந்த முறை சிங்கள மாண

27

## மனித உரிமை மீறல்களுக்கு ஆணைக்குழு பதில் தரவில்லை

### ஆஸி. பிரதமர் கூறுகிறார்

கான்பரா, பெப்.14

உலக நாடுகளால் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பில் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் முழுமையாகப் பதில் அளிக்கப்படவில்லை என ஆஸ்திரேலியா தெரிவித்துள்ளது.ஆணைக்குழுவின்அறிக்கை வெளியாகி இரண்டு மாதங்கள் கடந்த நிலையில் ஆஸ்திரேலியப் பிரதமர் கெவின் ரூத் ஆணைக்குழு அறிக்கை தொடர்பாக தனது கருத்தை நேற்று வெளியிட்டார்.

அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஆணைக்குழுவின் அறிக்கையில் போர்க்குற்றங்கள் தொடர்பில் முழுமையாகப் பதிலளிக்கப்படவில்லை. இருந்தாலும் சில நல்ல விடயங்கள் அதில் உண்டு. காத்திரமான முன்மொழிவுகள் அதில் உள்ளன.

போரின் போது இரு தரப்பினரும் மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என ஆஸ்திரேலியா தொடர்ச்சியாகக் கோரி வருகிறது.உலக நாடுகளின் குற்றச்சாட்டுகளுக்கு இந்த அறிக்கை பதிலளிக்காத நிலையில் போர்க்குற்றம் தொடர்பில் சுயாதீனமான - வெளிப்படையான விசாரணை நடத்தப்படவேண்டும் என்று நாம் கோருகிறோம் - என்றுள்ளது. (த)

## இ.போ.ச.பஸ் தாக்கப்பட்டது; சாரதி காயம்

யாழ்ப்பாணம், பெப்.14

யாழ்ப்பாணத்திலிருந்து ஆழியவளை நோக்கிச் சென்று கொண்டிருந்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் மீது நேற்று முற்பகல் 10.30 மணியளவில் அரியாலை மாம்பழம் சந்திப் பகுதியில் வைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனால் அந்த பஸ்ஸை செலுத்திய சாரதி காயமடைந்தார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு நபர்கள் இந்த பஸ்ஸை இடைமறித்து அதன் முன்பக்கத்தை நோக்கி கருங்கல் ஒன்றை வீசியுள்ளனர். முன்பக்கக் கண்ணாடியை உடைத்துக் கொண்டு சென்ற கல் சாரதியைத் தாக்கியது.

இதனால் தலை மற்றும்

27

## எரிபொருள் விலையேற்றம் ஆசியாவின் அதிசயமா?

### சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி

யாழ்ப்பாணம், பெப்.14

எரிபொருள்களின் ‘கிடுகிடு’ விலையேற்றம் தான் ஆசியாவின் அதிசயமா? கொழும்பு கோட்டையை அழகு படுத்துவதற்கும் நாடாளுமன்றத்தை அழகுபடுத்துவதற்கும் தேவையற்ற பகட்டு வேலைகளுக்குப் பணத்தைக் கொட்டுவதிலும் பார்க்க மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பல்வேறு துறைகளுக்கு அரசு மானியத்தை வழங்கலாம் அல்லவா?

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் அதன் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

எரிபொருள்களின் விலையேற்றம் குறித்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையின் வரலாற்றிலேயே இப்போது தான் மிக மோசமான விலையேற்றத்தை அரசு மேற்கொண்டுள்ளது. இதுவரை சதக் கணக்கிலும் ஒரு சில ரூபாக்களிலுமே விலை அதிகரிப்புகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இந்த அரசுதான் இவ்வாறான அதிகளவான விலையேற்றத்தை மேற்கொண்டுள்ளது.

வன்னிப் பிரதேசம் மற்றும் தமிழ்ப் பகுதிகளின் பெரும்பாலான கிராமங்களில்

27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்கத்தை ஏற்படுத்த சுயாதீனப் பொறிமுறை தேவை

## இலங்கையிடம் அமெரிக்கா வலியுறுத்து

இலங்கையில் அனைத்து இன மக்களின் தேவைகளை நிறைவேற்ற - பிரச்சினைகளைத் தீர்க்க சுயாதீன பொறிமுறை ஒன்றின் ஊடாக நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்காவின் பொதுமக்கள் பாதுகாப்பு, ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்கான சார்நிலைச் செயலரான மரியா ஒட்டேரோ தெரிவித்தார்.

இதுகுறித்து கொழும்பில் நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்த அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

நான் இலங்கை அரசு, சிவில் சமூகத்தினர், அரசியல் தலைவர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோருடன் ஆக்கபூர்வமான சந்திப்புகளை நடத்தினேன். இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை உருவாக்கும் அரசின் திட்டத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எனக்கு விளக்கிக் கூறினார்.

அத்தோடு, வெளிவிவகார அமைச்சர் மற்றும் பாதுகாப்பு செயலாளர் ஆகியோரையும் சந்தித்தேன்.

**அதை நாம் வரவேற்கின்றோம். ஆணைக் குழு பல விடயங்களை சிபாரிசு செய்துள்ளது. இந்தச் சிபாரிசுகள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டால் ஜனநாயத்தை முழுமையாக உறுதிப்படுத்த முடியும்.**

அமெரிக்கா இலங்கையுடன் நீண்ட உறவைக் கொண்டுள்ளது. புலிகளை சர்வதேச பயங்கரவாதிகள் என்று அமெரிக்காதான் முதன் முதலாக அறிவித்தது.

எனது இந்த விஜயத்தின் போது, ஆள்கடத்தல், மனித உரிமைகள் மற்றும் சிறுவர் தொழிலாளர் ஆகிய விடயங்கள் மீது அக்கறை கொண்டவர்களைச் சந்தித்தேன். இந்த விடயத்தில் இலங்கை அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இன்று இரண்டு வீதத்துக்கும் குறைவான சிறுவர்களே சிறுவர் தொழிலாளர்களாக இலங்கையில் உள்ளனர். 2016 ஆம் ஆண்டளவில் இந்நிலைமையை முற்றாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு இலங்கை திட்டமிட்டிருப்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

இதேவேளை, நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் சில குறைபாடுகள் உள்ளபோதும்,அதை நாம் வரவேற்கின்றோம். ஆணைக்குழுபலவிடயங்ககளைசிபாரிசு செய்துள்ளது. இந்தச் சிபாரிசுகள்முழுமையாகநடைமுறைப் படுத்தப்பட்டால்ஜனநாயத்தை முழுமையாக உறுதிப்படுத்த முடியும்.

ஆணைக்குழுவின் அறிக்கையை முழுமையாக அமுல்படுத்தப்போவதாக ஜனாதிபதி என்னிடம் உறுதியளித்தார்.

இறுதியாக, அனைத்து இன மக்களின் தேவைகளையும் நிறைவேற்ற சுயாதின பொறிமுறை ஒன்றின் ஊடாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த விடயங்களையெல்லாம் செய்வதற்கு ஐ.நா. சபை உள்ளிட்ட அமைப்புகளுடன் சேர்ந்து செயற்பட நாம் இலங்கையை ஊக்குவிக்கின்றோம் - என்றார்.

இந்நிலையில் செய்தியாளர் சந்திப்பின்போது கருத்துரைத்த ரொபட் ஓ பிளெக், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசுக்கும் இடையிலான பேச்சு முன்னேற்றம் கண்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இரு தரப்புக்கும் இடையிலான பேச்சின் முடிவுகளை நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் முன் சமர்ப்பிக்கலாம் என்றும் பிளேக் கூறினார்.



எரிபொருள் விலையேற்றத்தைக் கண்டித்து கொழும்பு- சிலாபம் வீதியில் மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# மன்னார் மீனவர்கள் இன்று அமைதியான எதிர்ப்புப் பேரணி

மன்னார்,பெப்.14

மன்னார் மாவட்ட மீனவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து இன்று செவ்வாய்க்கிழமை காலை எரிபொருள் விலையேற்றத்திற்கு எதிராக மன்னாரில் எதிர்ப்புப் பேரணி ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எம்.எம். ஆலம் தெரிவித்தார்.

எரிபொருள் விலையேற்றத்தினால் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் இந்த விலையேற்றத்துக்கு எதிராக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் நேற்றுத் திங்கட்கிழமை காலை மன்னார் உப்பள வீதியில் அமைந்துள்ள மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவு சங்கங்களின் சமாச அலுவலகத்தில் தலைவர் எம்.எம்.ஆலம் தலைமையில் விசேட கூட்டம் ஒன்று இடம் பெற்றது.

**இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு மன்னார் உப்பள வீதியில் அமைந்துள்ள மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவு சங்கங்களின் சமாச அலுவலகத்திற்கு முன்பாக அமைதியான எதிர்ப்புப்பேரணி**

இதன் போது சமாச செயலாளர் எஸ்.ஜெ.நிக்ஸன் குரூஸ்,தேசிய மீனவர் ஒத்துழைப்பு பேரவையின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் ஏ.சுனேஸ் மற்றும் மன்னார் மாவட்டத்தில் உள்ள மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது எரிபொருள் விலையேற்றத்தினால் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்டது.

இதன் போது வேறு மாவட்டங்களில் மீனவர்கள் மேற்கொண்டு வரும் எதிர்ப்பு ஊர்வலங்கள் போன்று இன்று செவ்வாய்க்கிழமை காலை மன்னாரிலும் மேற்கொள்வதெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த நிலையில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு மன்னார் உப்பள வீதியில் அமைந்துள்ள மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவு சங்கங்களின் சமாச அலுவலகத்திற்கு முன்பாக அமைதியான எதிர்ப்பு பேரணி ஆரம்பமாகி மன்னார் பஸார் பகுதியூடாக மன்னார் மாவட்டச் செயலகத்தைச் சென்றடையும்.

ஜனாதிபதியிடம் மனுவொன்றை கையளிக்கும் முகமாக மன்னார் மாவட்ட அரச அதிபரிடம் எரிபொருள் விலைக் குறைப்பு தொடர்பில் மனுவொன்று கையளிக்கப்படவுள்ளதாக மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் எம்.எம்.ஆலம் தெரிவித்தார்.

இதேசமயம் குறித்த பேரணியில் கலந்து கொள்ளும் மீணவர்கள் அரச உடமைகளுக்கோ அல்லது காவல் துறையினருக்கோ இடையூறாக அல்லது விபரீதங்களை ஏற்படுத்தும் வகையில் செயற்படாது அமைதியான முறையில் எமது எதிர்ப்பை வெளிப்படுத்துமாறு மீனவர்களிடம் சமாசத் தலைவர் எம்.எம்.ஆலம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (க-12)

## 'இஸட்' புள்ளிகளை ஆட்சேபித்து தாக்கல் செய்த மனு விசாரணைக்கு

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட இஸட் புள்ளிகளை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

மே மாதம் 10ஆம் திகதி இந்த ஆட்சேபனை மனு மீதான விசாரணைகள் இடம் பெறவுள்ளன என எமது நீதிமன்றச் செய்தியாளர் தெரிவித்தார்.

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய 16 மாணவர்களுடன் இணைந்து இலங்கை ஆசிரியர் சங்கம் குறித்த அடிப்படை மனித உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்துள்ளது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தலைமையிலான மூன்று நீதியரசர்கள் கொண்ட குழு முன்பாக இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

புதிய மற்றும் பழைய பாடத்திட்டங்களை இணைத்து இஸட் புள்ளி வழங்க மேற்கொண்ட நடவடிக்கையில் சிக்கல்கள் காணப்படுகின்றன என மனுதாரர் சார்பில் வாதாடிய சட்டத்தரணி தெரிவித்தார்.

இதனால் மாணவர்கள் பலர் பாதிப்புக்களை எதிர் நோக்கி வருகின்றனர் என குறித்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும், இஸட் புள்ளிக் கணிப்பில் எவ்வித சிக்கல்களும் ஏற்படவில்லை என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சார்பில் நீதிமன்றில் வாதாடிய சட்டத்தரணி குறிப்பிட்டார்.

எனினும், இது தேசிய பிரச்சினை என்பதால் மனு மீது விசாரணை நடத்தப்பட வேண்டியது அவசியம் என பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தெரிவித்தார்.

இதன்படி எதிர்வரும் மே மாதம் 10 ஆம் திகதி மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படவுள்ளது.

அத்துடன் எதிர்ப்புகள் இருப்பின் அதற்கு முன்னர் முன் வைக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (சி)

## நோர்வூட் பகுதியில் கைக்குண்டு மீட்பு

ஹட்டன், நோர்வூட் பகுதியில் இருந்து கைக்குண்டு ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது என நோர்வூட் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெஞ்சர் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் தனியார் மின் உற்பத்தி நிலையம் ஒன்றுக்கு அருகில் இருந்தே இந்தக் கைக்குண்டு நேற்று 1.15 மணியளவில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இதுவிடயம் தொடர்பில் சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படாத நிலையில் நோர்வூட் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (சி)

## சீனப் பிரஜைக்கு அபராதம்

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட ஒரு தொகை சிகரெட்டுக்களை வைத்திருந்தமை மற்றும் அனுமதிப்பத்திரம் இன்றி வெளிநாட்டு மதுபானங்களை விற்பனை செய்தமை போன்ற குற்றச்சாட்டுகளின் பேரில் சீனாவைச் சேர்ந்த ஒருவருக்கு கொழும்பு நீதிமன்றம் நேற்று ஒரு லட்சம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

கொள்ளுப்பிட்டியில் உள்ள கடை ஒன்றிலிருந்து கைதுசெய்யப்பட்ட இந்த நபரிடமிருந்து 600 சட்டவிரோத சிகரெட்டுக்களையும், 47 வெளிநாட்டு மதுபான போத்தல்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கொழும்பு கோட்டை நீதிவான் கனிஷ்கா விஜயரட்ன முன்னிலையில் இச்சந்தேக நபர் நேற்று திங்கட்கிழமை முன்னிலைப்படுத்தப்பட்டார்.

தனது சொந்தப் பாவனைக்காக இவர் மதுபானங்களையும், சிகரெட்டுக்களையும் வைத்திருந்தார் எனவும் இவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார் எனவும் கட்சிக்காரர் சார்பில் வாதாடிய சட்டத்தரணிகளான பி.சி.டி. சில்வா, சுதர்சினி குணரட்ன ஆகியோர் தெரிவித்தனர்.

இதனைக் கவனத்திற் கொண்ட நீதிவான், சந்தேக நபருக்கு ஒரு லட்சம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

## எட்டாக் கனியான 20 ஆயிரம் ரூபா

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் மீளக் குடியமர்ந்த 5 ஆயிரத்து 39 குடும்பங்களுக்கு இதுவரை மீளக்குடியமர்வுக்கான கொடுப்பனவான 20 ஆயிரம் ரூபா இதுவரை வழங்கப்படவில்லை.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசத்திற்கு உட்பட்ட 42 கிராம சேவகர் பிரிவுகளில் 21 ஆயிரத்து 793 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன.

இந்த நிலையில் இக் குடும்பங்களுள் 5 ஆயிரத்து 739 குடும்பங்களுக்கு மீளக் குடியமர்வுக் கொடுப்பனவாக வழங்கப்படும் 20 ஆயிரம் ரூபா இதுவரை வழங்கப் படவில்லை, இவ்வாறு 20 ஆயிரம் ரூபாவைப் பெற்றுக் கொள்ளாத குடும்பங்கள் நிதியைப் பெறுவதற்குத் தினமும் அலைந்து திரிகின்றன. ஆனால் ஏமாற்றமே மிஞ்சுகின்றது. எனவே உரிய அதிகாரிகள் இதனைப் பெற்றுத் தர வேண்டுமெனப் பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




## முஹமட் நஷீட்டின் பதவி இழப்பு அதிகார மமதைக்குப் பரிசு

மாலைதீவில் ஜனாதிபதி முஹமட் நஷீட்டின் ஆட்சிக் கவிழ்ப்பு, வெளிநாடுகளின் தலையீட்டைத் தவிர்க்கும் நோக்கத்துடன் மிகவும் கச்சிதமாக அரங்கேற்றப்பட்டு விட்டது.

மாலைதீவின் குற்றவியல் நீதிமன்றத்தின் சிரேஷ்ட நீதிபதி அப்துல்லா மொஹமட்டை விடுதலை செய்யுமாறு கடந்த சில வாரங்களாக ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வந்தன. ஆர்ப்பாட்டக்காரர்களுடன் ஒரு கட்டத்தில் பொலிஸாரும் இணைந்து கொண்டனர்.

இந்த நிலையில் ஆர்ப்பாட்டங்கள் காரணமாக ஜனாதிபதி முஹமட் நஷீட் பதவியை இராஜினாமாச் செய்துவிட்டார் என்று முதலில் செய்திகள் வெளிவந்தன. நஷீட் இராஜினாமாவுக்கு பல வந்தப்படுத்தப்பட்டார் என்பது பின்னரே தெரிய வந்தது. தற்பொழுது மாலைதீவின் குற்றவியல் நீதிமன்றம் நஷீட்டைக் கைது செய்ய பிடி ஆணை பிறப்பித்துள்ளது. இரத்தம் சிந்தா ஆட்சி மாற்றம் இது.

நஷீட்டின் மனைவியும் இரு புத்திரிகளும் பாதுகாப்புத் தேடி இலங்கை வந்துள்ளனர். 1988ஆம் ஆண்டு ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியின்போது மாலைதீவுக்கு தனது இராணுவத்தை அனுப்பிய இந்தியா, தற்போது ஆட்சிக் கவிழ்ப்பின் பின்னர் புதிய ஆட்சியாளர்கள் மீது அழுத்தங்களைக் கொண்டுவரும் நடவடிக்கைகளை தற்பொழுது ஆரம்பித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுவரை துணை ஜனாதிபதியாக இருந்த டாக்டர் வாஹிட் ஹஸன் மாலைதீவின் புதிய ஜனாதிபதியாகப் பதவி ஏற்றுள்ளார். சார்க் அமைப்பின் புதிய தலைவரான நஷீட்டின் வீழ்ச்சியையும், புதிய ஜனாதிபதியின் தலைமையில் மாலைதீவில் இடம்பெற்று வரும் அரசியல் மாற்றங்களையும் சர்வதேசம் உன்னிப்பாக அவதானித்து வருகிறது.

மாலைதீவுக் குடியரசு, இந்து மாகடலில் இலங்கைக்குச் சுமார் 500 மைல் தொலைவில், தென் மேற்கில் அமைந்துள்ள 1,192 சிறு தீவுகளின் கூட்டமாகும். அதிபர் ஒருவரின் தலைமையில் அமைச்சரவையைக் கொண்ட ஒற்றை ஆட்சி முறை அங்கு நிலவுகிறது. அதன் பிரதான வருமான மூலம் உல்லாசப் பயணத்துறையாகும். அந்த நாட்டின் சனத்தொகை மூன்றே கால் லட்சமாகும்.

மாலைதீவில் இடம்பெற்ற அரசியல் சீர்திருத்தத்தின் கீழ் 2008ஆம் ஆண்டு நடைபெற்ற, பல கட்சிகள் பங்குபற்றிய ஜனநாயக ரீதியான முதலாவது பொதுத் தேர்தலில் பதவிக்கு வந்தவர் நஷீட். மாலைதீவில் 30 வருடகாலமாகப் பதவியில் இருந்த அப்துல் கையூமை இவர் தேர்தலில் தோற்கடித்தார். இவ்வளவு குறுகிய காலத்தில் நஷீட் அரசியல் செல்வாக்கு இழப்பதற்கு இவரின் அதிகார ஆணவமே காரணம் என்பதில் சந்தேகம் இல்லை.

குற்றவியல் நீதிமன்ற நீதிபதி அப்துல்லா மொஹமட்டின் வீட்டை முற்றுகையிட்ட படையினர், ஒரு சாதாரண குற்றவாளியைக் கைது செய்வது போன்று அவரைக் கைது செய்து இழுத்துச் சென்று வாகனத்தில் ஏற்றினர். இது தொலைக்காட்சியிலும் காட்டப்பட்டது. அவரை விடுவிக்குமாறு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டபோதும் நஷீட் அதற்கு இணங்க மறுத்தார். அது மட்டுமல்ல நஷீட்டின் ஆட்சியில் ஊழல், அதிகார துஷ்பிரயோகம் பெரும் அளவில் இடம்பெற்றன.

தலைநகர் மாலேயில் உள்ள சர்வதேச விமான நிலையத்தின் நிர்வாகம், புதுடில்லியிடம் தாரை வார்க்கப்பட்ட சம்பவமும் நஷீட் மீது மக்களின் அதிருப்தி அதிகரிக்க மற்றொரு காரணம். புதுடில்லியில் உள்ள ஜி.எம்.ஆர். நிறுவனம் 7 கோடி 80 லட்சம் டொலர் பணம் செலுத்தி 25 வருடகால குத்தகைக்கு இதனைப் பெற்றுக்கொண்டுள்ளது. இந்த ஒப்பந்த விவரங்களை வெளியிடுமாறு எதிர்க்கட்சிகள் கோரின. நஷீட் மறுத்து விட்டார்.

ஆகவே, எதிர்க்கட்சிகளை அவர் கணக்கெடுக்கவில்லை. அதிகார மமதையில் செயற்பட்டுவந்தார். அவரின் வீழ்ச்சிக்கு இதுவும் காரணமாகும்.

மாலைதீவு மக்களுக்கு ஆட்சிக் கவிழ்ப்புகள் புதியவை அல்ல. மாலைதீவின் முதலாவது ஜனாதிபதி மொஹமட் அமின் டிடி 1953 ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்த சமயம் அவரது ஆட்சி புரட்சி மூலம் கவிழ்க்கப்பட்டது.

1988ஆம் ஆண்டு மாலைதீவு வர்த்தகரான அப்துல்லா லுத்துபி என்பவர், இந்தியாவில் இரகசியமாகப் பயிற்றுவிக்கப்பட்டு ஆயுதம் வழங்கப்பட்ட சுமார் 80 புளொட் போராளிகளின் உதவியுடன், அப்துல் கையூமின் ஆட்சியைக் கவிழ்க்க முயன்றார். இந்தியாவின் உதவியால் அந்த முயற்சி உடனடியாக முறியடிக்கப்பட்டது. தற்பொழுது இடம்பெற்றிருப்பது மூன்றாவது புரட்சி. அதுவும் மிகவும் தந்திரமாக அரங்கேற்றப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி அப்துல் கையூம் மாற்றங்களை மிகவும் நிதானமாகச் செயற்படுத்தினார். நஷீட் அவசரம் காட்டினார். சட்டத்தையும் மதிக்கவில்லை. இதனால் நாட்டு மக்களின் செல்வாக்கை இழந்தார். பதவி பறிபோனது.

இன்றைய நிலையில், மாலைதீவில் தேர்தல் ஒன்று நடந்தால், நஷீட் 25 சதவீத வாக்குகளைக் கூடப் பெறமாட்டார் என்கின்றனர் அரசியல் அவதானிகள். அதிகார மமதைக்குக் கிடைத்த தோல்வி இது. இது இலங்கை உட்பட தெற்காசிய நாடுகள் அனைத்துக்கும் ஒரு பாடம் ஆகும்.

இதேவேளை, மாலைதீவின் ஆட்சி மாற்றம், அந்நாட்டின் உள்விவகாரம் என்றும் அதனால், இலங்கைக்கு அந்நாட்டுடனான நெருக்கமான உறவுகளில் எந்தவித மாற்றமும் ஏற்படப் போவதில்லை எனவும் இலங்கை அரசு அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டில் பதவி இழந்த ஜனாதிபதி நஷீட், இலங்கைக்கு ஆதரவாகப் பேச இருந்தமையால், அவரின் பதவி கவிழ்ப்பு இலங்கைக்கு ஒரு பின்னடைவு எனக் கருதப்படுகிறது. எனினும் அத்தகைய பாதக நிலை உண்டாகாது இருப்பதைத் தடுப்பதில், தன்னாலான சகல முயற்சிகளிலும் இலங்கை அரசு ஈடுபட்டு வருகிறது; தனது தரப்புக்கு வாய்ப்பாக்கும் சூழ்நிலையில் அது வெற்றிகாணுமா என்பதனைப் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

## எஸ்.ஓ.எஸ். சிறுவர் கிராமம் நாயன்மார்கட்டில் அடிக்கல்

யாழ்ப்பாணம்,பெப்.14


சமூகசேவைகள் அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்ட உள்ளூர் அரசசார்பற்றநிறுவனமான'எஸ்.ஓஎஸ்' சிறுவர் கிராமத்துக்கு நாயன்மார் கட்டில் நேற்று அடிக்கல் நடப்பட்டது.

நாயகன்மார்கட்டு கனகரத்தினம் வீதியிலுள்ளஇரண்டரை ஏக்கர் காணியில் சுமார் 200 மில்லியன் ரூபா செலவில் இந்தக் கிராமம் அமைக்கப் படவுள்ளது.

அடுத்த வருடம் ஜூலை மாதத்துக்கு முன்னர் இதன் கட்டட நிர்மாண வேலைகள் முடிவடையும் எனத் திட்டமிடப்பட்டுள்ளது. பெற்றோரை இழந்த 74 பிள்ளைகள் இதில் பராமரிக்கப்படவுள்ளனர்.

12 வீடுகளைக் கொண்டதாக இந்த கிராமம் நிர்மாணிக்கப் படவுள்ளது.

அடிக்கல் நாட்டும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரும், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சிறுவர் நன்னடத்தை ஆணையாளர் தி.விஸ்வரூபன், யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் சீ.வி.கே. சிவஞானம், பிரதேச செயலர் எஸ்.செந்தில் நந்தனன், எஸ்.ஓ.எஸ் சிறுவர் கிராம இயக்குநர் சபை உறுப்பினர் திருமதி மல்சி ரிடயஸ்,அந்த நிறுவனத்தின் யாழ். மாவட்டப் பணிப்பாளர் எஸ்.அர்ச்சுனன் ஆகியோர் கலந்து கொண்டு அடிக்கல்லை நாட்டினார்கள். (த-3)



## குருநகர் வைத்தியசாலையில் அடிப்படை வசதிகள் இல்லை

யாழ்ப்பாணம், பெப்.14

குருநகர் சவச்சாலைச் சந்தியில் அமைந்துள்ள அரச பொது வைத்திய சாலையில் நோயாளர்களுக்கான அவசர அடிப்படை வசதிகள் இல்லாததால் தாம் சிரமங்களை எதிர்கொள்வதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரசவத்திற்கு அனுமதிக்கப்பட்ட பெண்ணொருவர் அங்குள்ள வசதியீனங்கள் காரணமாக உயிராபத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டதாக தெரிய வருகின்றது.

அப் பெண்ணுக்கு அதிகாலையில் பிரசவம் நடந்த போதிலும் பல மணி நேரமாகியும் நஞ்சுக்கொடி அகலவில்லை. அங்கே இரவு நேரங்களில் வைத்தியர் கடமையில் இருப்பதில்லை தாதியர்களே பிரசவத்தைப் பார்க்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்காக வைத்தியருக்கும் அம்புலன்சுக்கும் அறிவித்த போதும் அம்புலன்ஸ் வருவதற்கு தாமதம் ஏற்பட்டது. எனவே தனியார் வாகனத்தில் கொண்டுசெல்லமுற்பட்டபோது நோயாளியை தூக்கிச் செல்வதற்குரிய 'ஸ்ரெச்சர்' வைத்தியசாலையில் இல்லை. எனவே பிரசவ வேதனையுடன் அப் பெண்ணைச் சிரமத்தின் மத்தியில் தூக்கிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

மக்கள் செறிந்து வாழும் சூழலில் அமைந்துள்ள இந்த வைத்தியசாலையில் சிகிச்சை பெற வரும் நோயாளர்களின் அடிப்படை வசதிகளையும் உபகரணக் குறைபாடுகளையும் நீக்கநடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (த-135)

## மணியந்தோட்டத்தில் குடியமர்ந்த மக்களுக்கு இலவச மின்னிணைப்பு

கொழும்புத்துறை, பெப்.14

மணியந் தோட்டத்தில் மீளக் குடியமர்ந்த மக்களின் வீடுகளுக்கு இலவச மின்னிணைப்பை வழங்கு வதற்கான நடவடிக்கைகள் மின்சார சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

'வடக்கின் வசந்தம்' திட்டத்தின் கீழ் மீளக்குடியமர்ந்த பகுதிகளுக்கு இலவச மின்னிணைப்பு வழங்கும் நடைமுறையின்படி இத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

இந்தப் பகுதிக்கு அண்மையில் மின்விநியோகம் ஆரம்பித்து வைக்கப்பட்டதையடுத்து மக்கள் தமது வீடுகளுக்கு உள்ளக மின்னிணைப்புக்களை ஏற்படுத்துவதில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

ஏற்கனவே பதிவுகளை மேற்கொண்டவர்களுக்கு மின்சார சபையினால் மின் இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதிக்கு மின் விநியோகம் கிடைக்கப் பெற்றுள்ளமையால் மாணவர்களின் கல்வியிலும் சிறு தொழில் முயற்சிகளிலும் அபிவிருத்தி ஏற்படக்கூடிய நிலை தோன்றியுள்ளதாக மக்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

(த-135)

## ஒருங்கிணைந்த உள்ளூர் அபிவிருத்தி வேலணைப் பிரதேசத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப்.14

வேலணைப் பிரதேச சபையும் பிரதேச செயலகமும் இணைந்து ஒருங்கிணைந்த உள்ளூர் அபிவிருத்தித் திட்டத்தை (ILDP) நடைமுறைப்படுத்தவுள்ளன.

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் செ.பிரணவநாதன் இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார். இதன் முதற்கட்டமாக வேலணை பிரதேசத்தின் ஒருங்கிணைந்த அபிவிருத்தி தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் ஜி.ஐ.இசட் நிபுணத்துவ ஆலோசகர் அ.ஜெயரட்ணம் கலந்துகொண்டு கருத்துரை வழங்குவார்.

வடக்கில் 'ஒருங்கிணைந்த உள்ளூர் அபிவிருத்தித் திட்டமிடலில்' வேலணை பிரதேச சபை, சுழிபுரம் பிரதேச சபை, வடமராட்சி, பருத்தித்துறை பிரதேச சபை என்பனவே இந்தத் திட்டத்தை முதற்கட்டமாக செயற்படுத்தி வருகின்றன. (ஒ)

## நிகழ்வுகள் இன்று

### விருதுவழங்கல்

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம் இலங்கை கலைக் கழகம், அரச நாடகக் குழு ஆகியன இணைந்து நடத் தும் தேசியநாடக விழா -2011 இன் விருது வழங்கும் நிகழ்வு மாலை 6 மணிக்கு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சர் ரி.பி. ஏக்க நாயக்க தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-14)

### இரத்த தானம்

நல்லூர் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் யாழ். உயர் தொழில் நுட்பவியல் சமூகத்தினரால் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளது. (த-14)

### செயலமர்வு

வடமாகாணக்கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் க.பொ.த. உயர் தர வகுப்புக்களில் வணிகக்கல்வி பாடத்தினைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு காலை 8.30 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது. இந்தச் செயலமர்வில் கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விரிவுரையாளர்களும் பேராசிரியர்களும் கலந்துகொண்டு விரிவுரைகளை நிகழ்த்தவுள்ளனர். (த-14,405)

### கூட்டம்

வேலணை சாட்டி வெள்ளைக் கடற்கரை இந்து மயான அந்தியேட்டி மட பரிபாலன சபைக் கூட்டம் பிற்பகல் 2.மணிக்கு வேலணை பிரதேச சபை பொது மண்டபத்தில் இடம் பெறும். பரிபாலன சபைத் தலைவர் க.மார்க்கண்டு தாசன் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் வேலணைப் பிரதேசசபைத்தலைவர் வி.சிவராசா கலந்து கொள்வார். (த-14)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே, எதற்காகச் செல்கிறீர் இன்னும் ஏன் இந்தக் கேள்விகள்

## போர் ஓய்ந்தும் 'சுதந்திரம்' இல்லையே

மன்னார், பெப்.14

மக்கள் எந்தவிதமான பதிவுகளும், சோதனைகளுமின்றிச் சுதந்திரமாகப் பயணம் செய்வதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு மாந்தை மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் ஜேம்ஸ். சுதாகரன் பிரதேச செயலருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார். அதில்;

யுத்தம் முடிவுக்கு வந்து மூன்று வருடங்களாகிய நிலையிலும், இன்னமும் எமது பிரதேச மக்களின் மேல் விதிக்கப்படும் சோதனை நடைமுறைகள் அதிகரித்த வண்ணமே உள்ளன.

குறிப்பாக ஏ- 32 வீதியில் நாயாற்று வெளிச் சந்தியில் அமைந்துள்ள இராணுவத்தின் 21 ஆவது படைப் பிரிவில் சோதனைகளும் பதிவுகளும் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றன.

அதாவது அந்தச் சோதனைச் சாவடியின் ஊடாகப் பயணத்தை மேற்கொள்ளும் தனியார் வாகனங்கள் பயணிகள் பஸ்கள் உட்பட மோட்டார் சைக்கிள்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் வாகனங்கள் அனைத்தும் பரிசீலனை செய்து பதியப்பட்ட பின்னரே அனுமதிக்கப்படுகின்றன. முதலில் பயணம் செய்யும் பயணி தனது பெயர், எங்கிருந்து வருகிறார், எங்கே செல்கிறார், எதற்காகச் செல்கிறார் என அங்கிருக்கும் இராணுவ வீரருக்கு வாய்மொழி மூலமாகத் தெரிவிக்க வேண்டும். பின்னர் அந்தக் காவல் நிலையத்தில் உள்ள பதிவினை மேற்கொள்ளும் அதிகாரியால் பயணிக்கும் வாகன வகைக்கேற்ப வாகனங்களின் வகை, நிறம், பயணம் செய்பவரின் எண்ணிக்கை,நேரம் வாகனம் எங்கிருந்து வருகின்றது, எங்கே செல்கின்றது, எதற்காகச் செல்கின்றது, அடையாள அட்டை இலக்கம் என்பன பதியப்பட்டபின்னரே பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.

நாம் எமது பிரதேசத்தில் முதலில் எதிர்பார்ப்பது சுதந்திரமாகப் பயணம் மேற்கொள்வதும், தொழிலுக்குச் செல்வதுமேயாகும். தவிர கைத்தொழில் பேட்டைகளையோ அன்றேல் வர்த்தக நிலையங்களையோ எமது மக்கள் எதிர்பார்க்கவில்லை.

**பயணத்தை மேற்கொள்ளும் தனியார் வாகனங்கள் பயணிகள் பஸ்கள் உட்பட மோட்டார் சைக்கிள்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் வாகனங்கள் அனைத்தும் பரிசீலனை செய்து பதியப்பட்ட பின்னரே அனுமதிக்கப்படுகின்றன.**

மேலும் மாந்தை மேற்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஒவ்வொரு கிராம நுழை வாயில்களிலும், சோதனைக் காவலரண் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி நாயாற்று வெளிச் சந்தியில் பதிவினை மேற்கொண்ட போதும் கிராமத்தில் உட்செல்லும் வாகனங்கள் திரும்பவும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு அடையாள அட்டை பரிசீலிக்கப்பட்டு, பதியப்படுகிறது. இதனால் மீள் குடியமர்வு நடவடிக்கைகளில் துரிதமாக ஈடுபடுகின்ற அரச சார்பற்ற நிறுவனங்களும், பொது அமைப்புகளும் பல அசௌகரியங்களுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றன. மீன் பிடியைத் தொழிலாகக் கொண்டுள்ள பாப்பாமோட்டை, விடத்தல் தீவு, கத்தாளம்பிட்டி, அந்தோனியர்புரம், இலுப்பைக் கடவை, மூன்றாம்பிட்டி, தேவன் நகர் போன்ற மக்களினது நாளாந்தப் பிரச்சினைகளாக இந்த கடற்தொழில் பாஸ் நடைமுறை அமைகின்றது. நிரந்தரபாஸ் அனுமதி வைத்திருந்தாலும் கூட ஒவ்வொரு நாளும் தொழிலுக்குச் செல்லும் போதும் திரும்பிவரும் போதும் பாஸ் அனுமதி, இலக்கம், பெயர், நேரம், அடையாள அட்டை இலக்கம், பாவிக்கப்படும் வெளி இணைப்பு இயந்திரத்தின் வகையும் அதன் வலுபோன்றவையும் பதியப்பட்ட பின்னரே தொழிலுக்கு செல்லவும் திரும்பி வரவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

எனவே எதிர்காலத்தில் எமது பிரதேச மக்கள் எந்த விதமான பதிவுகளும் சோதனைகளும் இன்றிச் சுதந்திரமாகப் பயணம் செய்யவும், தொழில் நடவடிக்கையை மேற்கொள்ளவும் நடைபெறுகின்ற பிரதேச, மற்றும் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் உரிய அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து எமது மக்களின் அன்றாட அடிப்படை பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஆவன செய்யுமாறு தங்களை மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.- என்றுள்ளது. (க)

# கூரைகளற்ற பஸ் தரிப்பிடம்

கிளிநொச்சி, பெப்.14

பரந்தன் சந்தியில் வீதிக்கு அருகில் உள்ள பஸ் தரிப்பிடம் இதுவரை திருத்தி அமைக்கப்படாமல் கூரைகளற்ற நிலையிலேயே காணப்படுகின்றது.

இதனால் இப் பிரதேசத்தில் பஸ் சேவையைப் பெற வரும் மக்கள் வீதியோரத்தில் மர நிழல்களின் கீழேயே நிற்க வேண்டியுள்ளது. பரந்தனில் மக்கள் மீளக்குடியமர்ந்து இரண்டரை வருடங்கள் கடந்து விட்டபோதும் இந்த பஸ் நிலையம் கூரை கழற்றப்பட்ட நிலையிலேயே உள்ளது.

இதனைப் புனரமைப்பதற்கு உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லையெனப் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

உமையாள்புரம் பொது நோக்கு மண்டபத்தின் சேவைகளைப் பெறும் மக்கள் பரந்தன் சந்தியில் இறங்கி மீளவும் ஒரு கிலோ மீற்றர் தூரம் நடந்து வர வேண்டியுள்ளது.

இதனால் கண்டி வீதியின் அருகில் உள்ள இந்தப் பொது நோக்கு மண்டபத்தின் முன்பாக பஸ் நிறுத்தப்படுமென்ற குறியீட்டு அறிவித்தலை இடுமாறும் இந்தப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (121)

# மாற்று இடம் வழங்குமாறு நகர சபையிடம் கோரிக்கை

மன்னார்,பெப்.14

எதிர்வரும் 16ஆம் திகதியுடன் வெளியேற்றப்படவுள்ள மன்னார் தினச்சந்தை வியாபாரிகளுக்கு தொடர்ந்தும் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான மாற்று இடம் ஒன்று உடன் வழங்கப்பட வேண்டுமென மன்னார் நகர சபையின் அரச தரப்பு உறுப்பினர் என். நகுசீன் மன்னார் நகரசபைத் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்

மன்னார் நகர சபையினருக்கும் மன்னார் வர்த்தக சங்கத்தினருக்கும் இடையில் மன்னார் நகர சபையில் இடம் பெற்ற விசேட கூட்டத்தின் போது மன்னார் நகர சபையின் அரச தரப்பு உறுப்பினர் என்.நகுசீன் மன்னார் நகர சபைத்தலைவர் எஸ்.ஞானப் பிரகாசத்திடம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

குறித்த சந்தை கடந்த காலங்களில் வாராந்த சந்தையாகக் காணப்பட்ட போதிலும் நாட்டில் ஏற்பட்டு வந்த யுத்த சூழ்நிலையின் காரணமாகத் தினச் சந்தையாக மாறியது. சுமார் 10 வருடங்களுக்கு மேலாகத் தினச் சந்தை வியாபாரம் இடம் பெற்று வந்தது.

தற்போது மன்னார் நகர சபை அமைக்கப்பட்ட நிலையில் குறித்த சந்தையை வாராந்தச் சந்தையாக மாற்றுமாறு மன்னார் வர்த்தக சங்கம் மன்னார் நகர சபையிடம் வேண்டுகோள் விடுத்திருந்தது.

**மன்னார் நகரசபை வியாபாரிகளுக்கு குறித்த சந்தையை விட்டு வெளியேறப் பல தடவை கால அவகாசம் வழங்கி இருந்தது. எனினும் அவர்கள் வெளியேறவில்லை. இந்த நிலையில், இம்மாதம் 16 ஆம் திகதிக்கு முன் வெளியேறக் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.**

இந்த நிலையில் மன்னார் நகரசபை, குறித்த வியாபாரிகளுக்குச் சந்தையை விட்டு வெளியேறப் பல தடவை கால அவகாசம் வழங்கி இருந்தது.

எனினும் அவர்கள் வெளியேறவில்லை. இந்த நிலையில், இம்மாதம் 16 ஆம் திகதிக்கு முன் வெளியேறக் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (க-12)



கிளிநொச்சி மாவட்ட மாதர் அபிவிருத்தி அமைப்பின் அலுவலகம் பரந்தன் உமையாள்புரம் பொது நோக்கு மண்டபத்தில் மிக அண்மையில் திறந்து வைக்கப்பட்டபோது அமைப்பின் உறுப்பினர்கள் விருந்தினர்களுடன் காணப்படுகின்றனர். (121)

# காற்றில் பறந்தது வாக்குறுதி தொடரும் அவலத்தில் வைத்தியசாலை

நெடுங்கேணி,பெப்.14

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வாக்குறுதியளிக்கப்பட்டதன் பிரகாரம் நெடுங்கேணி வைத்தியசாலை எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லையென மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நெங்கேணிப் பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த 24 ஆம் திகதி இடம் பெற்றது.

இதற்கு நாடளுமன்ற உறுப்பினர் உனைஸ் பாரூக் தலைமை வகித்தார்.

இங்கு நெடுங்கேணி வைத்தியசாலை நிலவும் மருத்துவர் பற்றாக்குறை தொடர்பாக ஆராயப்பட்டது. இங்கு தினமும் 300 இற்கு மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சைக்கென வருகின்றனர்.

ஆனால் ஒரு மருத்துவர் மட்டுமே கடமையில் உள்ளார். இதனால் நோயாளர்கள் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

இது தொடர்பாக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. செட்டிகுளம் வைத்தியசாலை மேலதிக வைத்தியர்கள் உள்ளதால் அவர்களில் ஒருவர் சுழற்சி முறையில் நெடுங்கேணி வைத்தியசாலையில் கடமைபுரிவதற்குரிய ஒழுங்குகள் சுகாதாரத் திணைக்களத்தோடு தொடர்பு கொண்டு ஏற்படுத்திக் கொடுக்கப்படுமென தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இன்றுவரை எதுவுமே நிகழவில்லை. இதனை நெடுங்கேணி வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும் உறுதி செய்துள்ளனர். (க-435)

# பாடசாலைப் பைகள்

*கிளிநொச்சி, பெப்.14*

*கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திலுள்ள தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் உத்தியோகத்தர்களால் பளைப் பிரதேச செயலகப்பிரிவில் 79 மிக வறிய மாணவருக்கு கடந்த வியாழக்கிழமை பாடசாலைப் பைகள் வழங்கப்பட்டுள்ளன.*

*மாவட்டச் செயலகத்தின் அனர்த்த முகாமைத்துவப் பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற பாடசாலைப் பைகளே இவ் விதம் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.*

*அண்மையில் பொது மக்கள் மீளக்குடியமர்ந்த கிளாலிக் கிராமத்தில் 37 பேருக்கும், பளைப் பிரதேசத்தில் 42 பேருக்கும் இவ் விதம் வழங்கப்பட்டன*

*தனிப்பெற்றோரைக் கொண்ட, பெற்றோரை இழந்த மிக வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களே இவ்விதம் தெரிவு செய்யப்பட்டு பாடசாலைப் பைகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-121)*

# நிவாரண நன்கொடை

கிளிநொச்சி, பெப்.14

கிளிநொச்சி, கரைச்சி பிரதேச செயலகப் பிரிவின் மரப்பாலத்தடி கனகாம்பிகைக் குளத்தைச் சேர்ந்த ஒருவருக்கு தற்செயல் நிவாரண நன்கொடையாக 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட உள்ளது.

வட மாகாண சமூக சேவைகள் திணைக்களம் இதற்கான நிதியைக் கரைச்சிப் பிரதேச செயலருக்கு அனுப்பி வைத்துள்ளது. எதிர்பாராத விபத்தினால் வீடு அழிவுற்ற ஒருவருக்கு இக் கொடுப்பனவை வழங்கி வைக்கக் கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் நடவடிக்கை எடுத்துள்ளார். (க-121)

# வங்கியில் வைப்பிலிட்ட பணத்துக்கு வட்டி வழங்கப்படாத விநோதம்

முல்லைத்தீவு,பெப்.14

முல்லைத்தீவு கூட்டுறவுச் சங்கமொன்றின் மூலம் வங்கியில் இடப்பட்ட பணத்துக்கு மூன்று வருடங்களாக வட்டி எதுவும் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இதன் உண்மைத் தன்மையை வங்கியினர் பகிரங்கப்படுத்த வேண்டுமெனக் கேட்டுள்ளனர்.**

முல்லைத்தீவு மாவட்டம் கற்சிலை மடுவைச் சேர்ந்த தவபிரதம்பிராசா ரவிச்சந்திரன். இவர் 2008 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முல்லைத்தீவு மாவட்டச் சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் 70 ஆயிரம் ரூபாவை நிலையான வைப்பில் இடுமாறு வங்கியில் செலுத்தியதாகவும் ஆனால் தற்போது அதற்கு வட்டி எதுவும் வழங்கப்படாது முதலை மட்டுமே சங்கத்தினால் வழங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சிக்கனக் கடன் உதவிக் கூட்டுறவுச் சங்கத்தினரிடம் கேட்ட போது அசாதாரண சூழ்நிலை காரணமாக வங்கியால் வட்டி கொடுக்கப்படவில்லையென தெரிவிக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

குறித்த வங்கியுடன் இது பற்றி தொடர்புகொண்டு கேட்டபோது இப்படி நடப்பதற்கு எந்தவிதக் காரணமுமில்லையெனத் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

இவ்வாறு இன்னும் பலர் பணத்தை வைப்பிலிட்டுள்ளதால் இதன் உண்மைத் தன்மையை வங்கியினர் பகிரங்கப்படுத்த வேண்டுமெனக் கேட்டுள்ளனர். (க-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் பஸ்களின் வேலைநிறுத்தம் அன்றாட கருமங்களில் பெரும் பாதிப்பு





எரிபொருள் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து தனியார் பஸ்கள் நேற்று திங்கட்கிழமை முற்று முழுதாக பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக நேற்று அன்றாடக் கருமங்களை மேற்கொள்வதில் மக்கள் பெரும் பாதிப்படைந்தனர்.

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளுக்குமான சேவைகள் எதுவுமே இடம்பெறவில்லை.

இதன் காரணமாக யாழ். நகரில் இருந்து தூர இடங்களுக்குச் செல்லும் பயணிகளும் ஏனைய இடங்களுக்கு அவசர தேவைகளுக்காகச் செல்வோரும் பாடசாலைகள் மற்றும் அலுவலகங்களுக்குச் செல்வோரும் பெரும் பாதிப்படைந்தனர்.

அது மட்டுமன்றி நோயாளர்கள் பெரும் அவலங்களை நேற்று எதிர் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பணிப் புறக்கணிப்பால் தனியார் பஸ் தரிப்பிடம் நேற்று வெறிச்சோடிக் காணப்பட்டது.

தனியார் சேவைகள் இடம்பெறாத நிலையில் இ.போ.ச. பஸ்களில் இடம் பிடிப்பதற்கு மக்கள் நேற்று முண்டியடித்துக் கொண்டிருந்தனர். பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே நேற்று இ. போ. ச. தனது சேவைகளைவழங்கிக்கொண்டிருந்ததையும் காண முடிந்தது.

இவ்வாறு நெருக்கடிகளுக்கு மத்தியில் இ.போ.சவின் சேவை இடம்பெற்றமையால் பெரும் எண்ணிக்கையான பயணிகளை ஏற்றிச் செல்ல முடியாத நிலைமை காணப்பட்டது.

இதனால் ஒவ்வொரு வழித்தடத்திலும் பெரும் எண்ணிக்கையில் பயணிகள் பஸ்ஸுக்காகக் காத்திருந்த நிலையில் பெரும் எண்ணிக்கையான பயணிகள் பஸ் கிடைக்காத நிலையில் தமது வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர்.

இதனால் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களும் மாணவர்களும் உரிய நேரத்துக்குச் செல்ல முடியாத நிலைமையும் காணப்பட்டது. இதனால் பாடசாலைகளில் மாணவர்களின் வரவில் தளர்வு நிலைமை ஏற்பட்டிருந்ததாகவும் பாடசாலை அதிபர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்திருந்தார்.

தீவுப் பகுதிக்கு மற்றும் வன்னிப் பகுதிகளுக்குச் செல்வதற்குக் காத்திருந்த அரச உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் போக்குவரத்து நெருக்கடியால் பெரும் சிரமங்களை எதிர் கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் இலங்கைப் போக்குவரத்துச் சேவையின் பஸ் மீது இனம் தெரியாதவர்கள் பல்வேறு இடங்களிலும் கல் வீச்சுக்ள மேற்கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் இலங்கை போக்குவரத்துச் சபை மேலதிக சேவைகள் நடத்துமா என்று தொடர்பு கொண்டு கேட்டபோது இதற்கு மேலதிக பஸ்கள் தம்மிடம் இல்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு நேற்றுக் காலையில் பஸ்கள் வந்த சேர்ந்தாலும் மாலையில் இங்கிருந்து எந்தச் சேவையும் நடத்தப்படமாட்டாது என்று தெரிவிக்கப்பட்டது.

(ம-7-8-9-17-38-86-135-130)

## போக்குவரத்துப் பொலிஸுக்கு 'சலூட்' அடித்து தப்பினார்

### பொலிஸார் தமக் குள்ளேயே சிரித்து விட்டு பணியைத் தொடர்ந்தனர்

வாகனச் சான்றிதழ் பரிசோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போக்குவரத்துப் பொலிஸாருக்கு சலூட் அடித்துவிட்டு மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர் ஒருவர் நழுவிச் சென்றார். நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு யாழ்.முற்றவெளிப் பகுதியில் இடம்பெற்றது.

வாகன சான்றிதழ் பரிசோதனையில் ஈடுபட்ட போக்குவரத்துப் பொலிஸாருக்கு சலூட் அடித்துவிட்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றார். ஞாயிற்றுக்கிழமை இரவு முற்றவெளியில் பொலிஸார் வாகனங்களை வழிமறித்து வாகனங்களுக்குரிய சான்றிதழ்களை பரிசோதிக்கும் பணியில் ஈடுபட்டனர். இந்த வேளையில் அதிவேகத்தில் வந்த மோட்டார் சைக்கிளை பொலிஸார் வழிமறித்தார்.

இதன்போது மோட்டார் சைக்கிளில் வந்த அந்த இளைஞர் பொலிஸாருக்கு சலூட் அடித்துவிட்டுத் தப்பிச் சென்றார். பொலிஸார் தமக் குள்ளேயே சிரித்து விட்டு பணியைத் தொடர்ந்தனர். (ம-17)

## பதுளையில் இருந்து யாழ்ப்பாணம் வந்த தனியார் பஸ் மீது தாக்குதல்

தனியார் பஸ்கள் நேற்று திங்கட்கிழமை முற்று முழுதாகப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்ட நிலையில் பதுளையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த தனியார் பஸ் மீது நேற்றுக் காலை கொடிகாமம் பஸ் நிலையத்தில் வைத்துக் கல் வீச்சு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தனியார் பஸ்கள் சேவை புறக்கணிப்புச் செய்திருந்த நிலையில் பதுளையில் இருந்து குறித்த பஸ் யாழ்ப்பாணத்துக்கான சேவையில் ஈடுபட்டிருந்தது.

இந்த நிலையில் வீதிகளில் பஸ்ஸுக்காகக் காத்திருந்த பயணிகள் குறித்த பஸ்களை வழிமறித்து பயணம் செய்ய முற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ம-17)

## மணியந்தோட்டத்தில் 40 வீடுகள் பயனாளிகளிடம் கையளிப்பு



மணியந்தோட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்ட 40 வீடுகள் கையளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் முற்பகல் 10 மணிக்கு நடைபெற்றது.

தலா 5 லட்சம் ரூபா பெறுமதியான இந்த வீட் டுத்திட்ட கிராமத்துக்கு 'லிப்றா' கிராமம் எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இத்தாலியைச் சேர்ந்த லிப்றா என்பவரின் நிதியுதவியுடன்அமலமரித் தியாகிகள் சபையின் மேற் பார்வையில் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

வீடுகளைப் பயனாளி களிடம் கையளிக்கும் நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், நல்லூர் பிரதேச செயலர் செந்தில்நந்தனன், அமலமரித் தியாகிகள் சபையின் மாகாண முதல்வர் அருட்தந்தை போன் நட்சத்திரம் அடிகளார் மற்றும் ஈ.பி.டி.பி. அமைப்பின் பிரமுகர்கள், மனிம்புரி கிராம அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-135)



காரைநகர் கசூரினா கடற்கரைக்கு வரும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. விடுமுறை நாள்களிலும் வார இறுதி நாள்களிலும் நூற்றுக்கணக்கானோர் இங்கு வருகை தருகின்றனர். (ம-250)

## மண்ணெண்ணெய் விலை உயர்வு விவசாயிகளுக்கு பெரும் பாதிப்பு

யாழ்ப்பாணம், பெப்.14

மண்ணெண்ணெய் விலை உயர்வால் விவசாயிகள் பெரும் பாதிப்பு அடைந்துள்ளனர்.

தமது தொழிலைக் கைவிட வேண்டிய இக்கட்டு நிலைக்கு இவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

குடாநாட்டில் தந்போது ஒரு லீற்றர் மண்ணெண்ணெயின் விலை 106.60 சதமாகும்.

இந்தத் திடீர் விலை அதிகரிப்பால் விவசாய நடவடிக்கைகளில் எதிர் காலத்தில் மிகவும் வீழ்ச்சியடையலாம் என விவசாயிகள் அதிர்ச்சி தெரிவித்துள்ளனர்.

குடாநாட்டுச் சந்தையில் மரக்கறி வகைகளின் விலைகள் தற்போது மிகக் குறைந்த நிலையில் உள்ளன.

இந்த மரக்கறி விலைகளில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியும் விவசாயிகளிடையே பெரும் நட்டத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை, மண்ணெண்ணெய் லீற்றர் 35 ரூபாவாக உயர்த்தப்பட்டதால் எதிர் காலத்தில் விவசாய நடவடிக்கையில் ஈடுபடுவதில் விவசாயிகள் அதிக அக்கறை காட்டுவதற்கு தயக்கம் காட்டும் நிலைமையும் ஏற்பட் டுள்ளது.

தோட்டம் ஒன்றுக்கு ஒரு இறைப்புக்கு மட்டும் 10 லீற்றர் முதல் 15 லீற்றர் வரையானமண்ணெண்ணை தேவை. இதன் பெறுமதி 1,599 ரூபாவாகும்.

> மண்ணெண்ணெய் லீற்றர் 35 ரூபாவாக உயர்த்தப்பட்டதால் எதிர் காலத்தில் விவசாய நடவடிக்கையில் ஈடுபடுவதில் விவசாயிகள் அதிக அக்கறை காட்டாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக உள்நாட்டு உற்பத்தியில் தளம்பல் நிலை தோன்றும்

இவ்வாறு மண்ணெண்ணெயின் விலை அதிகரிப்பால் குடாநாட்டு விவசாய நடவடிக்கைள் தற்போது மிகவும் பின்னடையக் கூடிய சாத்தியம் உள்ளது.

தென்பகுதியில் இருந்து கூடுதலாக மரக்கறிகள் எடுத்து வரப்படுவதால் மரக்கறிகளின் விலைகளில் பெரும் சரிவு ஏற்பட்டுள்ளமை முக்கிய காரணியாக உள்ளது. (ம-17 - 86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம சேவையாளர் பதவிகளில் குடாநாட்டில் 120 வெற்றிடங்கள்

## உடன் நிரப்புமாறு இணையம் அமைச்சருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், பெப்.14

யாழ்.மாவட்டத்தில் தற்போது கிராம சேவையாளர் பதவிகளில் 120 வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. இதனால் மீளக் குடியமர்ந்த மக்கள் உட்படப் பலர் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். எனவே இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு கோரிக்கை விடுத்து உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்னவுக்கு யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

**யாழ்ப்பாணம் மாவட்டத்தின் கிராமசேவை உத்தியோகத்தர் மொத்த ஆளணி 435 இல் 120 பதவிகள் மிக நீண்டகாலமாக நிரப்பப்படாது வெற்றிடமாகவுள்ளன**

இணையத்தின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் அனுப்பி வைத்துள்ள அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதாவது:

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் கிராமசேவை உத்தியோகத்தர் மொத்த ஆளணி 435 இல் 120 பதவிகள் மிக நீண்டகாலமாக நிரப்பப்படாது வெற்றிடமாகவுள்ளமை பற்றித் தங்கள் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறோம்.

வெற்றிடமாகவுள்ள உத்தியோகத்தர்களின் பிரதேசங்களை சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் கையாள்வதால் அவர்களது வேலைப்பளு அதிகரிப்பதுடன் அவர்களது செயற்றிறனும் பாதிக்கப்படுகிறது.

இந்த நிலை வெற்றிடமாகவுள்ள பிரதேசங்களின் மக்களை மட்டுமன்றி இந்தப் பகுதிகளின் கடமைகளைக் கவனிக்கும் உத்தியோத்தர்களின் பகுதி களின் மக்களுக்கும் கணிசமான அசௌகரியங்களை உண்டாக்குகின்றது. மீள்குடியேற்றப் பகுதிகளில் இந்தப் பிரச்சினை மிகவும் கடுமையானதாக உள்ளது.

கடந்த 30 ஆம் திகதி நடைபெற்ற இணையத்தின் மாதாந்தக் கூட்டத்தில் இந்த விடயத்தை தங்கள் கவனத்துக்குக் கொண்டு வந்து இந்த வெற்றிடங்களை மிக விரைவில் நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்- என்றுள்ளது. (த)

## சாவகச்சேரியில் குருதிக்கொடை



தென்மராட்சி,பெப்.14

சாவகச்சேரி புனித லிகோரியார் தேவாலய இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் குருதிக் கொடை வழங்கும் நிகழ்வு தேவாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

தேவாலய பங்கைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளுடன் இவர்களது பெற்றோர்களுமாக 50 இற்கும் மேற்பட்டோர் குருதிக் கொடையை வழங்கினர்.

யாழ். போதனா வைத்திய சாலை குருதி வைப்பகத்தினர் வைத்தியசாலையில் குருதி பற்றாக்குறையாக உள்ளதாக விடுத்த வேண்டுகோளை அடுத்து மன்றத்தினர் விடுத்த அழைப்பை ஏற்று இவர்கள் குருதியைக் கொடை வழங்கினர்.

யாழ். போதனா வைத்திய சாலைக் குருதி வைப்பக வைத்திய அதிகாரி வைத்தியக் கலாநிதி என். பிரதீபன் தலைமையிலான குருதி வைப்பக உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு கொடையாளர்களிடம் இருந்து குருதியை சேகரித்துக் கொண்டனர்.

சாவகச்சேரி புனித லிகோரியார் தேவாலய இளைஞர் மன்றத்தினர் வருடாந்தம் 2 தடவைகள் குருதி வைப்பகத்திற்கு குருதி வழங்கி வருவதும், இதனால் சிறந்த குருதிக் கொடையாளர் எனும் விருது இந்த மன்றத்திற்கு வழங்கப் பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ம-9-14)

## இலவச மருத்துவ முகாம்

**150 இற்கும் மேற்பட்ட கண்பார்வை குறைந்தவர்களுக்கு இலவச கண் பரிசோதனை செய்து மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.**

பண்டத்தரிப்பு, பெப்.14

வலிகாமம் தென்மேற்கு இளைஞர் கழக சம்மேளனமும் மானிப்பாய் பரிஷ் லியோ கழகமும் இணைந்து இலவச மருத்துவ முகாம் ஒன்றை நேற்று முன்தினம் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் ஆண்கள் விடுதியில் நடத்தின.

வலிகாமம் தென்மேற்கு இளைஞர் கழக சம்மேளன தலைவர் ச.செந்தில்குமரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு விருந்தினர்களாக இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர் ஜே.ஏ.யேசுதாஸ், மானிப்பாய் லியோ கழக ஆலோசகர் பேராசிரியர் சாந்தன், தலைவர் அ.ஜெபநேசன், இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் பே.சுபாகர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இந்த இலவச மருத்துவ முகாமில் பயன்பெறவென நூற்றுக்கணக்கானோர் வருகை தந்திருந்தனர். இதில் 150 இற்கும் மேற்பட்ட கண்பார்வை குறைந்தவர்களுக்கு இலவச கண் பரிசோதனை செய்து மூக்குக் கண்ணாடிகள் வழங்கப் பட்டன.

நூற்றுக்கும் அதிகமானோர் ஏனைய நோய்களுக்கான சிகிச்சைகளை பெற்றுச் சென்றமையையும் காணமுடிந்தது. (ம-130)

## பண்ணை வீதிக்குக் 'காப்பெற்'




யாழ்ப்பாணம், பெப்.14

யாழ்.முற்றவெளி தனியார் பஸ் தரிப்பு நிலையத்துக்கு முன்பாகச் செல்லும் பண்ணை வீதி 'காப்பெற்' வீதியாகப் புனரமைக்கப்படுகிறது.

நேற்றுக் காலை முதல் இந்த வீதியின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்குக் கடுமையாகச் சேதமுற்றுக் காணப்பட்ட இந்த வீதி கடந்த வாரத்தில் ஜனாதிபதி வருகைக்காக தார்க் கலவை மூலம் சீர்செய்யப்பட்டது. தற்போது இந்த வீதிக்கு முழுமையாகக் 'காப்பெற்' போடப்பட்டு வருகின்றது. (த-17)

## டெங்குக் கட்டுப்பாட்டு செயற்பாடு மும்முரம்

காரைநகர், பெப்.14

காரைநகர் பிரதேசத்தில் டெங்கு நுளம்பு பெருகுவதைத் தடுக்கும் நோக்குடன் காரைநகர் பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் தலைமையிலான குழுவினர் கடந்த இரு வாரங்களுக்கு மேலாக தொடர் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

காரைநகர் பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர்கள், மருத்துவ மாது, சுகாதாரத் தொண்டர்கள், கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம மட்டக் குழுக்களின் தலைவர்கள் ஆகியோர் அடங்கிய குழுவினர் வீடுகள் பொது இடங்கள், வர்த்தக நிலையங்கள் என்பனவற்றுக்கு நேரடியாகச் சென்று பரிசோதனை மேற்கொள்வதுடன் நுளம்பு பெருகும் இடங்களை அடையாளம் கண்டு அவற்றைத் துப்புரவு செய்யுமாறும் அறிவுறுத்தி வருகின்றனர்.

இந்தக் குழுவினர் இதுவரை காரைநகரில் ஆயிரத்து 328 வீடுகளுக்கு நேரடியாகச் சென்று பரிசோதனை மேற்கொண்டதுடன் நுளம்புக் குடம்பி கண்டுபிடிக்கப்பட்ட ஐந்து இடங்களில் அதன் உரிமையாளர்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்தனர். அத்துடன் நுளம்பு பெருகும் இடங்களை துப்புரவு செய்யுமாறு அறிவுறுத்தல் வழங்கியும் இரண்டாம் முறை பார்வையிடும் போது துப்பு ரவு செய்யப்படாத ஒருவர் மீதும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ம-250)

## யாழ். ஆஸ்பத்திரிக்குள் புதிய போக்குவரத்துப் பாதை

யாழ்ப்பாணம், பெப்.14

யாழ்.போதனா வைத்திய சாலையில் விடுதிகளுக்குச் சென்று வருபவர்களுக்கு இலகுவாக மேலும் ஒரு சிமெந்துப் பாதை அமைக்கப்படுகிறது.

சத்திரசிகிச்சைப் பிரிவுக்கும் அதனை அண்மித்துள்ள தீவிர சிகிச்சைப் பிரிவுக்கும் இடையிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாதை தண்ணீர்த் தாங்கி, புதிய ஜனறேற்றர் நிறுவப்பட்டுள்ள இடம் என்பவற்றை அண்மித்து நான்கு மாடிக் கட்டடத் தொடருக்கு அருகாகச் சென்று நிறைவடைகிறது.

பருத்தித்துறை வீதிப் பக்கமாக இருந்துவரும் பாதை நான்கு மாடிக் கட்டடத் தொடருக்கு முன் பாகச் சந்திக்கும் இடத்தில் கழிவகற்றும் குழாய், அமைப்பு வேலை நடைபெறவுள்ளது.

இதனால் அந்தப் பகுதியினூடாக வருபவர்கள் விடுதிகளுக்கு வரமுடியாத நிலை ஒன்றரை மாதங்களுக்கு ஏற்படும்.

இதனால் அவ்வழியே வருபவர்களும் அதனைத் தவிர்த்து ஏனைய வழிகளைப் பயன்படுத்தவுள்ளதால் விடுதிகளுக்குச் செல்லும் ஒரேயொரு பாதை நெருக்கடிக்குள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

நோயாளர்களை விடுதிகளுக்குக் கொண்டு செல்ல சத்திரசிகிச்சைப் பிரிவுகளுக்குக் கொண்டு செல்ல எனப் பல வகைகளில் இடையூறு ஏற்படும் நிலை காணப்படுகிறது.

இவற்றைத் தவிர்க்கும் பொருட்டு அனைவரும் சென்று வருவதற்கு இலகுவாகவே இந்தப் புதிய பாதை அமையவுள்ளது. (ம-4)

## மாணவியைக் கடத்திய இருவருக்கும் மறியல்

**மட்டுவிலில் வானில் ஏறிச் சென்ற பெண்ணை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்த முயன்ற மூவரையும் நிபந்தனையுடனான பிணையில் செல்ல நீதி மன்றில் உத்தரவிடப்பட்டது.**

தென்மராட்சி, பெப்.14

கொடிகாமம் கெற்பேலிப் பகுதியில் ஓட்டோவில் மாணவியைக் கடத்திய சம்பவத்துடன் தொடர்புடைய இருவரையும் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப் பட்டது.

பாடசாலை விளையாட்டுப் போட்டியைப் பார்த்துவிட்டு வீடு திரும்பிய மாணவியை சன நடமாட்டமில்லாத பகுதியில் ஓட்டோவில் கடத்திய மந்துவில் கிழக்கு, பாலாவி தெற்கு ஆகிய இடங்களைச் சேர்ந்த இருவரை கொடிகாமம் பொலிஸார் கைது செய்து கடந்த சனிக்கிழமை பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை முன்னிலையில் முற்படுத்தினர்.

இந்த இருவரையும் நாளை மறுதினம்வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, மட்டுவிலில் வானில் ஏறிச் சென்ற பெண்ணை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்த முயன்ற மூவரையும் நிபந்தனையுடனான பிணையில் செல்ல நீதி மன்றில் உத்தரவிடப்பட்டது.

செவ்வாய்க்கிழமைகளில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திலும் வெள்ளிக்கிழமை நீதிமன் றிலும் கையொப்பமிடப்பட வேண்டுமென்ற நிபந் தனையுடன் காசுப் பிணை யிலும் ஆட்பிணையிலும் செல்ல உத்தரவிடப் பட்டது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடமாற்றம் செய்ய இடைக்காலத் தடை

திருகோணமலை,பெப்.14

திருகோணமலைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட கலால் அத்தியட்சகர் ஒருவரின் இடமாற்றத்தை இடை நிறுத்துவதற்கான இடைக்கால உத்தரவை உயர் நீதிமன்றம் வழங்கியுள்ளது.

அடிப்படையற்ற குற்றச்சாட்டுகளின் காரணமாக தன்னை திருகோணமலைக்கு இடமாற்றம் செய்ததாக தெரிவித்து கலால் அத்தியட்சகர் நடராஜா சுசாதரன் தாக்கல் செய்திருந்த மனு மீதான வழக்கிலேயே நீதியரசர்கள் கே.ஸ்ரீபவன், எஸ்.இமாம் ஆகியோரடங்கிய குழாம் இந்த இடைக்கால தடை உத்தரவை அளித்துள்ளது.

கலால் ஆணையாளர் நாயகம் ஜி.ஜி.எம்.வி. ஹப்பு ஆரச்சி, கலால் ஆணையாளர் திருமதி பி.டபிள்யூ. ராஜபக்ஷ, கிழக்கு மாகாண கலால் உதவி ஆணையாளர் டி.எஸ். வசந்தசிறி, பொதுச்சேவை ஆணைக்குழு அங்கத்தவர்கள், சட்டமா அதிபர் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கு எதிர்வரும் 17ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ச)

# மோப்ப நாய் உதவியால் திருடர்கள் சிக்கினர்



மட்டக்களப்பு,பெப்.14

மட்டக்களப்பில் அண்மைக்காலமாக பகல் வேளைகளில் வீடுகளை உடைத்து திருட்டுச் சம்பவம் இடம் பெற்று வந்த நிலையில் பொலிஸாரின் மோப்பநாய் ஊடாக திருடர்களைப் பிடிக்கும் நடவடிக்கையின்போது இரண்டு திருடர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நபர்களிடம் இருந்து நகை, பணம் உட்பட பல்வேறு பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு, பூம்புகார் பகுதியில் இடம்பெற்ற திருட்டைத் தொடர்ந்தே மட்டக்களப்பு பொலிஸ் நிலைய தலைமையகப் பொறுப்பதிகாரியின் அறிவுறுத்தலின் பேரில்,மட்டக்களப்புபொலிஸ் நிலைய சிறு குற்றப்புலன் விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி ரி.சாந்தகுமார் தலைமையிலான குழு விசாரணைகளை மேற்கொண்டது.

கடந்த 7 ஆம் திகதி பூம்பூகார் வீதியில் வைத்து சந்தேகத்தின் பேரில் இருவர் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டனர். வீட்டு யன்னல்களைத் திறப்பதற்கு பயன்படுத்தப்படும் குறடு, ஸ்கூட்ரைவர் போன்றவை இவர்களிடம் காணப்பட்டதனைத் தொடர்ந்து மேலதிக விசாரணைக்குட்படுத்தியதில் குறித்த இருவரும் தாம் இந்தத் திருட்டுக்களில் ஈடுபட்டதை ஒப்புக் கொண்டுள்ளனர்.

தொடர்ந்து மேற் கொண்ட விசாரணையினூடாக மட்டு. நகர் பகுதியல் ஏழு வீடுகளையும், கல்லடியில் நான்கு வீடுகளையும் பகலில் யன்னல்களினூடாகத் திறந்து திருடியுள்ளதை ஒப்புக்கொண்டுள்ளதுடன் திருடப்பட்ட பொருள்களைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்த நபர்களை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதிபதி கருணாகரன் முன்னிலையில் கடந்த 8 ஆம் திகதி முன்னிலைப் படுத்தியபோது எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு இட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# இரவு நேர உணவகங்களை திறக்க நடவழக்கை எடுக்குக!

கண்டி, பெப்.14

ஹற்றன் நகரில் இரவு நேர உணவகங்களை மீண்டும் திறப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்என்று நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி.திகாம்பரம் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

இந்தவிடயம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:


மலையகத்திலுள்ள முக்கிய நகரங்களில் ஒன்றான ஹற்றனில் நீண்ட நாள்களாக இரவு நேரங்களில் உணவகங்கள் திறக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகள் நடப்பதால் பொதுமக்கள் பல்வேறு வகையில் பயன் பெற்று வருகின்றனர்.

ஹற்றன் ரயில் நிலையத்தின் ஊடாக இரவு நேர ரயில் போக்குவரத்துச் சேவைகளும் இடம்பெறுகின்றன. இத்தகைய சந்தர்ப்பங்களில் ஹற்றனில் இரவு நேரங்களிலும் அதிகாலை வேளையிலும் மக்கள் நடமாட்டம் காணப்படுகின்றமை வழமையாகும். இவர்கள் தமது உணவு தேவைகளை பெரும்பாலும் ஹற்றனிலுள்ள இரவு உணவகங்களிலேயே பூர்த்தி செய்கின்றனர்.

இவ்வாறு பொதுமக்களுக்கு நன்மை பயக்கக் கூடிய இரவு நேர உணவகங்களை தான்தோன்றித்தனமாக மூடுமாறு உத்தரவிடுவதற்கு எவருக்கும் அதிகாரம் கிடையாது. இந்த உணவகங்கள் சட்ட திட்டங்களை மீறி இருக்குமானால் இந்த உணவகங்களுக்கெதிராக சம்பந்தப்பட்ட தரப்புக்கள் சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பது வரவேற்கத்தக்க விடயமாகும்.

இதைத் தவிர்த்து தனிப்பட்ட காரணங்களுக்காக சட்டத்தைக் கையில் எடுத்துக்கொள்வதற்காக மக்கள் அரசியல்வாதிகளுக்கு அதிகாரம் வழங்கவில்லை என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஹற்றன் நகரிலுள்ள உணவகங்களில் மனித பாவனைக்குதவாத உணவு விற்பனை செய்யப்பட்டிருந்தால் ஹற்றன் சுகாதார பிரிவினர் ஏன் இது வரை நடவடிக்கை எடுக்க வில்லை?

ஹற்றன் நகரில் முஸ்லிம் சமூகத்துக்கும், தமிழ் சமூகத்துக்கும் இடையில் குரோத மனப்பாங்கை ஏற்படுத்தி அதன் மூலம் ஏற்படப் போகின்ற பாதகமான விளைவுகளுக்கு சம்பந்தப்பட்ட தரப்புகள் பொறுப்புக்கூற வேண்டிய நிலைமையும் ஏற்படும் - என்றார். (ச)



அம்பாறை மாவட்டத்தில் தற்போது சீரான காலநிலை காணப்படுவதால் கரையோரப் பிரதேசங்களில் பெரும்போக நெல் அறுவடை மேற்கொள்ளப் படுகின்றது.

## புதையல் தோண்டிய அறுவர் கைது

திருகோணமலை,பெப்.14

திருகோணமலை - உப்பு வெளி - பகுதியில் புதையல் தோண்டிய அறுவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப் பட்ட இந்த நபர்கள் பெரிய குளம் பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களிடம் இருந்து மாணிக்கக்கல் ஒன்றும் ஏனைய சில உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் உப்பு வெளி பொலிஸாரால் திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (ச)

# கிழக்கு மாகாணத்துக்கு 4 ஆயிரம் வீடுகள்

மட்டக்களப்பு,பெப்.14

இந்திய அரசின் நிதி உதவித்திட்டத்தின் கீழ் கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் போரினால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்தவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்துக்கு 4 ஆயிரம் வீடுகள் வழங் கப்பட்டுள்ளன என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை இந்திய தூதருக்கும் முதலமைச்சருக்குமிடையில் இது தொடர்பான முக்கிய கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. இதன்போதே 4ஆயிரம் வீடுகள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதில் 3ஆயிரம் வீடுகளை அமைப்பதற்கான நிதியினை நேரடியாக பயனாளிகளிடம் ஒப்படைத்து அவர்களினால் குறித்த வீடுகள் நிர்மாணிக்கப்படும். ஏனைய 1000 வீடுகளையும் இந்திய அரசு நிர்மாணித்துக் கொடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வீட்டுத் திட்டங்களை கண்காணிப்பதற்காக கிழக்கு மாகாண முதலமைச்சர் தலைமையிலான கிழக்கு மாகாண சபை ஒரு கட்டுப்பாட்டுக் குழுவினை நியமித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ச-21)

# சாப்புச்சட்டம் அவசியம் நோர்வூட்டில் வலியுறுத்து

நோர்வூட், பெப். 14

நூற்றுக்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்களைக் கொண்டுள்ள நோர்வூட் நகரிலும், அதனை அண்மித்த தோட்டப்புற வர்த்தக நிலையங்களிலும் சாப்புச்சட்டத்தை முறையாக நடைமுறைப்ப டுத்துமாறு வர்த்தக ஊழியர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

கடந்த சில வருடங்களுக்கு முன் இந்தச் சட்டம் நடைமுறையில் இருந்த போதும் தற்போது அது செயலிழந் துள்ளது.வாரத்தில் ஒரு நாளிலாவது தங்களின் குடும்பத்துடன் நாள் முழுதும் இருந்து தமது தேவைகளைக் கவனிக்க இந்த சாப்புச்சட்ட நடைமுறை உதவும் என்று அவர்கள் தெரிவிக்கின்றனர். (ச)

# மட்டக்களப்பில் சடலம் மீட்பு

மட்டக்களப்பு,பெப்.14

மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலை சிவன் கோயிலுக்கு பின்னால் உள்ள மரமொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் முதியவர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பொது மக்கள் வழங்கிய தகவல் ஒன்றை அடுத்து பட்டிப்பளை பொலிஸார் நேற்று திங்கட்கிழமை காலை இந்தச் சடலத்தை மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட சடலத்தில் அடிகாயங்கள் காணப்படுவதால் கொலை செய்யப்பட்டு இவர் தூக்கில் தொங்கவிடப் பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

களுவாஞ்சிக்குடி மரண விசாரணை அதிகாரி சடலத்தின் மீதான மரண விசாரணையை மேற்கொண்டுள்ளதுடன், பட்டிப்பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனனர். (ச)

## ஆசிரியர் ஆலோசகர்களுக்கு நேர்முகப் பரீட்சை

திருகோணமலை,பெப்.14

திருகோணமலை மாவட்டத்திலுள்ள வலயக்கல்வி அலுவலகங்களுக்கு ஆசிரியர் ஆலோசகர்களை நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளது.

கடந்த வருடம் நடத்தப்பட்ட எழுத்துமூலப் போட்டிப் பரீட்சையில் கலந்து கொண்டவர்களே இந்த நேர் முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் நடத்தப்படும் இந்த நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் காலை 9 மணிதொடக்கம் கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் இடம்பெறவுள்ளது. திருகோணமலை, கிண்ணியா, மூதூர், கந்தளாய் ஆகிய வலயக்கல்வி அலுவலகங்களைச் சேர்ந்தவர்களே இந்த நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்ளவுள்ளனர். (ச)

### நாடு, நகர சட்டமூலம்:

# கிழக்கு மாகாண சபை விசேட அமர்வு ஒத்திவைப்பு

நாடு மற்றும் நகரத் திட்டமிடல் திருத்தச் சட்ட மூலம் சட்ட விரோதமானது என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் எதிர்த்துள்ளனர்.

மட்டக்களப்பு,பெப்.14

எதிர்க்கட்சி உறுப்பினர்களின் குழப்ப நிலையை யடுத்து கிழக்கு மாகாண சபையில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற விசேட அமர்வு எதிர்வரும் 28ஆம் திகதி வரை ஒத்திவைக் கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட்ட நாடு மற்றும் நகரத் திட்டமிடல் திருத்தச் சட்டமூலம் சட்ட விரோதமானது என்று தெரிவித்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் எதிர்த்துள்ளனர். எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஒழுங்குப் பிரச்சினை மற்றும் சட்ட பிரச்சினை ஆகியவற்றை எழுப்பியமையால் முதலமைச்சர் சந்திரகாந்தனின் வேண்டுகோளுக்கிணங்க சபை இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைப்பதாக தவிசாளர் எச்.எம்.எம்.பாயிஸ் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ் மற்றும் அமைச்சர் ரிசாட் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் நாடு மற்றும் நகரத் திட்டமிடல் திருத்தச் சட்டமூலத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 வருடங்களாக இருளில் மூழ்கியுள்ள மண்டைதீவுக்கு 'ஒளி' கிடைக்குமா?

## மின்சக்தி அமைச்சர் சம்பிக்கவிடம் மனு

யாழ்ப்பாணம், பெப். 14.

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக மண்டைதீவு மின்சார வசதியின்றி மூழ்கியுள்ளது.

தீவகப் பிரதேசத்தில் கடந்த காலங்களில் ஏற்பட்ட போர், இடம்பெயர்வு என்பன காரணமாக மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

இதனால் இங்குள்ள மூன்று கிராம அலுவலர் பிரிவுகளில் மக்கள் தொடர்ந்து இருளில் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு மின்சக்தி எரிசக்தி அமைச்சர் பட்டாலி சம்பிக்க ரணவக்கவிடம் வேலணைப் பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா தெரிவித்தார்.

யாழ். செயலகத்தில் மின்சாரம் தொடர்பான 'வடக்கின் வசந்தம்' அபிவிருத்திக் கூட்டம் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு வேலணைப் பிரதேச சபைத்தலைவர் தமது பிரச்சினையை முன்வைத்தார். அதில், மண்டைதீவுக்கு மின்சாரம் வழங்குமாறு கடந்த 10 வருடகாலமாகக் கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது. அத்துடன் கிராமிய மின்திட்டத்தின் கீழ் வேலணை பிரதேச சபை 10 லட்சம் ரூபாவை மின்சார சபையின் வடக்கு பிரதி பொது முகாமையாளருக்கு வழங்கி 4 வருடம் முடிவடைந்துள்ளது.

இந்த நிதிக்கும் இதுவரை எந்தச் செயற்பாடும் இடம்பெறவில்லை. தற்போது மண்டைதீவில் மூன்று கிராம அலுவலர் பிரிவிலும் 600 குடும்பங்களைச் சேர்ந்த 1,578 பேர் வாழ்கின்றனர். இவர்கள் நீண்டகாலமாக இருளிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

எனவே வடக்கின் வசந்தம் மின் திட்டம் தொடர்பாக அமைச்சர் எம்மிடம் கேட்டதற்கு இணங்க நாம் எமது தீவகப் பிரதேச மின்சார அபிவிருத்தி தொடர்பாக முன்மொழிந்துள்ளோம்.

அத்துடன் மண்டைதீவுக்கு யாழிலிருந்து விரைவாக முழுநேர மின்சாரத்தை வழங்குமாறு கோரி மனு ஒன்றையும் நேரடியாக அமைச்சரிடம் கையளித்துள்ளோம் என வேலணைப் பிரதேச சபைத் தலைவர் தெரிவித்தார். (ஒ-10)

கிளிநொச்சியில்

### 2 வீடுகள் வாடகைக்குத் தேவை

புதிதாக திறக்கப்படும் GIZ தொழில்சார் பயிற்சி நிலையத்துக்காக, கிளிநொச்சி நகரத்துக்கு அண்மையில் இருத்தல் வேண்டும். கூரை ஓடு பொருத்தியதாக இருத்தல் வேண்டும்.

**வீடு:** நான்கு அறைகள் அடங்கலாக இணைக்கப்பட்ட மலசலகூடமும் குளியல் அறையும் (இரண்டு குளியல் அறை) வீட்டுக்கு வெளியே ஒரு மலசலகூடமும் வாகன தரிப்பிட வசதியுடன் ஒரு சிறிய பூந்தோட்டமும் விரும்பத்தக்கது.

அலுவலகம்: ஆறு அறைகள், இரண்டு இணைந்த மலசலகூடம்/ குளியல் அறைகள், மூன்று வாகனங்கள் நிறுத்துவதற்குரிய வசதியிருத்தல் வேண்டும்.

giz Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) GmbH

தொடர்பு: 0773733724, 0773773803

### கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் கிராம அலுவலராகக் கடமையாற்றும் சுப்பிரமணியம் பூபாலசிங்கம் அவர்களின் அன்புத் தாயார்

திருமதி

**சுப்பிரமணியம் சோதிப்பிள்ளை**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரி சங்கம்.
பிரதேச செயலகம், தெல்லிப்பழை.

பிரதேச செயலாளரும்,
சகல நலன்புரி சங்க அங்கத்தவர்களும்.

### கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளராகக் (கிராம அபிவிருத்தி) கடமையாற்றும் திருமதி ஞானகி சங்கரின் அன்புத் தந்தையார்

அமரர்

**குப்புசாமி ஞானசேகரம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரி சங்கம்.
பிரதேச செயலகம், தெல்லிப்பழை.

பிரதேச செயலாளரும்,
சகல நலன்புரி சங்க அங்கத்தவர்களும்.

### இதயம் நெகிழ்ந்த அஞ்சலி



எமது கோயில் நிர்வாக சபையின் பொருளாளரும், திருப்பணிச் சபையின் உறுப்பினருமான அ. சிவகுமார் அவர்களின் அன்புச் சகோதரி

செல்வி


**அப்பாப்பிள்ளை கணேஸ்வரி**

அவர்களின் மறைவு குறித்து ஆழ்ந்த துயரமடைகிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல அத்தியடி பிள்ளையாரை வேண்டுகின்றோம்.

யாழ். அத்தியடி பிள்ளையார் கோயில்.

நிர்வாக சபை,
திருப்பணிச் சபை.

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



**ஆசிரியர் திரு. இ. இராசதுரை**
(B.A.,Dip in Ed., S.L.T.S - I)

**சேவை விபரம்**

01. ப-சவுதம் தமிழ் வித்தியாலயம் தெமோதரை (12.03.1984 - 01.10.1989)
02. ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரி, புத்தூர் (02.10.1989 - 31.01.2004)
03. யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி (01.02.2004 - 14.02.2012)

இன்று (14.02.2012) ஓய்வு பெறுவதுடன் தனது 57ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடும் ஆசானை இன்றைய நன்னாளில் மனமாரப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேன்மேலும் சிறப்புப்பெற்று வளமாக வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் சமூகம்
யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி,
அச்சுவேலி.

### மனமகிழ்ந்த வாழ்த்துக்கள் பற் பல ...



**Mr. M. Mahendraraj (Branch Manager)**
ALLIANZ LIFE INSURANCE

தன்னிகரில்லா யாழ். கிளையின் முகாமையாளர் ஆக பதவியுயர்வு பெற்ற

**Mr. Murugiah - Mahendraraj**

மற்றும் சந்தைப்படுத்தல் துறையில் சாதனைகள் பல புரிந்து வெளிநாடு நோக்கி பயணிக்கும் எம் சாதனை நண்பர்கள்!!!



**Mr. S. Amalraj**
**(Assitant Business Manager)**
"Singapore / India"



**Mr. V. Nitharsan**
**(Associate Agency Manager)**
"Singapore / India"



**Mr. L. Jeevaraj**
**(Senior Financial Service Consultant)**
"India"

மேன்மேலும் பற் பல சாதனைகள் புரிய வாழ்த்துக்கள் பல கோடி .....!!!

வாழ்த்தி நிற்கும்:

**ALLIANZ குடும்பம்**

### வயோதிபர் படுகாயம்

யாழ்ப்பாணம், பெப்.14

யாழ். மத்தியூஸ் வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சம்பவம் பற்றி தெரியவருவதாவது:-

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மேற்படி வீதியில் வேகமாக வந்த ஹென்ரர் வாகனமும் ஹயஸ் வானும் மோதிக்கொண்டன.

இந்தச் சம்பவத்தின் பின்னர் ஹென்ரர் வாகனம் வீதியால் சென்ற வயோதிபரை முட்டி மோதி விட்டு நிறுத்தாது தப்பிச் சென்றுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த வயோதிபர் பின்னர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது (10-17)

### ஆண்டு ஒன்றின் நினைவிலே

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 29 | 25 |
| ★ | ★ |
| 10 | 02 |
| ★ | ★ |
| 1946 | 2011 |



**அமரர் செல்லத்துரை மகாலிங்கம்**
(ஓய்வு பெற்ற நூலகப் பொறுப்பாளர்)
திதி :-அட்டமி (14.02.2012)

எங்கள் அன்பின் அப்பாவே
ஆண்டு ஒன்று கடந்தாலும்
உங்கள் அன்புருவம் மறக்க முடியாது
நீங்கள் எம்மை விட்டு பிரிந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு அகலாது
இனி ஒரு பிறப்பு இருக்குமெனில்
இணைந்தே இருக்க விரும்புகின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!சாந்தி!சாந்தி!

07,யாழ் வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி,பிள்ளைகள்
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்

### மரண அறிவித்தல்

**செல்வி அப்பாப்பிள்ளை கணேஸ்வரி**



சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் யாழ் அத்தியடியை வதிவிடமாகவும் கொண்ட அப்பாப்பிள்ளை கணேஸ்வரி நேற்று (13.02.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாப்பிள்ளை - பராசக்தி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கௌரிதேவி மற்றும் சிவகுமார் (இளைப்பாறிய யாழ் மாநகரசபை வேலைப்பகுதி உத்தியோகஸ்தர்) ஆகியோரின் சகோதரியும் விஜயலட்சுமியின் அன்பு மச்சாளும் ஜெயராம் (HND Telecom Engineering), கஜராம்(College of Technology) பிரதீப் (சென். யோன்ஸ் கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2012) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

12/5,அத்தியடி புது வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்
அ.சிவகுமார் (சகோதரன்)

### தவறிவிட்டது

22.01.2012 அன்று அல்வாய், மந்திகை வீதியில் கணபதிப்பிள்ளை வடிவேலு, வடிவேலு நிவேதன் (கணேசபுரம் ஒட்டுசுட்டான்) அடையாள அட்டைகளும் மாசி 10 இல் நெல்லியடி பஸ் நிலையத்துக்கும் சுபாஸ் பேக்கரிக்குமிடையில் போர்சுடன் வடிவேலு புஸ்பராணியின் (குடத்தனை) அ.அட்டை, தேசிய சேமிப்பு வங்கி புத்தகமும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 021 226 3603 தொ.பே.இலக்கத்துடனோ, நெல்லியடி சிதம்பரப்பிள்ளை [illegible]யுடனோ தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

### காணி விற்பனைக்கு

யாழ். பல்கலைக்கழகத்துக்கு பின்புறமாக கம்பஸ் லேனில் 1 ½ பரப்புக்காணி உடனடியாக விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு:
**0774869128**

(14484)(6.10)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தப்புமா கிலானியின் பிரதமர் பதவி ?

இஸ்லாமாபாத், பெப்.14

பாகிஸ்தான் அதிபர் சர்தாரி மீதான ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க உரிய நடவடிக்கை எடுக்காததால் உயர் நீதிமன்றம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. அவர் நீதிமன்ற அவமதிப்புக்குள்ளாகியிருப்பதால் பாகிஸ்தான் பிரதமர் கிலானியின் பதவி தப்புமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

**கிலானி தண்டிக்கப்பட்டு, பதவி இழக்கும் சூழலில் மத விவகாரங்கள் துறை அமைச்சர் குர்ஷித் ஷா, ராணுவ அமைச்சர் சவுத்ரி அகமது முக்தார் ஆகியோருக்கு புதிய பிரதமர் பதவிக்கான வாய்ப்பு**



அவமதிப்பு செய்ததாகக் கருதி கிலானி குற்றவாளி பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளார். குற்றப்பத்திரிக்கைப் பத்திரமும் இவரிடம் வழங்கப்பட்டது.

நீதிமன்ற உத் தரவின் படி கிலானி 2 ஆண்டு களாக வழக்கை துரிதப்படுத் தாமல் காலம் தாழ்த்தியுள்ளார் என்றும் கூறியுள்ளது நீதி பதிக்குழு.

சர்தாரி லஞ்சம் வாங்கிய சர்ச்சை , 1990 இல் அப்போதைய பிரதமர் பெனாசீர் மற்றும் இவரது கணவர் சர்தாரி சில கம்பெனிகளிடம் 12 மில்லியன் டொலர் லஞ்சமாக பெற்று அதனை சுவிஸ் வங்கிகளில் முதலீடு செய்திருந்தனர் என்பது குற்றச்சாட்டு . இந்த விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்த வேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. ஆனால் அதிபர் சர்தாரியின் வேண்டுதலால் பிரதமரான கிலானி இது தொடர்பான விசாரணை நடத்த எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை.

இதனால் நீதிமன்றம் கடும் கோபம் கொண்டு விளக்கம் கேட்டது. இதன் படி நேற்று நீதிமன்றில் விசாரணைக்கு கிலானி முன்னிலையானார். அதன் போது குற்ற வாளி அல்ல என்றும், எவ் வித தவறும் செய்யவில்லை என்றும் அவரது தரப்பில் வாதிடப்பட்டது. எனினும் பிரதமர் கிலானி தண்டிக்கப்படும் வாய்ப்பு உள்ளது. இருப்பினும், கிலானி தண்டிக்கப்பட்டாலும் அதிபருக்கு மன்னிப்பு வழங்க அதிகாரம் உள்ளது என்று சட்ட நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அவர் தண்டிக்கப்பட்டால் 6 மாத சிறைத்தண்டனை வழங்க நேரிடலாம். இதனால் அவர் அடுத்த 5 ஆண்டுகளுக்கு எந்த அரச பதவியும் வகிக்க முடியாத நிலை வரும்.

எனவே அவர் பதவி விலக வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படும். கிலானி தண்டிக்கப்பட்டு, பதவி இழக்கும் சூழலில் மத விவகாரங்கள் துறை அமைச்சர் குர்ஷித் ஷா, ராணுவ அமைச்சர் சௌத்ரி அகமது முக்தார் ஆகியோருக்கு புதிய பிரதமர் பதவிக்கான வாய்ப்பு இருப்பதாகத் தகவல்கள் கூறுகின்றன. (ந)

## சிரியாப் புரட்சிக்கு அல்குவைதா ஆதரவு



சிரியாவில் அரசுக்கு எதிராக நடக்கும் கிளர்ச்சிக்கு அல்குவைதாவின் தலைவர் அய்மன் அல் ஷவாரி ஆதரவு தெரிவித்துள்ளார்.

வீடியோ செய்தி ஒன்றில் உரையாற்றிய போதே அவர் தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளார்.

அந்த உரையில் அவர் ,சிரியாவில் உள்ள எதிர்த்தரப்பினர் மேற்கு நாடுகளிலோ அல்லது ஏனைய அரபு நாடுகளிலோ உதவிக்காகத் தங்கியிருக்கவில்லை என்றார்.

மேலும் சுதந்திரமான மக்களை மூழ்கடித்துள்ள ஒரு புற்று நோய் பிடித்த ஆட்சியாக சிரியாவின் ஆட்சியை விவரித்துள்ள அவர், முஸ்லிம்களுக்கு என்ன உதவி வேண்டுமோ அதனைத் தாம் செய்வோம் என்றும் கூறியுள்ளார்.

ஈராக்கில் இருந்து சிரியாவுக்குள் இஸ்லாமிய தீவிரவாதிகள் சென்றுள்ளதாக செய்திகள் சில கூறுகின்றன.

சிரியாவில் அண்மையில் நடந்த சில குண்டுத் தாக்குதல்கள் அல் குவைதாவினால் நடத்தப்பட்டிருக்கலாம் என்று அமெரிக்கா சந்தேகிக்கிறது.

இந்த நிலையில் அல் குவைதாவின் தலைவர் அய்மன் அல் ஷவாரி இவ்வாறு தெரிவித்திருப்பது மேற்குலகை ஆச்சரியப்பட வைத்துள்ளது. (ந)

## பன்றிக் காய்ச்சலில் 81 பேர் உயிரிழப்பு

மெக்ஸிகோவில் பன்றிக் காய்ச்சல் நோய்த்தொற்றினால், கடந்த ஒரு மாதத்தில், 81 பேர் உயிரிழந்துள்ளதாக புள்ளிவிவரமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஜனவரி 1 ஆம் திகதி தொடக்கம் பெப்ரவரி 9 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட இப்புள்ளி விவரத்தின் படி, 3,522 பேருக்குப் பன்றி காய்ச்சல் நோய் தொற்றியிருப்பதாகவும், அவர்கள் மூன்று வகை வைரஸுக்களால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பன்றிக்காய்ச்சல் உலகம் முழுவதும் வேகமாகப் பரவி வந்த 2009 ஆம் ஆண்டில், மெக்ஸிக்கோவில், சுமார் 1,300 பேர் உயிரிழந்தனர்., 70,000 பேர் இந்நோய் தொற்றினால்பாதிக்கப்பட்டிருந்தனர்.



*ஈரான் தலைநகர் தெஹ்ரானில், அந்நாட்டு பிரதமர் முகமது அகமது நிஜாத்தை (இடது), ஹமாஸ் பிரதமர் கஜா இஸ்மாயில் ஹனியே (வலது) சந்தித்துப் பேசினார்.*

## சிரிய இராணுவத்தின் தளபதி சுட்டுக்கொலை

சிரியாவின் ஜனாதிபதி பஷார் அல் அசாத்துக்கு எதிரான பொதுமக்கள் போராட்டம் நாடு முழுவதும் தீவிரமடைந்த நிலையில் இராணுவத் தளபதி சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சிரியா நாட்டின் ஜனாதிபதி பஷார் அல் அசாத்துக்கு எதிரான பொதுமக்கள் போராட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக கடந்த சில நாள்களுக்கு முன்பு காலப்போ நகரில் போராட்டக்காரர்கள் மீது இராணுவம் நடத்திய தாக்குதலில் 60 பேர் கொல்லப்பட்டனர். இந்நிலையில் நேற்று முன்தினம் இரண்டு இடங்களில் நடந்த கார் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 28 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 235 பேர் காயம் அடைந்துள்ளனர். இதனால் நாடு முழுவதும் கலவரம் பரவியது.

இதனையடுத்து சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸில் இராணுவத் தளபதி இசா அல்- காவ்லி வீட்டுக்குத் துப்பாக்கியுடன்வந்ததீவிரவாதிகள் அவரை சரமாரியாகச் சுட்டதில் படுகாயம் அடைந்த அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவசர சிகிச்சை அளித்தும் பலனில்லாமல் அவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

சிரியாவில் கடந்தாண்டு மார்ச் மாதம் முதல் போராட்டம் நடந்து வருகின்றது. இருப்பினும் இராணுவத் தளபதி ஒருவர் சுட்டு கொல்லப்பட்டது இதுவே முதல் முறையாகும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கிரீஸில் மீண்டும் கலவரம்



கிரீஸ் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்ட புதிய கடன் பிணை ஒப்பந்தம் மற்றும் கடும் சிக்கன நடவடிக்கைகளை எதிர்த்து நாடாளுமன்ற முன்றிலில் நடைபெற்ற கலவரங்களில் 25 ஆர்ப்பாட்டக்காரர்கள் மற்றும் 40 அதிகாரிகள் உட்பட 65 பேர் காயமடைந்துள்ளனர்.

நிதி நெருக்கடி நிலைமையிலிருந்து மீள்வதற்காக, சர்வதேச நாணய நிதியத்தின் சிக்கன ஒப்பந்த நிபந்தனைக்கு சம்மதம் தெரிவித்து மீண்டும், 130 பில்லியன் யூரோ கடன் பெறும் பிரேரணை கிரீஸ் நாடாளுமன்றத்தில், நேற்றுமுன்தினம் நிறைவேற்றப்பட்டது.

இதற்கு ஆதரவாக 199 வாக்குகளும், எதிராக 74 வாக்குகளும் அளிக்கப்பட்டன. கட்டுப்படுத்த முடியாத பொருளாதார நிலைமை, வங்கிகள் திவாலாகும் நிலைமை என்பவற்றை சமாளிக்க வேறு வழியில்லை என கிரீஸ் பிரதமர் லூகாஸ் தெரிவித்துள்ளார்.

நிதி நெருக்கடி நிலைமைக்கு மேலும் கடன்பெறுதல் ஆபத்தான விளைவையே தோற்றுவிக்கும் எனக் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அரச கட்டடங்கள் மீது கல்லெறிந்தும் பொதுச்சொத்துக்களை சேதப்படுத்தியும் நேற்று கலவரத்தில் ஈடுபட்டதால் அவர்கள் மீது பொலிஸார் கண்ணீர் புகைப் பிரயோகம் மேற்கொண்டனர். இதன் போதே பலர் காயமடைந்தனர்.

ஊதியம் மற்றும் ஓய்வூதியங்கள் என்பவற்றை சமாளிக்க ஐரோப்பிய நிதி அமைச்சர்களிடமிருந்து மிகப்பெரிய அளவில் தொகைப் பிணை ஒப்பந்தத்தின் அடிப்படையில் பெறப்படுவதுடன், கடும் சிக்கன நடவடிக்கை நடைமுறைப்படுத்தப்படுகிறது. கடன் பத்திரதாரர்களுக்கு கணிசமான இழப்புக்களை ஏற்படுத்தவல்ல இப்பிணை ஒப்பந்தம், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான செலவினங்களை 160 வீதத்திலிருந்து 120வீதத்துக்கு குறைக்க உதவும் என அரச தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

கிரீஸின் தற்போதைய நிதி நெருக்கடி நிலைமையின் படி சுமார் 330 பில்லியன் யூரோவுக்கு மேல் கடன்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. ()

## கனடாப் பிரதமரின் சீனப் பயணம்

முக்கிய விடயங்கள் குறித்து பேச்சு நடத்துவதற்காக கனடியப் பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர் சீனாவுக்கு பயணம் மேற்கொண்டார். ஆனால் சீனாவில் அரசியல் குறித்து இவர் பேசவில்லை. சீனாவின் பொதுவுடமைக் கட்சியின் நகர்ச் செயலாளராகவும், பிரபல அரசியல் வாதியாகவும் விளங்கும் போஸிலாய் என்ற இளம் அரசி யல் நட்சத்திரத்தை ஸ்டீபன் ஹார்ப்பர் சந்தித்துப் பேசுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அவ்வாறு எந்தவொரு நிகழ்வும் நடைபெறவில்லை. இந்தப் பயணம் அரசியல் சார்ந்ததோ, வர்த்தகத் தொடர்பானதோ கிடையாது என்று ஸ்டீபன் ஹார்ப்பர் தெரிவித்தார்.

இந்த பயணத்தின் போது சீனாவில் உள்ள பாண்டா கரடிகளை பத்தாண்டு கடன் முறையில் வாங்கி கனடாவுக்கு கொண்டு வந்தார்.

## இரட்டை சகோதரிகளில் ஏன் இந்த வித்தியாசம்



அமெரிக்காவில் உள்ள ஹூஸ்டன் நகரில் ஒரே நேரத்தில் பிறந்த இரட்டை பெண் குழந்தைகள் வித்தியாசமான தோற்றத்துடன் காணப்படுகின்றனர்.

சின்னா, ஷிர்ரா என்று பெயரிடப்பட்ட இந்த இருவருக்கும் தற்போது 13 வயதாகிறது. ஆனால் உடல் வளர்ச்சி அடையும் போது இவர்கள் 2 பேர் இடையேயும் நிறைய வித்தியாசங்கள் ஏற்பட்டன. அதாவது ஷிர்ராவை விட சின்னா அதிகம் உயரமும், பல மடங்கு எடையும் அதிகமாகிவிட்டார்.

ஒரே நேரத்தில் பிறந்த இந்த குழந்தைகளுக்கு இடையே எவ்வாறு இந்த வித்தியாசம் ஏற்பட்டது என்பது தெரியவில்லை. இருப்பினும் பிறக்கும் போது ஷிர்ரா எடை குறை வாக இருந்ததால் அவளை 108 நாள்கள் தீவிர சிசிக்சைப் பிரிவில் வைத்து பராமரித்ததாக அவளது தாயார் கூறுகிறார். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசாரணை அறிக்கை விரைவில் அமெரிக்காவிடம்

## மாலைதீவு புதிய அதிபர் உறுதி

மாலே, பெப்.14

மாலைதீவில் தான் ஆட்சிக்கு வந்த வழிமுறை தொடர்பாக விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையை அமெரிக்காவிடம் கையளிப்பதாகவும் புதிய அதிபர் முகமது வாஹித் ஹூசேன் அமெரிக்க வெளியுறவு துணை அமைச்சர் ரொபேட் ஓ பிளேக்கிடம் உறுதி அளித்துள்ளார்.



மாலைதீவில் நீதிபதியைக் கைது செய்ய அந்நாட்டு முன்னாள் அதிபர் முகமது நஷீத் உத்தரவிட்டதால், மக்கள் ஆத்திரமடைந்து தொடர் போராட்டம் நடத்தி வந்தனர். இதனால் மக்கள் புரட்சி ஏற்பட்டதாகக் கூறி நஷீத் பதவி விலகினார்.

இதைத் தொடர்ந்து புதிய அதிபராகத் துணை அதிபர் முகமது வாஹித் ஹூசேன் பதவியேற்றார்.


எனினும் இவர் நஷீத்தின் ஆட்சியைக் கவிழ்த்து அதிபரானதாகக் குற்றச்சாட்டு எழுந்தது. இது குறித்து விசாரிக்க அமெரிக்க வெளியுறவுத் துணை அமைச்சர் ரொபேட் ஓபிளேக், மாலைதீவுக்கு வருகை தந்து ஆட்சி அதிகாரம் மாற்றப்பட்டது குறித்து விசாரணை நடத்தினார்.

இது குறித்து முகமது வாஹித் ஹூசேன் தெரிவித்ததாவது;

ஆட்சியை நான் கவிழ்க்கவில்லை. இது குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அதற்கு ஒத்துழைப்பு அளிப்பேன். விசாரணை அறிக்கை ரொபேட் ஓ பிளேக்கிடம் அளிக்கப்படும். மாலைதீவில் தற்போதுள்ள நிலைமையில் முன்கூட்டியே தேர்தல் நடக்க வாய்ப்பில்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார். (ந)

# சேவல் முட்டையிட்டது சீனாவில் ஆச்சரியம்





சீனாவிலுள்ள சேவலொன்று முட்டையிட்டுள்ள சம்பவம் விஞ்ஞானிகளை ஆச்சரியத்தில் மூழ்கவைத்துள்ளது. இதற்கான காரணம் குறித்துத் தெரிந்துகொள்வதற்குத் தற்போது ஆய்வுகளை மேற்கொள்ள உள்ளனர்.

சீனாவின் அன்ஹுய் மாகாணத்தின உள்ள சுமியோ கிராமத்தில் ஹுவாங் லீ என்பவரின் வீட்டில் வளர்த்து வந்த சேவலே இவ்வாறு முட்டையிடத் தொடங்கியுள்ளது.

இவர் தனது கோழிப் பண்ணையில் 7 கோழிகளையும், ஒரு சேவலையும் வளர்த்து வந்துள்ளார். குளிர்காலத்தின் போது கோழிகள் அனைத்தையும் இவரின் குடும்பத்தினர் சமைத்து உண்டு விட இந்தச் சேவல் மட்டும் எஞ்சி நின்றது. இந்தச் சேவலே தற்போது முட்டையிடுகிறது.

இது குறித்து அவர் தெரிவித்ததாவது;

மாரி காலத்தில் கோழிகள் அனைத்தையும் சமைத்து விட சேவல் மட்டுமே எஞ்சியிருந்தது. ஒருநாள் கோழிக் கூட்டுக்குள் சேவலுக்கு அருகில் முட்டை இருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தேன். யாராவது வேடிக்கைகாக முட்டையைக் கொண்டு வந்து சேவலுக்கு அருகில் வைத்திருக்கலாமென நான் நினைத்தேன். ஆனால் அடுத்தநாள் இன்னுமொரு முட்டையும் இருந்தது. அதனால் நான் மூன்றாவது நாள் கோழிக்கூடு அருகில் காத்திருந்தேன். ஆச்சரியப்படும் வகையில் அந்தச் சேவல் முட்டையிட்டது எனக் கூறியுள்ளார்.

இத்தகவல் தொலைக்காட்சிகள் மூலம் எல்லா இடங்களுக்கும் பரவியதையடுத்து விவசாயத்துறை அமைச்சகத்தின் விஞ்ஞானிகள் சேவலைப் பரிசோதனைக்காகக் கொண்டு சென்றுள்ளனர். (ந)

# இளவரசர் வில்லியம் தம்பதியர் தம்பினர்



பிரிட்டிஷ் இளவரசர் வில்லியம் அவரது மனைவி கேதே ஆகியோர் பயணித்த ஜெட் விமானம் ஹீத்ரோ விமான நிலையத்தில் தரையிறங்கும் போது ஏற்பட இருந்த விபத்திலிருந்து நூலிழையில் உயிர் தப்பியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விமானம் தரையிறங்கும் போது ஓடுதளத்திலிருந்த விமானம் அப்புறப்படுத்தப்படாமல் இருந்ததால் அந்த விமானம் மீது இளவரசர் பயணம் செய்த விமானம் மோதும் அபாயம் ஏற்பட்டது.

இளவரசர் பயணம் செய்த விமானம் தரையிறங்கும் போது 200 அடி உயரத்தில் எதிரே மற்றொரு விமானம் இருந்ததை கவனித்த விமானி உடனடியாக விமானத்தை மீண்டும் மேலே பறக்கச் செய்தார்.பின்னர் ஒரு சில நிமிடங்கள் விமான நிலையத்தைச் சுற்றி சுற்றி வந்து, ஓடுதளத்திலிருந்த விமானம் அப்புறப்படுத்தப்பட்ட பின்னர், இந்த விமானம் தரையிறக்கப்பட்டது. (ந)

# தற்கொலைப் படையை சேர்ந்த 2 சிறுவர் கைது

கந்தஹார்,பெப்.14

ஆப்கானிஸ்தானின் தெற்குப் பகுதியில், பொலிஸார் நடத்திய அதிரடி சோதனையில், தற்கொலைப் படையைச் சேர்ந்த 2 சிறுவர்கள் உள்ளிட்ட 5 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டனர்.

இதுதொடர்பாகப் பத்திரிகையாளர்களிடம் அந்த மாகாணச் செய்தித் தொடர்பாளர் ஜல்மாய் அயூப் கூறியதாவது;

கைதான 2 சிறுவர்களும், 10 வயதுக்குட்பட்டவர்கள். அவர்களின் உள்ளாடைகள் முழுவதும் வெடிபொருள்களால் நிரப்பப்பட்டிருந்தன. கந்தஹாரில் இயங்கி வரும் ஆப்கன் மற்றும் சர்வதேச படைகளின் மீது இந்தச் சிறுவர்கள் தற்கொலைப்படைத் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்தனர்.

இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதால் நடக்க இருந்த பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டுள்ளது- என்றார். (ந)

# மகளான காதலி

நியூசிலாந்து நாட்டில் தனது காதலியை மகளாகத் தத்தெடுத்து பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார் John Goodman என்ற 49 வயது நபர்.

நிறுவனம் ஒன்றின் சில சொத்துக்களை அவரது பிள்ளைகளுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டியிருந்தது. ஆனால் அவரது பிள்ளைகள் சட்டப்படி சொத்துக்களைப் பெறப் போதுமான வயதெல்லையைப் பெற்றிருக்கவில்லை. இந் நிலையிலேயே சட்டப்படி தனது காதலியை மகளாகத் தத்தெடுத்து சொத்துக்களைக் கையகப்படுத்தியுள்ளார். (ந)



ஈராக் பேர்சியன் வளைகுடாவில், புதிய எண்ணெய் ஏற்றுமதி நிலையத்தை அந்தநாட்டுப் பிரதமர் நௌரி அல்-மாலிகி திறந்து வைத்தார்.

# விமான விபத்து



கின்ஷாசா, பெப்.14

கொங்கோ நாட்டின் புக்காவ் என்ற இடத்தில் நடந்த விமான விபத்தில் அந்த நாட்டின் அதிபரின் ஆலோசகர் மற்றும் நிதியமைச்சர் மட்டா போன்யோ மாபோன் விபத்தில் சிக்கினர்.

இதில் அதிபரின் ஆலோசகர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார். நிதியமைச்சர் படுகாயத்துடன் மீட்கப்பட்டுள்ளார்.

மேலும் அரசின் உயர் அதிகாரிகள் மற்றும் பயணிகள் விபத்தில் சிக்கியுள்ளதாக அஞ்சப்படுகிறது.

இந்த விபத்துக் குறித்து அந்நாடு உடனடித் தகவல் ஏதும் வெளியிடவில்லை. சீன இணையதளம் தகவல் தெரிவித்துள்ளது.

முறையான தொழில்நுட்ப வசதிகள் மற்றும் பராமரிப்பற்ற விமான நிலையங்களைக் கொண்டுள்ளதே இந்த விபத்துக்குக் காரணம் எனத் தெரியவருகிறது. (ந)

### வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்ற ஒளிப்பதிவாளர்

சுவிற்சர்லாந்தில் ஜூரிச் மாநகரத்தில் பிறந்த ரொபர்ட் ஃபிராங்க் என்பவர் சுவிஸ் பிரஸ் போட்டோ வாழ்நாள் சாதனையாளர் விருதைப் பெறுகிறார்.

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற ஒளிப்பதிவாளர்கள், ஃபிராங்கின் பெயரை விருதுக்குத் தேர்ந்தெடுத்துள்ளனர். இவருடைய ஒளிப்படைப்பு அமெரிக்கர்களைப் பற்றியதும் அவர்களின் நாகரிகத்தை முழுமையாக வெளிப்படுத்துவதாகவும் உள்ளன.

பெர்ன் நகரத்தில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 27 ஆம் தேதி இவருக்கு இந்த விருது வழங்கப்படும். (ந)

# ஏவுகணை இரகசியங்களை விற்றவருக்கு 13 வருட சிறை

ரஷ்யாவின் ஏவுகணைத் திட்ட இரகசியங்களை அமெரிக்க உளவு அமைப்புக்கு வழங்கியதாகக் குற்றம் சாட்டப்பட்ட ரஷ்ய விண்வெளிப் பொறியியலாளருக்கு 13 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ரஷ்யா தனது ராணுவ உபயோகத்திற்கான ஏவுகணைகளை வடமேற்கு விண்வெளி மையத்தில் தயாரித்து வருகிறது. தற்போது நவீன ரக ஏவுகணைகளை தயாரித்து வருகிறது. இந்நிலையில் ரஷ்ய விண்வெளித்துறையின் ப்ளஸ்டெக் பிரிவில் ஏவுகணைச் சோதனைத் திட்டப் பொறியியலாளர் விளாடிமிர் நெஸ்டரட்ஸ் என்பவர், விண்வெளி ஏவுகணை திட்டத்தின் படங்களைத் திருடி அமெரிக்காவின் உளவு அமைப்பான சி.ஐ.ஏ.க்கு விற்றுள்ளது விசாரணையில் தெரியவந்தது.

இதையடுத்து அந்தப் பொறியியலாளர் கைது செய்யப்பட்டார். அவரது வழக்குத் தொடர்பான விசாரணையில் இவருக்கு 13ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது. (ந)

### பாகிஸ்தான் பெண் அமைச்சருக்கு ஆபாச எஸ்.எம்.எஸ்.

பாகிஸ்தான் பெண் அமைச்சருக்கு ஆபாச எஸ்.எம்.எஸ். அனுப்பியவர் குற்றப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் சிக்கியுள்ளார்.

பாகிஸ்தான் நாட்டின் வெளியுறவுத் துறைச் செயலர் ஹினா ரப்பானியின் கைத் தொலைபேசிக்கு ஆபாச எஸ்.எம்.எஸ். ஒன்று வந்தது. அது இந்தியாவில் இருந்துதான் அனுப்பப்பட்டது என்பதை அவர் உறுதி செய்தார். இதையடுத்து, மத்திய குற்றப்பிரிவு பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் பாகிஸ்தான் அமைச்சருக்கு ஆபாச எஸ்.எம்.எஸ். அனுப்பியவர் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் என்பதைக் கண்டு பிடித்தனர். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25 நகரங்கள் பெயர் மாற்றம்

டில்லி, பெப்.14

கடந்த பத்தாண்டுகளில், நாடு முழுவதும் 25 நகரங்களின் பெயர்களை மாற்ற, மத்திய உள்துறை அமைச்சகம் அனுமதி அளித்துள்ளது. சில நகரங்களின் பெயர்கள் உண்மைத் தன்மை மாறி, வேறு பெயரில் அழைக்கப்பட்டு வருகின்றன.

உள்ளூர் மக்களின் உணர்வுகளை மதித்து, அந்த நகரங்களின் பெயர்களை மாற்ற மத்திய உள்துறை அமைச்சகம் அனுமதி அளிக்கவுள்ளது. அதன்படி, கடந்த பத்தாண்டுகளில், 25 நகரங்களின் பெயர்களை மாற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கேரளாவில் 17 நகரங்களின் பெயரையும், பஞ்சாபில் 4 நகரங்களின் பெயரையும், ஒரிசாவில் 2 நகரங்களின் பெயரையும் மாற்ற அனுமதி கொடுத்துள்ளது. கேரளாவில் குயிலான் என்பது கொல்லம் என்றும், அலப்பி என்பது ஆலப்புழா என்றும், மன்னான்டாடி என்பது மானந்தவாடி என்றும், சுல்தான் பேட்டரி என்பது சுல்தான்பத்தேரி என்றும், படாகரே என்பது வடகரா என்றும் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. ஒரிசாவில் புல்பானி நகரம் பவுத் கவுதமால் என்றும், சோனாப்பூர் என்பது சுவர்னபூர் என்றும் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. (வ)


## ஜம்முகாஷ்மீரில் கடும்பனிப் பொழிவு: போக்குவரத்து பாதிப்பு

ஜம்முகாஷ்மீர் மாநிலத்தில் நிலவி வரும் கடும் பனிப்பொழிவால், ஸ்ரீநகர்- ஜம்மு பிரதான வீதியில், போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. 294 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள இந்த பிரதான வீதி, கடும்பனிப் பொழிவின் காரணமாக, நேற்றுமுன்தினம் இரவு தொடக்கம் மூடப்பட்டுள்ளதாக மாநில போக்குவரத்துத்துறை தெரிவித்துள்ளது.

விதார் ஜவஹர் குகைக் பகுதியில், ஒன்றரை அடிக்கு மேலும், காஜிகுந்த் நகர்ப் பகுதியில் 9 அங்குலம் மற்றும் பட்னிடாப் பொயிண்ட் பகுதியில் 7 அங்குலத்திற்கு மேலாக பனி படர்ந்திருப்பதனால், அங்கு மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

# 'எங்களை வம்புக்கு இழுக்க வேண்டாம்'

### அ.தி.மு.க.வை எச்சரிக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் விஜயகாந்த்



''எம்.ஜி.ஆர் கட்சி என்பதால் மரியாதையுடன் இருக்கிறோம். எங்களை வம்புக்கு இழுக்க வேண்டாம். பின்பு எல்லாவற்றையும் சொல்ல வேண்டிய நிலை ஏற்படும்'' என்று எதிர் கட்சித் தலைவரும் நடிகருமான விஜயகாந்த் அ.தி.மு.கவை எச்சரித்துள்ளார்.

அருப்புக்கோட்டையில் விருதுநகர் மாவட்ட தே.மு.தி.க. பொருளாளர் சங்கரலிங்கத்தின் இல்லத்தில் திருமண விழா நடைபெற்றது. இதில் பங்கேற்ற விஜயகாந்த், தமிழக அரசைக் கடுமையாக விமர்சித்துப் பேசினார்.

மக்கள் குறைகளைப் போக்குவதற்காகத்தான் சட்டமன்றத்துக்குப் போகிறோம். அங்கு மக்கள் குறைகளைத் தீர்க்கப் பேசுகிறோம். எதிர்க்கட்சி உறுப்பினர்களைப் பார்த்து ஆளுங் கட்சியினர் ஒருமையில் பேசியதால்தான் நான் கைநீட்டிப் பேச வேண்டிய நிலை ஏற்பட்டது.

சட்டத்தில் கைநீட்டி பேசக்கூடாது என்று கூறவில்லை. சட்டமன்ற உரிமைக்குழுவைக் கூட்டி என்னைப் பத்துத் தினங்கள் பதவிநீக்கம் செய்துள்ளனர். இந்த வேகத்தைத் தானே புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிவாரணம் வழங்குவதில் காட்ட வேண் டியதுதானே? அதை விட்டு விட்டு என்னைப் பதவி நீக்கம் செய்துள்ளனர்.

6 அமைச்சர்கள் மற்றும் சட்டபேரவை உறுப்பினர்கள் புடைசூழ சங்கரன் கோயில் இடைத்தேர்தல் பணிக்காக அறிவித்துள்ளனர். தேர்தல் திகதி அறிவிப்பு வெளியாகும் முன்பே இதைச் செய்துள்ளனர்.

மின்வெட்டு 2 மாதத்திற்குள் நீக்கி விடுவோம் என்று ஆட்சிக்கு வந்தவுடன் தெரிவித்தனர். ஆனால் இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

விலைவாசியும் உயர்ந்து கொண்டே போகிறது. கடந்த தேர்தலில் 60 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவோம் என கூறிய தி.மு.க. தற்போது 6 ஆயிரம் வாக்குகள் கூட பெற முடியாத நிலையில் உள்ளது. இதே நிலைமை தான் அ.தி. மு.க.வுக்கும் ஏற்படும்.

தமிழ்நாட்டில் தற்போது சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துள்ளது. அ.தி.மு.க, எம்.ஜி. ஆரின் கட்சி என்பதால் மரியாதையுடன் இருக்கிறோம். எங்களை வம்புக்கு இழுக்காதீர்கள். பிறகு எல்லாவற்றையும் சொல்ல வேண்டிய நிலை ஏற்படும். மக்களை ஏமாற்றி ஆட்சி அமைக்கும் எண்ணம் எனக்கு இல்லை - என்று விஜயகாந்த், அ.தி.மு.க. அரசு மீது கண்டனக் கணைகளைத் தொடுத்துள்ளார். (வ)

## கொள்ளையர் குண்டுத் தாக்குதல் ஒரிசாவில் 6 பொலிஸார் காயம்



மேற்கு ஒரிசா நகரில் கொள்ளைக்காரக் கும்பல் நடத்திய வெடிகுண்டு தாக்குதலில் பொலிஸார் 6 பேர் காயமடைந்துள்ளனர்.

மேற்கு ஒரிசாவின் புறநகர் பகுதியான சவுதரி சௌக் அருகே 8 பேர் கொண்ட கொள்ளையர்களின் கூட்டம் ஒன்று வீட்டில் கொள்ளையடிக்கப் போவதாக நேற்றுமுன்தினம் அதி காலையில் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

இதனையடுத்து, அந்த இடத்துக்கு பொலிஸார் விரைந்தபோது கொள்ளையடித்த நகைகளுடனும் பணத்துடனும் தப்பி ஓட முயன்ற அந்த கொள்ளைக் கூட்டத்தினர் பொலிஸார் மீது வெடி குண்டுத்தாக்குதலை நடத்தினர். இந்தத் தாக்குதலில் உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர்இருவர் மற்றும் 3 கான்ஸ்டபிள்கள் உட்பட 6 பேர் காயமடைந் துள்ளதாக சம்பல்பூர் பொலிஸ் கண்-காணிப்பாளர் நிதின் கனோடியா தெரிவித்தார்.

இந்த 8 பேரில் ஐந்து பேரை நேற்று முன்தினம் மாலை பொலிஸார் கைது செய்தனர். பிடிபட்டவர்களிடமிருந்து இரண்டு துப்பாக்கிகள், கூர்மையான ஆயுதங்கள், ஐந்து கைபேசிகள், தங்க ஆபரணங்கள், கமரா மற்றும் 16 ஆயிரம் ரூபா பணம் ஆகியவைகள் கைப்பற்றப்பட்டன.

பிடிபட்ட கொள்ளையர்கள் மேற்கு வங்க மாநிலத்தை சேர்ந்தவர்கள் என்றும் மீதமுள்ளவர்களைப் பிடிக்க தீவிரமான தேடுதல் வேட்டை நடந்து வருவ்தாகவும் நிதின் கனோடியா தெரிவித்துள்ளார். மேலும், இந்த கொள்ளையர்கள் சம்பல்பூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடந்த ஒரு வருடமாகச் செயற்பட்டு வருவதாகவும் மூன்று கொள்ளைகளில் இவர்கள் ஈடுபட்டுள்ள தாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (வ)

## இராணுவத் தளபதி பிரிட்டன் பயணம்

டில்லி, பெப்.14

இந்திய ராணுவத் தளபதி வி.கே.சிங், வயது பிரச்சினை விவகாரத்துக்கு தீர்வு ஏற்பட்டதையடுத்து, மீண்டும் அவர் தனது வழக்கமான பணிகளுக்குப் புறப்பட்டார். அரசு முறைப் பயணமாக, ராணுவத் தளபதி நேற்று பிரிட்டனுக்குப் பயணமானார்.

4 ஆண்டுகளுக்கு பின்னர், இந்திய ராணுவத் தளபதி பிரிட்டனுக்குச் செல்ல உள்ளது குறிப்பிடத்தக்கது. எதிர்வரும் 19 ஆம் திகதி வரை, பிரிட்டனில் சுற்றுப்பயணம் மேற் கொள்ள உள்ள வி.கே. சிங், ராணுவ உயர் அதிகாரிகள், அமைச்சர்களைச் சந்திக்க உள்ளார். மே மாத இறுதியில், ராணுவத் தளபதி பதவியிலிருந்து வி.கே.சிங் ஓய்வு பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது




ஜப்பான் அரசு மேற்கொள்ளப்பட்ட 24ஆவது கப்பல் சுற்றுலா நிகழ்ச்சியை ஆரம்பித்த ஃப்யூஜி மாரு என்ற சொகுசுக்கப்பல் 13 நாடுகளைச் சேர்ந்த சர்வதேச இளைஞர்களுடன் சென்னையை வந்தடைந்தது.

# வாக்காளருக்கு லஞ்சம் கொடுத்தால் சிறை

**பணமாகவோ, பொருளாகவோ கொடுத்து, வாக்காளர்களை கவரும் நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க, இது தொடர்பான சட்டம் கொண்டு வரும்படி, தலைமை தேர்தல் ஆணையகம், மத்திய சட்டத்துறை அமைச்சகத்துக்கு பரிந்துரை செய்துள்ளது.**

தேர்தலில் வாக்களிக்க வாக்காளர்களுக்கு லஞ்சம் கொடுப்பவர்களுக்கு தண்டனை அளிக்க வகை செய்யும், தேர்தல் ஆணையகத்தின் ஆலோசனையை மத்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

ஐந்து மாநில தேர்தல்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இதில், உத்தரப்பிரதேசத்தில் மட்டும் முறைக் கேடாக எடுத்துச் செல்லப்பட்ட, 53 கோடி ரூபாய் பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு தேர்தலின் போதும், வன்முறை மற்றும் லஞ்சம் முக்கிய பங்கு வகிக்கிறது. இதை முடிவுக்குக் கொண்டு வர, தலைமைத் தேர்தல் ஆணையகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகிறது.

குற்றப் பின்னணி உள்ளவர்களை, தேர்தலில் பங்கேற்க தடை செய்யும் நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேபோல், தேர்தலின் போது தங்களுக்கு ஆதரவாக வாக்களிக்க, வாக்காளர்களுக்கு பணம் கொடுப்பது, தற்போது பரவலாகக் காணப்படுகிறது. இதற்காக ஐந்து மாநிலங்களின் தேர்தலில் தீவிர கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பணமாகவோ, பொருளாகவோ கொடுத்து, வாக்காளர்களைக் கவரும் நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க, இதுதொடர்பான சட்டம் கொண்டு வரும்படி, தலைமை தேர்தல் ஆணையகம், மத்திய சட்டத்துறை அமைச் சகத்துக்கு பரிந்துரை செய்துள்ளது.

இந்திய தண்டனைச் சட்டம் 171(பி) பிரிவின் கீழ், தேர்தலின்போது பணம் கொடுப்பவர்களைத் தண்டிக்கலாம். இந்த சட்டத்தின் கீழ் வாக்காளர்களுக்கு பணம் கொடுப்போருக்கு, ஓராண்டு வரை சிறைத் தண்டனை அளிக்கலாம். அல்லது சிறைத் தண்டனை மற்றும் அபராதமும் சேர்த்து விதிக்கலாம்.

இந்தசட்டபிரிவைப் பயன்படுத்தி, தேர்தலின் போது பணம் கொடுப்பவர்களைத் தண்டிக்க வழி செய்யும்படி, மத்திய சட்டத் துறை அமைச்சகத்திடம் கோரியுள்ளோம். இந்த ஆலோசனையை, சட்டத்துறை அமைச்சகம் ஏற்றுக் கொண்டுள்ளது என தேர்தல் ஆணையகத்தின் செலவு கண்காணிப்பு பிரிவின் டைரக்டர் ஜெனரல் பி.கே.தாஷ் தெரிவித்துள்ளார். (வ)

### வெளிநாடுகளில் கறுப்புப்பணம்

## மத்திய அரசு விரைவில் வெள்ளை அறிக்கை

டில்லி, பெப்.14

எதிர்க் கட்சிகளின் நெருக்கடியை அடுத்து, வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள கறுப்பு பணம் குறித்து, எதிர்வரும் பட்ஜெட் கூட்டத் தொடரின் போது, நாடாளுமன்றத்தில் வெள்ளை அறிக்கை தாக்கல் செய்ய, மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

உள்நாட்டில் ஊழல் மூலம் ஈட்டிய பெருமளவு கறுப்புப் பணத்தை, பலர் வெளிநாடுகளில் பதுக்கி வைத்திருப்பதாக, எதிர்க் கட்சிகள் தொடர்ந்து குரல் எழுப்பி வருகின்றன. கடந்த 2009-2010 மற்றும் 2010-2011ஆம் ஆண்டின் மதிப்பீட்டின்படி, 20 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு, கணக்கில் காட்டப்படாத வருமானம், பதுக்கி வைக்கப் பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

கணக்கில் காட்டப்ப டாத பெருமளவு பணத்தை, சட்ட விரோதமாக, சுவிற்ஸர்லாந்து உள்ளிட்ட வெளிநாட்டு வங்கிகளில், பலர் பதுக்கி வைத்திருப்பதாகவும், அவர்களின் பெயர்களையும், பதுக்கி வைக்கப்பட்டுள்ள பணம் எவ்வளவு என்பதையும், பகிரங்கமாகத் தெரிவிக்க வேண்டும் என்றும், எதிர்க்கட்சிகள் குரல் கொடுத்து வருகின்றன. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேம்படி மகளிர் கல்லூரிக்கு யூனியன் வங்கி அனுசரணை



கொழும்பு ஷிப்பர்ஸ் அக்கடமியின் (SA) ஏற்பாட்டில் 2011 டிசம்பர் 13ஆம் திகதி சிலோன் கொன்டினென்டல் ஹோட்டலில் நடைபெற்ற ஆளுநர் வெற்றிக்கிண்ணத்திற்கான உலகளாவிய வணிக வினா-விடை போட்டியில் பங்குபற்றிய யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள் அணிக்கு யூனியன் வங்கி அனுசரணை வழங்கியது.

உலக வர்த்தகம் தொடர்பான அறிவையும் ஆர்வத்தையும் விருத்தி செய்யும் நோக்கத்துடன் நடாத்தப்பட்ட இப் போட்டி, பாடசாலைப் பிள்ளைகளின் அறிவுத் திறன் , நினைவு மீட்டும் திறன் என்பவற்றைப் பரீட்சிப்பதற்கான ஒருகளமாகவும் அமைந்தது. அணிகளுக்கு இடையிலான போட்டி என்ற வகையில் கூட்டுமுயற்சி, நட்புணர்வு ஆகிய பண்புகளை வளர்க்கவும் இது உதவியது. ஆளுநர் வெற்றிக் கிண்ணத்திற்கான போட்டி இலங்கையில் நடத்தப்பட்டது இதுவே முதற்தடவையாகும்

இப் போட்டி இலங்கை மத்திய வங்கி, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை , இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபை, இலங்கையின் சர்வதேச வர்த்தகச் சம்மேளனம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டு சர்வதேச வினா- விடை சங்கத்தினால் நடத்தப்பட்டது

# இலங்கையில் நடைபெறவிருக்கும் கொழும்பு சர்வதேசத் தேயிலை மாநாடு

கொழும்பு தேயிலை வர்த்தகர்கள் ஒன்றியத்தின் பங்களிப்புடன் இணைந்து ஏற்பாடு செய்த கொழும்பு சர்வதேசத் தேயிலை மாநாட்டை சினமன் கிராண்ட் ஹோட்டலில் இலங்கை தேயிலைச் சபை ஆரம்பித்து வைத்தது. கடந்த 2ஆம், 3ஆம் திகதிகளில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பெருந்தோட்டங்கள் கைத்தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க கலந்து கொண்டார்.

தேயிலை உற்பத்தியில் முன்னணி உற்பத்தி நாடாகவும் ஏற்றுமதி நாடாகவும் இலங்கை விளங்குவதனால் கொழும்பு சர்வதேச மாநாட்டை நடத்துவதையிட்டு நாம் பெருமை அடைகின்றோம். அதுமட்டுமன்றி தேயிலைக் கைத்தொழில்துறையின் 145ஆவது வருட நிறைவை இந்த வருடம் எமது நாடு கொண்டாடுகின்றது'' என இலங்கை தேயிலைச் சபையின் தலைவர் ஜனாகி குருப்பு தெரிவித்தார். ''இது ஒரு சர்வதேச மாநாடாக விளங்குவதனால் அனைத்து தேயிலை உற்பத்தி நாடுகளினதும் ஏற்றுமதி நாடுகளினதும் கருத்துக்களையும், தொழில்நுட்ப அறிவையும் மற்றும் அனுபவத்தையும் பகிர்ந்துகொள்வதற்கு சந்தர்ப்பம் கிட்டும். இது இலங்கைக்கு மட்டுமன்றி பங்குகொள்ளும் ஏனைய நாடுகளுக்கும் பயனளிப்பதாக விளங்கும்.''

இலங்கைத் தேயிலையின் அதிஉயர் தரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் 'Exclusivitea' எனும் தொனிப் பொருளில் இடம்பெற்ற இந்த மாநாட்டிற்கு 167 சர்வதேச பிரதிநிதிகள் உள்ளடங்கலாக 500க்கு மேற்பட்ட பங்குபெறுநர்கள் கலந்துகொண்டனர். கொழும்பு சர்வதேசத் தேயிலை மாநாட்டின் ஏற்பாட்டுக் குழுவின் தலைவரான மைக்கேல் டி சொய்சா இதன் தொனிப் பொருள்பற்றிக் கூறுகையில், ''இலங்கைத் தேயிலையை உலகின் மிகச் சிறந்த தேயிலையாக எடுத்துக் காட்டுவது இந்த மாநாட்டின் குறிக்கோள் ஆகும். எமது நாட்டில் தேயிலை விளையும் பிரதேசங்களில் காலநிலை சுவாத்திய வேறுபாடுகள் காரணமாகப் பல்வேறு சுவையிலும் தரத்திலும் கிடைக்கும் தேயிலையின் சிறப்பை எடுத்து விளக்கவுள்ளோம். மேலும், உலகின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், உற்பத்திச் செயன்முறையின் தரம் மற்றும் எமது உயர்வான தரக்கட்டுப்பாடுகள் காரணமாக இலங்கையின் தேயிலைக் கைத்தொழிற்துறை எவ்விதம் முன்னிலையில் உள்ளது என்பதையும் எம்மால் இங்கு வலியுறுத்த முடியும். நாம் பயன்படுத்தும் கிருமிநாசனிகளும், பூச்சிக் கொல்லிகளும் இலங்கை தேயிலை ஆராய்ச்சிச் சபையின் வழிகாட்டல்களின்படி பின்பற்றப்படுகின்றன. இதனால் தேயிலை இறக்குமதி செய்யும் நாடுகளின் எதிர்பார்ப்பு நியமங்களை எம்மால் பூர்த்தி செய்யக் கூடியதாயுள்ளது. எமது உற்பத்தி நடைமுறைகள் ISO மற்றும் HACCP விதிமுறைகளைப் பின்பற்றி மேற்கொள்ளப்படுகின்றன. நெறிமுறையான தேயிலைப் பங்காண்மை (Ethical Tea Partnership) நியாய வர்த்தக ஒன்றியம் (Fair Trade Organisation) ஆகிய அமைப்புக்களுடனும் தற்பொழுது மழைக்காடுகளின் கூட்டமைப்பு (Rainforest Alliance) என்ற அமைப்புட னும் நாம் இணைந்து செயற்படுகின்றோம். ஆகவே நுகர்வோரின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய நிய மங்களை ஏற்று எமது உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது'' என்றார்.

# Turbo Slim சிகிச்சையை அறிமுகப்படுத்தும் VLCC

உடல்நலன் பராமரிப்பில் முன்னணியில் திகழும் VLCC ஹெல்த் கெயார் லிமிடட், VLCC இன் முதன்மை எடை குறைத்தல் நிகழ்ச்சியான Turbo Slim இனை இலங்கையில் அறிமுகப்படுத்துவதனை அறிவித்தது. எடை குறைத்தல் மற்றும் செண்ரி மீற்றர் குறைத்தலுக்கு அப்பால், மெலிந்த, ஆரோக்கியமான மற்றும் சிறந்த உடல் வாகினை ஏற்படுத்தும் நச்சகற்றலுக்கும் இந்த சிகிச்சை உதவுவதே சிகிச்சையின் பிரதான அடிப்படையாக இருக்கிறது. விஜேரா மவில் அமைந்துள்ள, VLCC நிலையத்தில், VLCC இன் ஸ்தாபகர் மற்றும் அறிவுரையாளர் வந்தனா லூத்ராவினால் இந்த தனித்துவமான நிகழ்ச்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட VLCC Turbo Slim நிகழ்ச்சியானது, இரண்டு மணித்தியால சிகிச்சையாகும். விசேட தொழில்நுட்பங்கள் மற்றும் தயாரிப்புகளின் உதவியுடன் இந்த சிகிச்சை வழங்கப்படும். புறப்பரப்புக்களுக்கான இரத்தச் சுற்றோட்டத்தை விரிவாக்கும் இந்த சிகிச்சை, நிணநீர் வடிகாலுக்கு வசதியளிக்கிறது. உடல் வாகு மற்றும் மெருகேற்றலுக்கு உதவுவதுடன், துரித எடை இழப்பு மற்றும் ஒட்டு மொத்த செண்ரி மீற்றர் இழப்புக்கும் துணை புரிகின்றது. விரிவாக்கம் பெறும் இரத்தச் சுற்றோட்டம் காரணமாக உணவு மற்றும் தசைகளின் குணமாக்கல் மேம்படும்.

இந்த சிகிச்சையைப் பெறுவதற்கு வாரத்திற்கு இரண்டு தடவைகள் VLCC நிலையத்திற்கு விஜயம் செய்தல் போதுமானது. ஒவ்வொரு விஜயத்தின் போதும், 500 கிராம் வரையான எடை இழப்பு மற்றும் அதனுடன் இணைந்த செண்ரி மீற்றர் இழப்பு உறுதி செய்யப்படும். (த)

# மோட்டார் சைக்கிள் பரிசாகக் கிடைத்தது


தென்மராட்சி,பெப்.14

ஹற்றன் நஷனல் வங்கியின் சாவகச்சேரிக் கிளையில் பத்தும் விமன கணக்கு வைத்துள்ள மட்டுவில் வாசிக்கு மோட்டார் சைக்கிள் பரிசாகக் கிடைத்துள்ளது.

இந்தக் கணக்கு வைத்துள்ள வங்கி வாடிக்கையாளர்களுக்கான கிளை மட்டச் சீட்டிழுப்பில் மட்டுவில் தெற்கைச் சேர்ந்த ரி.மதிபரன் என்பவருக்கே மோட்டார் சைக்கிள் பரிசாகக் கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற சீட்டிழுப்பில் கொழும்பு கொட்டாஞ்சேனை கிளையில் கணக்கு வைத்துள்ள தமிழருக்கு 220 லட்சம் ரூபா பெறுமதியான பென்ஸ் கார் பரிசாகக் கிடைத்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

# கொழும்பில் திறக்கப்பட்டுள்ள 'earth essence' Gallery



தரமுள்ள மூலிகை அழகு சாதனங்கள் மற்றும் தனிநபர் பராமரிப்பு உற்பத்திகள் ஆகியவற்றின் முன்னணித் தயாரிப்பாளர்களான Link Natural Products தன்னுடைய 'earth essence' Gallery நிலையத்தை டிசம்பர் 8ஆம் திகதி முக்கிய அதிதிகள், வாடிக்கையாளர்கள், ஊடகப் பிரிவினர் ஆகியோர் முன்னிலை யில் கோலாகலமாக ஆரம்பித்து வைத்துள்ளது.

இந்த நிலையத்தில் நவீன LINK மூலிகை தனிநபர் அழகு சாதனப் பொருள்களை வாடிக்கையாளர்கள் தற்போது பெற்றுக் கொள்ள முடியும்.

இதன் மேனிப் பராமரிப்பு சாதனங்களில் Facial cleanser, toner, Facial massage cream, Face mask, Face scrub, Facial moisturizer, Sunburn lotion மற்றும் moisturizing lip balm போன்றவை அடங்குகின்றன. இதைவிட, Herbal Anti Wrinkle Cream மற்றும் Herbal Stretch Mark Cream போன்றவை இதன் விசேட தயாரிப்புகளாகும். குளியல் சார்ந்த தயாரிப்புகளில் Bath oils, Bath salts, Body scrubs, moisturizing Body lotion முதலியவை உள்ளடங்குகின்றன. earth essence இன் Spa தயாரிப்புகள் நான்கு பிரிவுகளில் கிடைக்கப்பெறுகின்றன. Pure Essential oils, Carrier oils, Massage oils மற்றும் Essential oil blends ஆகியவையே இவையாகும். இவை உலகின் மிகவும் சிறந்த இயற்கை எண்ணெய்களை வழங்குகின்றன. நாட்டின் முன்னணி Spa நிலையங்களில் இத்தயாரிப்புகள் பயன்படுத்தப்படுகின்றன. அனைத்து LINK உற்பத்திகளும் விஞ்ஞான ரீதியில் பரீட்சிக்கப்பட்டு விசேட தகைமை வாய்ந்த LINK ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவினால் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு தரம் உறுதிசெய்யப்பட்ட பின்பே சந்தைப்படுத்தப்படுகின்றன. 'earth esence' Gallery இல. 4, டீல் பிளேஸ் A, கொழும்பு - 3 (Duplication Road on the landside) எனும் முகவரியில் அமைந்துள்ளது. வாரத்தில் ஏழு நாட்களும் மு.ப.10 முதல் பி.ப.6.30 வரை இது திறந்திருக்கும். (த)




எல்.பி. பினான்ஸ் சுன்னாகம் கிளையின் முதலாம் ஆண்டு [illegible] முன்னிட்டு வாழ்வகத்துக்கு அலுமாரி ஒன்றை எல்.பி. [illegible] முகாமையாளர் சே.தவசீலன் வழங்குகிறார். (த)

# ஹமீடியாவுக்கு இரட்டை வெற்றி

இலங்கையின் ஆண்கள் ஆடைத்துறையில் நிபுணத்துவம் பெற்ற முன்னணி நிறுவனமான ஹமீடியா, அண்மையில் நடைபெற்ற NASCO விருது வழங்கல் நிகழ்வின் போது இரு பிரிவுகளில் இரு தேசிய வெற்றியாளர்களை முன்னிலைப்படுத்தியது.

''நாகரிகம் மற்றும் ஆடைகள்'' (Fashion and Clothing) பிரிவில் தங்க விருதினை கண்டி, ஹமீடியா விற்பனை நிலையத்தில் பணிபுரியும் நிறைவேற்று அதிகாரியான சம்பத் விஜேகோன் பெற்றுக் கொண்டார். அத்துடன் ''ஆண்டின் மிகச் சிறந்த நிறைவேற்று அதிகாரி விருதினை'' வெற்றி கொண்டதன் [illegible] விஜேகோன் இரட்டை வெற்றியையும் தமதாக்கிக் கொண்டார்.

அதேவேளை, ''நாகரிகம் மற்றும் ஆடைகள்'' (Fashion and Clothing) பிரிவில் வெண்கல விருதினை சில்லறை விநியோகப் பகுதி நிறைவேற்று அதிகாரி அலெக்ஸ் இனொஸ் வென்றெடுத்தார். ஹமீடியா முகாமைத்துவப் பணிப்பாளர் பௌசுல் ஹமீட், ஹமீடியா நிறுவனத்தின் குழுச் செயற்பாட்டாளர்கள் இவ்வாறான முறையில் அங்கீகரிக்கப்படுகின்றமையை காண்பதற்கு எமக்கு மிகவும் உற்சாகமாக இருக்கின்றது என்றார். அவர் மேலும் கூறுகையில், ''பல்வேறு சிறப்பம்சங்களுடன் சந்தையில் முன்னணியில் திகழும் நிறுவனங்களுடன் எமது நிலையை நாம் ஸ்திரப்படுத்திக் கொண்டுள்ள நிலையில் இந்த விருதினை வெற்றிகொள்வது உன்னதமான கௌரவமாகும்'' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியளம் கேட்டீர்களா?

## புதியன புகுந்து கொள்வதால்...

பழையன கழிதலும், புதியன புகுதலும் காலத்துக் கேற்ப நடப்பவைதான். தொழிநுட்ப வளர்ச்சியின் விளைவாகப் பல பொருள்கள் புதிது புதிதாக வந்து சேருகின்றன. கூடவே பயன்படுத்தப்பட்டு வந்த பொருள்களும், அவை சார்ந்த நடைமுறைகளும் வழக்கொழிந்து வருகின்றன. பல பொருள்களின் பெயர்கள் புழக்கத்தை விட்டு மறைந்து கொண்டிருக்கின்றன. கடந்த நூற்றாண்டின் முன் அரைப் பகுதியில் எல்லோர் வாயிலும் ஒலித்த துலா, பட்டை, சூத்திரக் கிணறு என்பன இன்று வழக்கொழிந்து போய்க் கொண்டிருக்கின்றன. காதில் அணிந்த கடுக்கண், வாளி, மிருதுகட்டை, காலில் அணிந்த மிதியடி எல்லாம்



இன்று காண அரிதான பொருள்கள். ஏதோ, இளைஞர்கள் பலரும் இன்று ஒற்றைக் காதில் கடுக்கண் அணிவதைப் பார்க்கிறோம்.

காலை நீராகாரமாக அன்றிருந்த பழந்தண்ணி என்ற சத்துணவு இன்று புழக்கத்தில் இல்லை. இது போலவே பல உணவுகளும் இன்றில்லை. தோட்டச்சு, கொக்கீஸ், சீடை, தொக்கடா, அரியதரம், சுவாலைப் பிட்டு, பால் பிட்டு என பலவகைச் சிற்றுண்டிகளும் வழக்கொழிந்து கொண்டிருக்கின்றன. பதிலாக நூடில்ஸ், பாண், பேஸ்ரி, கேக் என அவை மாறிக் கொள்கின்றன.

கூழ் புழக்கத்தில் இருந்து மறைந்து கொண்டிருக்கிறது. பதிலாக சூப் கடைகளில் இளைஞர்கள் பணம் கொடுத்து காளான் சூப்பும், மரக்கறி சூப்பும், 'சிக்கன்' சூப்பும் அருந்திக் கொண்டிருக்கின்றனர்.

நமது பஞ்சாங்கங்களில் உள்ள சில விடயங்களையும் நீக்க வேண்டும் என்று எனது நண்பரொருவர் சொன்னார். ஏனெனில் பஞ்சாங்கங்களில் சில செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான நாள், நேரம் குறிப்பிடப்பட்டிருக்கும். அந்த நாள்களில்தான் இத்தகைய நற்காரியங்களை மேற்கொள்வார்கள். அவற்றில் கலப்பை, கொழு புதுப்பித்தல், மாட்டுக்குக் குறி சுடுதல், நலமடித்தல், நுகம் வைத்தல், ஏர்மங்கலம், வீடு வேய்தல், ஓலை வெட்டுதல் எனப் பஞ்சாங்கத்தில் கூறப்பட்ட விடயங்கள் நமது வாழ்வில் இருந்து அகன்று கொண்டிருக்கின்றன.

இவற்றில் சில வேலைகள் கூட நாள் பார்த்து, பஞ்சாங்கம் பார்த்து குறித்த நேரத்துக்குச் செய்யப்படுவதில்லை. இப்போது சூடு வைத்தல், சூடு மிதித்தல் போன்ற செயற்பாடுகளும் குறையத் தொடங்கி விட்டன. அரிவு வெட்ட ஆள்களைத் தேடுவது பெரும் பிரச்சினையாகிவிட்டது. இப்போது பெரிய பெரிய இயந்திரங்கள் சில மணி நேரத்தில் அரிவு வெட்டி, சூடடித்து, நெல்லைச் சாக்கிலிட்டுத் தருகின்றன. இயந்திரத்துக்கு வசதியான நாளும் நேரமுமே நல்ல நேரமாகும்.

கூரை வேய நாள் நேரம் பார்த்தவர்கள் ஓடு வேயவோ, கூரைத்தகடு போடவோ நேரம் பார்ப்பதில்லை. கொழுக்கள் பலவும் இரும்பு விலைக்கு விற்கப்பட்டு விட்டன. ஆடுகால்கள் பிடுங்கப்பட்டு அந்த இடங்களில் மோட்டர் வைக்கும் அறைகள் கட்டப்பட்டு விட்டன.

ஆக, பழையன கழிகின்றன.புதியன புகுகின்றன. கால மாற்றம் எமது வாழ்வை மட்டுமல்ல எமது பாரம்பரியங்களை, வழக்காறுகளையே மாற்றிக் கொண்டிருக்கின்றன. அவை மாறட்டும். இந்த மாற்றங்களை எம்மால் தடுக்க முடியாது.

ஆனால் எமது கடந்த வாழ்வைச் சொல்லும் இத்தகைய பொருள்களும், செயல்களும் ஆவணப்படுத்தப்பட வேண்டும். காலத்திலிருந்து அகலும் பழம் பொருள்கள் எமது மரபுரிமைச் சின்னங்களாக, அரும்பொருள்களாகப் பேணப்பட வேண்டும். இதில் யார் தான் கவனம் செலுத்துவர்...?

விழிச்சான் குஞ்சு.

# மாணவர்கள் இடைவிலகலை தவிர்க்க நடவடிக்கை தேவை

யாழ்ப்பாணம், பெப்.14

யாழ்.மாவட்டத்தில் சுமார் ஆயிரம் மாணவர்கள் பாடசாலைக் கல்வியிலிருந்து இடைவிலகியுள்ளதாக புள்ளிவிவரதரவுகள் மூலம் அறிய முடிகிறது.

எனவே இனிவருங்காலங்களில் கல்வி இடைவிலகல் இல்லாத சமூகத்தை உருவாக்க கல்வித் துறைசார்ந்தவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என யாழ். வணிகர் கழகத் தலைவர் ஆர். ஜெயசேகரம் தெரிவித்தார்.

வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில் கடந்த வியாழக்கிழமை அச்செழு மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை தரம் ஐந்து வரையான மாணவர்கள் 44 பேருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்வில் உரை நிகழ்த்தும் போது வணிகர் கழகத்தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தெரிவிக்கையில்:-

வர்த்தகர்களாகிய நாங்கள் வர்த்தக நோக்கத்தை மட்டும் இலக்காகக் கொண்டு செயற்படவில்லை.

பெண் தலைமைத்துவ குடும்பங்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக உதவியிருக்கிறோம். யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

கல்வி முன்னேற்றத்துக்காக மாணவர்களுக்கு நேரடி உதவிகளை வழங்கவும் நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

முன்னெடுக்கப்பட்டு வரும் இலவசக் கல்வி கட்டாயக் கல்வித் திட்டங்களின் பலாபலன்களை வறிய மக்களும் அனுபவிக்க வேண்டும். இதற்குப் பெற்றோர்கள், கல்வித் துறை சார்ந்தவர்கள் பங்களிக்க வேண்டியுள்ளது.

**முன்னெடுக்கப்பட்டு வரும் இலவசக் கல்வி கட்டாயக் கல்வித் திட்டங்களின் பலாபலன்களை வறிய மக்களும் அனுபவிக்க வேண்டும். இதற்குப் பெற்றோர்கள், கல்வித் துறை சார்ந்தவர்கள் பங்களிக்க வேண்டியுள்ளது.**

பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வியில் அக்கறை காட்ட வேண்டும். சில பின்தங்கிய பகுதிகளில் பிள்ளைகளின் கல்வியில் பெற்றோர் அக்கறைகாட்டுவதில்லை. இது எமது சமூகத்துக்கு சாபக்கேடான விடயமாகும்.

கட்டாயக் கல்வி, இலவசக் கல்வித் திட்டங்கள் மூலம் எமது பகுதிச் சிறார்கள் நன்மை அடைவதனை உறுதிப்படுத்த வேண்டும்- என்றார்.

இந்த நிகழ்வில் வணிகர் கழக செயலாளர் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

(எ-03)

## கற்கை நெறிகளுக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், பெப்.14

யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியின் தேசிய தொழில் தகைமை மட்டம் 5டிப்ளோமா தரக் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

முழு நேரக் கற்கை நெறியில் தொலைத்தொடர்பு தொழில் நுட்பவியல், தன்னியக்க மோட்டார் வாகன தொழில்நுட்பவியல், தகவல் தொலைத் தொடர்பு தொழில்நுட்பவியல் மற்றும் மின்னால் காய்ச்சி ஒட்டுதல் தொழில் நுட்பவியல் போன்ற கற்கைநெறிகளும், பகுதி நேரக் கற்கைநெறியில் நிர்மாண தொழில் நுட்பவியல் கற்கை நெறி ஆகிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப் படவுள்ளன.

இந்தக் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் 17 வயதுக்கு மேற்பட்டவராகவும், தேசிய தொழில் தகைமை மட்டம் மூன்று அல்லது நான்கினையும் பெற்றிருத்தல் வேண்டும்.

ஆர்வமுடைய மாணவர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னதாக யாழ். தொழில் நுட்பவியல் கல்லூரிக்கு நேரடியாகச் சமுகம் தந்து விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும். (எ-14)

* * *

யாழ்ப்பாணம் பெப்.14

யாழ். தொழில் நுட்பவியல் கல்லூரியினால் மூன்று மாத கால ஆங்கில அடிப்படைக் கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

அத்துடன் ஆறுமாதகால தொழில் தேடுபவர்களுக்கான தொடர்பாடல் ஆங்கிலக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன.

ஆங்கில அடிப்படைக் கற்கை நெறிக்கு 2011ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றியவர்களும் தொடர்பாடலில் ஆங்கிலக் கற்கை நெறிக்கு க.பொ.த சாதரண தரப் பரீட்சையில் இரு தடவைக்கு மேற்படாமல் ஆங்கிலத்தில் திறமைச்சித்தி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(எ -14-325)

## கிராம மட்ட சங்கங்கள் ஊடாக அபிவிருத்தியை மேற்கொள்ள முடியும்

### சனசமூக அபிவிருத்தி அதிகாரி

யாழ்ப்பாணம், பெப்.14

கிராம அபிவிருத்தியையும் - பிரதேச அபிவிருத்தியையும் முன்னெடுப்பதற்கு அங்கு பலம் பொருந்திய அமைப்பாக செயற்படுபவை கிராம மட்டச் சங்கங்களே.

இதில் சன சமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், மீனவர் சங்கம், விவசாய அமைப்புக்கள், விவசாய சம்மேளனங்கள், பொது அமைப்புகள் என்பன முழுமையாக வினைத்திறனுடன் இயங்குமாயின் அங்குள்ள கிராம - நகரம் பெரும் வளர்ச்சியை அடையும் என யாழ். பிராந்திய உள்ளூராட்சித் திணைக்கள சிரேஷ்ட சன சமூக அபிவிருத்தி அதிகாரி நா.மகேந்திரன் தெரிவித்தார்.

பிரதேச மட்ட அபிவிருத்தியைச் சங்கங்கள் ஊடாகவே முன்னெடுக்கலாம் எனும் தொனிப்பொருளில் வேலணை சனசமூக நிலையத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் மகேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவிக்கையில்;

எமது பிரதேச நிர்வாகத்தில் உள்ள சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், பொது அமைப்புக்கள் என்பனவற்றின் பொதுவான நோக்கம் கிராமத்தை அபிவிருத்தி செய்தலே ஆகும்.

இதனடிப்படையில் சகல அபிவிருத்திச் சங்கங்களும் பொதுவாக ஒவ்வொரு பிரதேச சபை - பிரதேச செயலக பிரிவிலும் செயற்படுகின்றன.

ஒவ்வொரு 10 கிராமங்களையும் சிறந்த முறையில் அபிவிருத்தி செய்வதற்கு 10 கிராமங்களை உள்ளடக்கி ஒரு சமூக அபிவிருத்தி நிறுவனம் என்ற ஒரேயொரு அமைப்பை உருவாக்கி அதன் மூலம் கிராமத்தின் சகல துறைகளான கைப்பணி, விவசாயம், மீன்பிடி, உட்கட்டுமானம் போன்றவற்றை முன்னெடுத்து செயற்படுத்தலாம்.

இதற்காக சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், சமூக சேவைகள் உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், நன் நடத்தை உத்தியோகத்தர், விளையாட்டு உத்தியோகத்தர் போன்ற அதிகாரிகளுக்கு ஒரே பதவி நிலை உத்தியோகத்தை வழங்கி அதாவது கிராம அபிவிருத்தி அதிகாரி பதவியை வழங்கி அந்தத் துறையில் அவர்களை கிராம அபிவிருத்தியில் ஈடுபடுத்தலாம்.

**10 கிராமங்களை உள்ளடக்கிய சமூக அபிவிருத்தி நிறுவனத்துக்கு ஒரு பெரிய நிதியை வழங்கி அதற்கான பல அபிவிருத்தி உத்தியோகத்தர் மூலம் தேவைகளை இனம் கண்டு விரைவாகத் திட்டங்களை நிறைவேற்றலாம்.**

தற்போது கிராமத்துக்கு ஒன்று என்ற முறையில் இக் கிராமிய மட்ட நிறுவனங்கள் உள்ளன.

இவற்றுக்கான நிதி பரம்பல் வழங்குவது என்பது கஷ்டமானதாக உள்ளது.

ஆனால் 10 கிராமங்களை உள்ளடக்கிய சமூக அபிவிருத்தி நிறுவனத்துக்கு ஒரு பெரிய நிதியை வழங்கி அதற்கான பல அபிவிருத்தி உத்தியோகத்தர் மூலம் தேவைகளை இனம் கண்டு விரைவாகத் திட்டங்களை நிறைவேற்றலாம்.

சனசமூக அபிவிருத்தி அதிகாரி, கிராம அபிவிருத்தி அதிகாரி, சமூக சேவை அதிகாரி போன்ற அனைவரும் இந்த 10 கிராமங்களுக்கும் உரியவர்கள்.

இவர்கள் ஒரே தலைமையின் கீழ் இயங்குவதனால் ஒருங்கிணைந்த ரீதியில் பல் பரிமாண அபிவிருத்திகளை ஒருங்கே முன்னெடுக்கலாம் என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வீதி, முன்பாக)
தொலைபேசி: 021-2280065
தொலைநகல்: 021-2280066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021-2262395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021-2270323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 0212263206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 0214901519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 0212270399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0755732271, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார்: 0232223311

## மோசடி! கவனம்!

போர் முடிந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் நேரடி மற்றும் நிழல் நிர்வாகங்கள் வடக்கில் இருந்து அகற்றப்பட்ட பின்னர்தமிழ்ச் சமுதாயம் சீரழியும் வீதம் மிக வேகமாக அதிகரித்துச் செல்கிறது. மாதாந்தம் வெளியிடப்படும் அரச புள்ளிவிவரங்களே இந்த உண்மையை வெளிப்படுத்தி நிற்கையில் உண்மை நிலை அதைவிட அதிகமாக இருக்கும் என்பது கண்கூடு.

சமூகச்சீரழிவு என்பவை வெறுமனே பாலியல் பிறழ் நடத்தைகள் மட்டுமல்ல. இந்தச் சமூகத்தில் புரையோடிப் போயிருந்த ஆனால், கடந்த காலங்களில் வழங்கப்பட்ட [புலிகளால்] கடும் தண்டனைகளால் குறைந்து போயிருந்த அனைத்து வகையான சீரழிவுகளும் மீண்டும் மிக வேகத்தில் வளர ஆரம்பித்திருப்பது தமிழ்ச் சமூகத்தை மெல்ல மெல்ல சாகடிக்க ஆரம்பித்திருக்கின்றன.

தமிழ்ச் சமூகத்தை மெல்ல மெல்ல அரித்துவரும் மற்றொரு சீரழிவு ஏமாற்று மோசடி. போர் முடிந்த கையோடு தடுப்பில் உள்ளவர்களை மீட்டுத் தருவதாகக் கூறிப் பலரிடம் பல லட்சம் ரூபாய்கள் மோசடி செய்யப்பட்டன. நம்பிப் பணத்தைக் கொடுத்தவர்கள் அதனை வெளியேயும் சொல்லமுடியாமல் கொடுத்த பணத்துக்கு எந்தப் பயனும் கிடைக்காமல் அல்லாடிக் கொண்டிருக்கிறார்கள்.

அதன் பின்னரான காலத்தில் வன்னியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி உதவிகளை வழங்குவது அல்லது மருத்துவச் செலவுக்கு நிதி சேகரிப்பது என்ற ரீதியில் சின்னச் சின்ன மோசடிகளில் சிலர் ஈடுபட்டனர்.

இப்போது தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி மோசடி செய்யும் வியாபாரம் பரவலாக ஆரம்பித்துள்ளது. ஆசிரியர் நியமனத்துக்காக போலி நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்ட மோசடி குறித்த செய்திகள் பத்திரிகையில் வெளியாகி இருந்தது. இந்த நியமனக் கடிதம் ஒன்றைப் பெறுவதற்கு 5 லட்சம் வரை பணம் கொடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

''உங்களுக்கு நியமனக் கடிதம் கையில் கிடைத்ததும் பணத்தைத் தந்தால் போதும்'' என்ற வாசகங்களில் மயங்கிப் போபவர்கள் தங்கள் கைகளில் கிடைப்பது உண்மையான நியமனங்களா போலி நியமனங்களா என்பதைச் சோதித்தும் பார்ப்பதில்லை. நியமனம் கிடைத்தது என்ற சந்தோஷத்தில் பணத்தைக் கொடுத்துவிட்டு ஏமாந்துபோய் நிற்கிறார்கள்.

ஆசிரியர் நியமனங்கள் என்றில்லை, இத்தகைய நியமனக் கடித மோசடி வங்கித் துறையிலும் பலமாக நடப்பதாகத் தகவல்கள் வருகின்றன. அதிலும் சோகம் தாம் வேலை பெற்றுக் கொடுப்பதாக நம்ப வைப்பதற்காக காசு கொடுத்தவர்களை வங்கிகளுக்கு அழைத்துச் சென்று உள்ளே படிவம் நிரப்பும் பணிகளையும் கொடுத்துவிட்டுச் சென்று விடுகிறார்களாம். அதனையும் நம்பிக் கொண்டு செல்பவர்களுக்கு ஓரிரு நாள்களின் பின்னர்தான் உண்மை தெரிய வருகிறது.

இத்தகைய மோசடியில் ஈடுபடுபவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்கள்தான். தவித்த முயல் அடிப்பதே இவர்களின் நோக்கம். யார் பாதிக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களை நாடி உதவி செய்வது போன்று ஏமாற்றி விட்டுச்சென்று விடுகிறார்கள். அரச கட்சி அல்லது அரசு சார்பான கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றே இத்தகையவர்கள் தம்மை அடையாளம் காட்டிக் கொண்டு மோசடி செய்து வருகிறார்கள்.

ஏமாறுபவர்கள் இருக்கும்வரை ஏமாற்றுபவர்களும் இருப்பார்கள் என்று சொல்லிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. பொலிஸாரும் சம்பந்தப்பட்ட துறைசார் அதிகாரிகளும் இவற்றைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மக்களும் விழிப்பாகவே இருக்க வேண்டும்.

# பிசாசுகளிடம் இருந்து வேலை வாங்க முடியாது

சர்வாதிகாரியாக முயல்வோர் இராணுவத்தை சகல நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்துவதன் நோக்கம் தமது இருப்பையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதே

*(கிறிஸ்ரீன் கரில் 24.01.2012)*

**வீ.எஸ்.ரி.**

சில இடங்களில் சுவர்கள் அமைக்கப்படுவதில்லை; வேறு சில இடங்களில் அவை உடைத்தழிக்கப்படுவதில்லை. தேவையற்ற இடங்களில் சுவர்கள் அமைக்கப்படுவதும் அவசியமான இடங்களில் உள்ள சுவர்கள் உடைக்கப்படுவதுமே இலங்கையில் இடம்பெறும் பாரதூரமான தவறுகளாகும்.

எமது கல்வித்துறை நாம் அனைவரும் இலங்கையர்களே என்ற நிலைப்பாட்டை எமது சமூகங்கள் மத்தியில் உருவாக்கவில்லை. நாட்டின் பெரும்பாலான பாடசாலைகள் இன, மத ரீதியாக வெளிப்படையாகவே பிரிந்து கிடக்கின்றன. இவற்றுடன் நமது முன்னோர்களின் பாரம்பரிய அடையாளங்கள் ஒன்றாக பின்னிப் பிணைந்துள்ளன.

பிள்ளைப் பராயம், இன மத வேறுபாடுகளை முன்னிலைப்படுத்தி அமைவதில்லை. ஆயினும் மெல்ல மெல்ல அவை பிள்ளைகளிடம் வளர்க்கப்படுகின்றன. இவற்றின் அடிப்படையில் ஏற்படும் புரிந்துணர்வின்மை, மற்றும் எதிர்மறைச் சிந்தனைகள் சமூகத்தின் வயதானவர்களிடமும் வியாபித்துச் செல்கிறது.

அதிகார ஆசை காரணமாக முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க அரச அதிகாரம் பெரும்பான்மை இனத்தவர்களின் சொத்து என்ற மன உணர்வை சிங்கள மக்கள் மத்தியில் உருவாக்கி வைத்தார். 1956 இல் சிங்களம் மட்டும் சட்டத்தை உருவாக்கியதன் மூலமும் 1972ஆம் ஆண்டில் தூரநோக்கற்ற அரசமைப்பு ஒன்றை உருவாக்கியதன் மூலமும் ஆட்சியாளர்கள் அதனைச் செய்தனர்.

ஒரு காலத்தில் கொள்கை நிலைப்பாட்டை உறுதியுடன் பேணிவந்த இடதுசாரிக் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து அவர்களை நலிவடையவும் வைத்தனர். மொழி ரீதியான ஒதுக்கலுக்கு எதிராக ஆரம்பமான போராட்டத்தால் கடந்த காலங்களில் ஆயுதப் போரும் இந்திய ஆக்கிரமிப்பு அச்சுறுத்தலும் ஏற்பட்டன. ஆட்சி அதிகாரத்துக்கும் மதத்துக்கும் இடையே நேரடியான தொடர்பு இருந்தால் அதன் விளைவு நாசமே என்பதற்கு எமது கடந்த கால வரலாறு சிறந்த உதாரணம். இன்றைய ஆட்சியும் அதேபோக்கிலேயே செல்கிறது.

பரம்பரை பரம்பரையாக அதிகாரத்தைத் தம்வசம் வைத்திருக்க முயலும் ராஜபக்ஷ பரம்பரையினர் தமது இருப்புக்கு அவசியமான மற்றொரு 'ஜனநாயகவாத எல்லைக்கோட்டை' நிர்மாணிக்க இப்போது முயன்று வருகின்றனர். அது இராணுவத்தைப் பொதுப் பணிகளில் ஈடுபடுத்துவதாகும். இதன் மூலம் சமூக இயக்கத்தின் சகல துறைகளையும் இராணுவமயப்படுத்தி நிர்வகிக்க அவர்கள் திட்டமிடுகிறார்கள்.

இன்று சமூகத்தின் சகல செயற்பாடுகளும் இராணுவச் சப்பாத்துகளின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. ஒரு போரின்போது முதலில் பாதிப்புக்கு உள்ளாகுபவை மனித உரிமைகளும் நீதி நிர்வாகமுமே.

கடந்த மூன்று தசாப்தங்களாக துப்பாக்கி முனையில் சட்டத்தையும் ஒழுங்கையும் நடைமுறைப்படுத்திய இராணுவம் இன்றைய சமாதானச் சூழலுக்கு மதிப்பளிக்க வேண்டியதாக இருக்கிறது. ஆனால் போர் மனோநிலையில் இருந்து இராணுவத்தினரை விடுவிக்க அரசு எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. ஈராக், ஆப்கானிஸ்தான் போர்களில் பங்கேற்ற நேட்டோப் படையினர் தத்தம் உளரீதியான பாதிப்புக்களில் இருந்து விடுபட அமெரிக்க அரசு உதவிகளை வழங்கியிருந்தது. ஒழுக்கத்துடனும் கட்டுக்கோப்புடனும் இராணுவம் இயங்க, உளரீதியான உதவிகள் படையினருக்கு வழங்கப்படுவது அவசியம்.

> “
> இராணுவத்தினருக்கு நிதிச் சலுகை, ஓய்வூதியச் சலுகை மற்றும் தொழில் பயிற்சிகளுடன் சுயவிருப்பின் அடிப்படையிலான சேவையிலிருந்து ஓய்வு பெறவைக்கும் திட்டம் என்பவற்றை முன்னெடுத்து படைகளின் எண்ணிக்கையைக் குறைப்பது பயன்தரவல்லது.

போர் முடிந்த பின்னர் இராணுவத்தினரை பெருமளவில் சேவையில் வைத்திருப்பது பெரும் பொருளாதாரச் சுமையே. அத்துடன் சமூக, அரசியல் ரீதியான ஆபத்துக்களுக்கும் அவை வழிவகுக்கின்றன.

இராணுவத்தினருக்கு நிதிச் சலுகை, ஓய்வூதியச் சலுகை மற்றும் தொழில் பயிற்சிகளுடன் சுயவிருப்பின் அடிப்படையிலான சேவையிலிருந்து ஓய்வு பெறவைக்கும் திட்டம் என்பவற்றை முன்னெடுத்து படைகளின் எண்ணிக்கையைக் குறைப்பது பயன்தரவல்லது. அதைவிடுத்து இராணுவத்தினரைப் பொது வேலைத் திட்டங்களில் ஈடுபடுத்துவது மாற்றாக அமைய வாய்ப்பில்லை.

வேலை வாய்ப்பின்மை, வறுமை என்பன காரணமாகவே பெரும்பாலான இளைஞர்கள் இராணுவத்தில் இணைந்தனர். போதிய நிதித் தொகை கிடைக்கக்கூடிய வகையில் ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்படுமானால், பலர் இராணுவத்திலிருந்து ஓய்வுபெறவே விரும்புவர். அதே சமயம் போரில் ஈடுபட்டதன் காரணமாக இராணுவத்தினருக்கு ஏற்பட்ட உளப் பாதிப்புகளுக்கு உரிய சிகிச்சை வழங்கப்படல் அவசியம்.

பெரும்பாலும் பௌத்த சிங்களவர்களான இராணுவத்தினரே பல்லின, மத ரீதியான சமூக மோதல்களை உருவாக்கும் தரப்பினர் என்பது விசேடமாகக் கருத்தில் கொள்ளத்தக்கது.

பொதுப் பணிகளில் இராணுவத்தினரை ஈடுபடுத்துவதன் மூலம் கோத்தபாய ராஜபக்ஷ, தமது குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்கள் தன்னைத் தாண்டி பிரபல்யம் பெறாது தடுக்க முனைகிறார். ஏற்கனவே குடும்பத்துக்குள் நிலவும் அதிகாரப் போட்டியில் இது அவசியமான ஒன்றாக இருக்கிறது.

அது மட்டுமின்றி இராணுவ மயமாக்கலை விரிவுபடுத்துவது சகல ராஜபக்ஷகளுக்கும் நன்மை தருவதாகவே அமையும். இந்த நாட்டின் வாக்காளர்கள் மீதோ, சுதந்திரக்கட்சி மீதோ தாம் ஒருபோதும் முழு நம்பிக்கை கொள்ள இயலாது என்பதை ராஜபக்ஷ குடும்பத்தினர் நன்கறிவர். தமது இன்றைய செல்வாக்குச் சரிந்தால் அதிகாரத்தை அவர்கள் தொடர்ந்தும் தக்க வைக்க இராணுவம் அவர்களுக்கு உதவும்.

அதற்காக ஏனைய ஏகாதிபதிகளைப் போன்றே, இராணுவத்தினர் பொருளாதார ரீதியில் பலம் பெறத்தக்க வழிவகைகளை அவர்கள் உருவாக்கி வருகின்றனர். பெருஞ் செலவீனத்தின் மத்தியிலாவது, அபிவிருத்தி மற்றும் நிர்மாணப் பணிகளுக்கென தனியான நிறுவனம் ஒன்றை அவர்கள் உருவாக்க முயல்வதன் இரகசியம் இதுவே.

பொதுப் பணிகளில் இராணுவத்தினரை ஈடுபடுத்துவதால், பொதுமக்களுக்குக் கிட்ட வேண்டிய வேலை வாய்ப்பும் வருமானமும் தடுக்கப்படுகின்றன. நாட்டின் வடபகுதி மக்களில் பலர் வேலைவாய்ப்பு அற்றிருக்கும் நிலையில், இராணுத்தினரை அந்தப் பணிகளில் ஈடுபடுத்த முனைவது, அம் மக்களின் வேலை வாய்ப்புகளுக்கு வேட்டு வைப்பதாக அமைகிறது. இது சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

இராணுவத்தினரைப் பொதுப் பணிகளில் ஈடுபடுத்துவது மற்றும் அவர்களது தேவைகளை அவர்களே நிறைவேற்றிக்கொள்ள அனுமதிப்பது என்பவை, பயங்கர விளைவுகளை ஏற்படுத்த வல்லவை. தனது செயற்பாடுகள் குறித்த அவர்களது எண்ணம் மாறினால், அது சுயலாப நோக்குக் கொண்ட பிரிவாக உருவெடுக்க வாய்ப்பாக அமையும். அத்தகைய நிலை ஒன்றில் வளர்த்த கடா மார்பில் பாய்வதைத் தடுக்க முடியாது போகும்.

இராணுவ மயப்படுத்தப்பட்ட சமூகமொன்று, விமர்சனங்களைப் பொருட்படுத்துவதில்லை. இத்தகைய கட்டமைவு மற்றும் கீழ்ப்படிவுத் தன்மை ஜனநாயகவாதத்துக்குப் பொருந்தாது. ஆனால், அது ஏகாதிபத்தியவாதத்துக்கு அத்தியாவசியமானது. அப்படிப்பட்டதொரு தொண்டர் இராணுவமே தமக்கு அவசியம் என்பதால் ராஜபக்ஷ குடும்பத்தினர் பல்கலைக்கழக புதுமுக மாணவர்களுக்கு இராணுவ முகாம்களில் கட்டாயப் பயிற்சி வழங்குகின்றனர். அதன் மூலம் இந்த நாட்டில் பூரண ஏகாதிபத்தியத்தை நிலைநிறுத்த முயற்சிக்கின்றனர்.

பௌத்த விகாரையின் எல்லை மதிலை அமைக்க பிசாசு ஒன்றை பிக்கு ஒருவர் வேலைக்கு அமர்த்தினார். பிக்கு கூறிய வேலைகள் அனைத்தையும் பிசாசு நொடிப்பொழுதில் செய்து முடித்துவிட்டு அடுத்த வேலைக்காக பிக்குவின் முன்னால்ள நின்றது. பிசாசுக்கு வேலை கொடுக்க முடியாமல் பிக்கு ஒருநாள் தலையைப் பிய்த்துக் கொண்டாராம். ஆத்திரத்தில் ''இனி ஒரு வேலையும் இல்லை. என்னைப் பிடித்துத் தின். அதுதான் மிச்சம் இருக்கிறது'' என்றாராம் பிக்கு. பிசாசு அவரது கட்டளையை உடனே நிறைவேற்றி விட்டதாம். பிசாசைக் கட்டிக் கொண்ட அந்தப் பிக்குவின் நிலைதான், பொதுப் பணிகளில் இராணுவத்தை அளவுக்கு அதிகமாக ஈடுபடுத்தி சிவில் அதிகாரங்களை அதன் கைகளில் கொடுப்பதால் விளையக் கூடியதும். ராஜபக்ஷ குடும்பத்தினர் மத்தியில் அதிகாரப் போட்டி நிலவுவது உண்மையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் ஆசிரியர் இடமாற்றம்:
# முன்னேறத் துடிக்கும் வன்னி மாணவர் கதி என்ன?

■ காளிதாசன்

வடக்கில் ஆசிரியர்களுக்கான இடமாற்றம் அடுத்த மாதம் நடைமுறைக்கு வரவுள்ளது. இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த இந்த நடவடிக்கை மீளநடைமுறைக்கு வரும்போது மீண்டும் கசமுசாக்கள் தொடங்கும்.

யாழ். மாவட்டத்தின் தீவகத்திலும், வன்னியிலும் கடமையாற்றும் ஆசிரியர்கள் பலர் யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களிலுள்ள வசதியான பாடசாலைகளுக்கு இடமாற்றம் கோரி வருகின்றனர். கஷ்டப்பிரதேசத்தில் போதியளவு சேவையை வழங்கியுள்ளமையால் இவர்கள் தாம் விரும்பும் மாவட்டத்திற்கு இடமாற்றம் பெறுவதற்குரிய தகைமையைக் கொண்டுள்ளனர்.

பல்வேறு இடர்களுக்கு மத்தியில் சேவையாற்றி வரும் இவர்களது கோரிக்கை நியாயமானதே. இவர்களது கோரிக்கையை மாகாணக் கல்வியமைச்சு ஏற்றுக்கொண்டு செயலில் இறங்கியது. தீவகம், வன்னி போன்ற பிரதேசங்களிலிருந்து இடமாற்றம் கோருவோரின் விவரங்களை வவுனியா, யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி வலயக்கல்விப் பணிமனைகளுக்கு அனுப்பியது. வன்னி, தீவகப் பிரதேசங்களிலிருந்தும், ஏனைய பிரதேசங்களிலிருந்தும் 390 விண்ணப்பங்கள் மாகாணக் கல்வியமைச்சுக்குக் கிடைத்தன. 390 ஆசிரியர்களுக்குப் பதிலீடாகவும், வன்னி மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்குடனும் 700 ஆசிரியர்களை வன்னிக்கு இடமாற்றம் செய்வதற்கு வடமாகாணக் கல்வியமைச்சு தீர்மானித்தது.

முல்லைத்தீவு கல்வி வலயத்துக்கு 1,041 ஆசிரியர்கள் தேவையாகவுள்ளனர். ஆனால் 735 ஆசிரியர்களே பணியாற்றுகின்றனர். இதேபோல் வவுனியா வடக்கு, கிளிநொச்சி, துணுக்காய், மடு கல்விவலயங்களிலும் கணிசமான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. பாடரீதியாக கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களைப் போதிப்பதற்கு ஆசிரியர்கள் அரைவாசிப்பேரே உள்ளனர். ஆங்கில ஆசிரியர்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

இந்த நிலையில் யாழ் மாவட்டத்திலுள்ள யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி வலயங்களுக்கும் வவுனியா தெற்கு வலயத்துக்கும் இடமாற்றம் செய்வதற்கு யார் யாரைத் தெரிவு செய்யலாம்? யார் யாருக்கு விலக்களிக்கலாம் என்பது பற்றிய சுற்றறிக்கையை ஓகஸ்ட் 2011 இல் வடமாகாணக் கல்வியமைச்சு அனுப்பியது. இதன் பிரகாரம் இடமாற்றம் செய்யப்படக்கூடியவர்களின் தராதரம் பின்வருமாறு இருக்க வேண்டுமென வடமாகாணக் கல்வியமைச்சு அறிவித்தது.

1 ஆறு வருடங்களுக்கு மேல் (யாழ்) மாவட்டத்தில் சேவையாற்றியவர்கள்.

2 வெளி மாவட்டத்தில் குறைந்தது இரண்டு வருடங்களேனும்சேவைசெய்தவர்கள்.

3 45 வயதுக்குட்பட்ட பெண்கள்

4. 50 வயதுக்குட்பட்ட ஆண்கள்

5. மாவட்டத்தின்கஷ்டப்பிரதேசத்தில் சேவை செய்யாதவர்கள். (கஷ்டப் பிரதேசம், அதிக கஷ்டப் பிரதேசம் தொடர்பில் சுற்றறிக்கைக்கு மேலதிகமாக ஆசிரியரின் சொந்த வதிவிடம், போக்குவரத்து வசதிகள் மற்றும் ஏனைய வசதிகளைக் கருத்தில் கொண்டு இடமாற்ற சபை தீர்மானத்தை மேற்கொள்ளும்.) மேற்படி 5 விடயங்களும் யாருக்குப் பொருந்துகிறதோ அந்த ஆசிரியர்களுக்கு வன்னிக்கு அல்லது தீவகத்துக்கும் இடமாற்றம்வழங்கப்படவேண்டும்.

**தீவகம்,வன்னி வலயங்களிலுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை**

| வலயம் | பாடசாலைகளின் எண்ணிக்கை |
|---|---|
| தீவகம் | 56 |
| வவுனியா வடக்கு | 90 |
| கிளிநொச்சி | 91 |
| முல்லைத்தீவு | 36 |
| துணுக்காய் | 55 |
| மன்னார் | 77 |
| மடு | 40 |

மேற்படி 5 விடயங்களும் பொருந்துகின்ற ஆசிரியர்களில் பின்வரும் காரணங்களில் பொருந்தி வருவோருக்கு இடமாற்றத்திலிருந்து விலக்களிக்கப்படும்.

1. விஷேட நோய்களால் பாதிக்கப்பட்டோர். (காசநோய், புற்றுநோய் போன்றன.)

2. கர்ப்பவதிகள்

3. ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைக்குப் பாலூட்டும் தாய்மார் ஆகியோருக்கு விலக்களிக்கப்படலாம்.

இடமாற்றத் தெரிவின்போது சேவை மூப்பு உடையவர்களுக்கும், உச்ச வயதெல்லை உடையவர்களுக்கும் முன்னுரிமை அளித்து இடமாற்றம் செய்யப்படவேண்டுமென மாகாணக் கல்வித் திணைக்களம் வலியுறுத்தியது. கணவன் மனைவி இருவரும் இடமாற்றத்துக்குத் தகுதி பெற்றிருப்பின் ஒருவரை மட்டும் இடமாற்றம் செய்ய வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டது. இந்தச் சுற்றறிக்கைகள் இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் என்பவற்றுக்கும் வழங்கப்பட்டிருந்தன.

இதன் பிரகாரம் யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய நான்கு வலயங்களுக்கும் இடமாற்ற சபைகள் அமைக்கப்பட்டு, இடமாற்றம் செய்யப்படுவோர் பட்டியல் தயாரிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இடமாற்ற சபையில் பின்வருவோர் உறுப்பினர்களாக இருந்தனர்.

1. வலயக்கல்விப் பணிப்பாளர்

2. பிரதிக்கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்)

மற்றும் பிரதிக்கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்)

3. வலயத்தின் நிர்வாக உத்தியோகத்தர்

4. சம்பந்தப்பட்ட வலயத்தின் கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்

5. இலங்கை தமிழாசிரியர் சங்கம்,இலங்கை ஆசிரியர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள்

வன்னி,தீவக வலயங்களுக்கு இடமாற்றம் செய்யப்படும் ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியல், வலயக்கல்விப் பணிமனைகளின் விளம்பரப் பலகைகளில் ஒட்டப்பட்டிருந்தன. இதனையடுத்து மன்றாட்டங்களும், மேன்முறையீடுகளும் இடமாற்றசபையால் ஆழமாகப் பரிசீலிக்கப்பட்டு இடமாற்றப் பட்டியல்கள் செம்மையாக்கப்பட்டன. இந்த இடமாற்றப்பட்டியல் எதுவித பாரபட்சமுமின்றி நேர்மையான முறையில் தெரிவு செய்யப்பட்டது என்று கூறப்படுகிறது.

அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், கல்வி அதிகாரிகளின் இரத்த உறவினர்கள் கூட இடமாற்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டனர். ஆனால் இடமாற்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களில் 99 வீதத்திற்கு மேற்பட்டோர் சுற்றறிக்கைக்கு அப்பாற்பட்ட மனித நேயக் காரணங்களையும், மருத்துவச் சான்றிதழ்களையும் சமர்ப்பித்தனர்.

வயதான பெற்றோரைப் பராமரித்தல், பெற்றோர் நோயாளிகள், சிறுகுழந்தைகள், தாங்கள் நோயாளிகள் போன்ற காரணங்களை முன்வைத்து ஆசிரியர்கள் இடமாற்றத்திலிருந்து விலக்களிக்குமாறு அவர்கள் கோரினர். வலிகாமம் வலயத்தில் கடமையாற்றும் 2000 ஆசிரியர்களில் 1,500 பேர் பெண்கள். இவர்களில் பலர் அண்மையில் திருமணம் செய்தோர், அல்லது திருமணத்திற்காகக் காத்திருப்போர். அல்லது கர்ப்பவதிகள் அல்லது ஒரு வயதுக்குட்பட்ட குழந்தையின் பாலூட்டும் தாய்மார் இன்னும் சிலர் தாம் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மருத்துவச் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்த முயல்கின்றனர்.

இந்த இடியப்பச் சிக்கல்களுக்கு மத்தியில் இடமாற்ற சபை ஆசிரிய தொழிற்சங்கப் பிரதிநிதிகளின் ஒப்புதலுடன் இயன்றளவு நேர்மையாகவும், செம்மையாகவும் இடமாற்றப்பட்டியலைத் தயாரித்தது.

யாழ்ப்பாணத்திலுள்ள நான்கு வலயங்களின் இடமாற்ற சபைகளும் நேர்மையாகவே செயற்பட்டுள்ளன. இந்த நிலையில் வலிகாமம் கல்வி வலயத்தில் மட்டும் சில சிக்கல்கள் ஏற்பட்டன. அதன் பின்னணியில் ஆசிரியர் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் சிலர் செயற்பட்டிருப்பதாக ஆசிரிய சமூகம் கருதுகிறது. ஆசிரிய இடமாற்றம் இழுபறி நிலையிலிருக்கும் போது, வன்னி மாணவர்களின் கல்வி, எதிர்காலம் என்பன பற்றி ஆளுநரும், ஆசிரிய தொழிற்சங்கங்களும் புரியாமலிருக்க மாட்டார்கள்.

உறவுகளை இழந்த பின்னரும் கல்வியில் முன்னேறத்துடிக்கும் வன்னி மாணவர்களின் கதி என்ன?

ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படும் போது மாவட்ட அடிப்படையில் வழங்கப்பட்டால், இந்தப் பிரச்சினை வராது என்று ஒரு சாரார் யோசனை கூறுகிறார்கள்.

வன்னியின் உட்பகுதிக்கான உட்கட்டுமானங்கள் இன்னமும் தரமுயராமல் உள்ளன. வன்னி செல்லும் ஆசிரியர்களுக்கு விடுதி வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். மேலே கூறப்பட்ட விடயங்களை ஆளுநரும் கல்விச் சமூகமும் கவனத்திலெடுக்க வேண்டுமென்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பு. ✱

# அடிமைச்சின்னம் அழகுபடுத்தப்படுவதா?

■ பஞ்சவர்ணன்

> “ பணத்தை பெரும் முதலீடாகக் கொட்டி புனர்நிர்மாணம் செய்யும் அளவிற்கு தமிழர்களுக்கோ, தமிழ் மண்ணுக்கோ யாழ்ப்பாணக் கோட்டையால் எந்தப் பயனும் இருந்ததில்லை.

யாழ்ப்பாணத் தமிழர்களை அந்நியர்களும் வேற்று இனத்தவர்களும் அடக்கி ஆண்ட வரலாறு நிறையவே உண்டு. அத்தனை இனத்தவர்களும் எம்மை அடக்கி ஆண்ட அடையாளச் சின்னமாக விளங்குவதில் தலையாயது யாழ்ப்பாணக் கோட்டை.

கி.பி.1619 ஆம் ஆண்டளவில் போர்த்துக்கீசரால் கட்டப்பட்டாலும் கி.பி 17 ஆம் நூற்றாண்டுப் பகுதியில் ஒல்லாந்தரால் தற்போது தோற்றமளிக்கும் விதத்தில் யாழ் கோட்டை மாற்றி அமைத்துக்கட்டப்பட்டது.

யாழ். கோட்டை கட்டப்பட்ட காலம் தொடக்கம் இந்தக் காலம் வரை எவ்வளவோ தமிழர்கள் இங்கு துன்புறுத்தப்பட்டார்கள், கொல்லப்பட்டார்கள். இலங்கையில் உள்ள காலி, கொழும்பு போன்ற இடங்களில் உள்ள கோட்டைகள் நகர மையங்களாக விளங்கியபோதும் யாழ்ப்பாணக் கோட்டை அன்று தொடக்கம் இராணுவ மையமாகவே இருந்து வந்தது.

அங்கிருந்து நடத்தப்பட்ட திட்டமிடல்கள், நெறிப்படுத்தல்கள் மூலமாகத் தமிழர்களின் நிலங்கள் சூறையாடப்பட்டன. இதனால் என்னவோ இதனை இராச வாசல் என்றும் அழைக்கும் மரபு இருந்தது.

தமிழர்களை அழித்த இடங்களும், சிங்களவர்களால் வெற்றி கொள்ளப்பட்ட இடங்களும், தமிழர் போராட்டங்களை சிங்கள இராணுவத்தினர் நசுக்கிய இடங்களும் தற்போது சிங்கள மக்களின் சுற்றுலா மையங்களாகி வருகின்றன.

அவற்றில் முக்கியமான ஒன்றாக யாழ்ப்பாணக் கோட்டை மாறிவருவது தமிழர்களைத் தலைகுனியச் செய்யும் செயற்பாடுகளில் ஒன்றாகவே காணப்படுகிறது.

தமது வெற்றியை அடையாளப்படுத்த அரசு 42.4 மில்லியன் ரூபாவும், தங்களது அடிமை சின்னத்தைக் [illegible] ஒதுக்கி யாழ். கோட்டையை புனர்நிர்மாணம் செய்து வருகின்றன. இப்படியாக 104.5 மில்லியன் ரூபா பணத்தை பெரும் முதலீடாகக் கொட்டி புனர்நிர்மாணம் செய்யும் அளவிற்கு தமிழர்களுக்கோ, தமிழ் மண்ணுக்கோ யாழ்ப்பாணக் கோட்டையால் எந்தப் பயனும் இருந்ததில்லை. மாறாக எம்மைப் பிறர் அடிமைப்படுத்திய சின்னமாக நகரத்தில் யாழ். கோட்டை புதுப்பொழிவுடன் தலை நிமிர்ந்து நின்று எம்மைத் தலைகுனிய வைக்க உள்ளது.

இன அழிப்பு அடையாளமாக மட்டுமன்றி யாழ். கோட்டை பெருமளவு பணத்தையும் முடக்குவதுடன் தமிழர் நிலப்பரப்பையும் முடக்குகிறது. யாழ். கோட்டை 62 ஏக்கர் நிலப்பரப்பைத் தன்னகத்தே கொண்டுள்ளதால் யாழ். நகரின் மிகப்பெரிய நிலப்பரப்பு நகர மயமாக்கலுக்கு உட்படாமல் எதுவித பயனுமற்று முடங்கி உள்ளது. போதாதற்கு கோட்டை தொல்பொருள் சின்னமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதால் அதனைச் சுற்றி 400 மீற்றர் தூர நிலமும் முடக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் தொழிற்சாலைகள் கட்டுவதற்கும், திணைக்களங்கள் ,தொழில் நிறுவனங்களை அமைப்பதற்கும் நிலமில்லாது திண்டாடி வரும் நேரத்தில் இக் கோட்டைபெரும்நிலப்பரப்பை விழுங்கி வைத்துள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை திட்டமிடப்படாமல் அவ்வப்போது கிடைத்த நிலங்களைக் கொண்டு ஒழுங்கற்ற முறையில் கட்டப்பட்ட கட்டடத் தொகுதிகளையே கெண்டுள்ளது. ஒழுங்கான அமைப்புடைய தொகுதிகளைக் கொண்ட வைத்தியசாலையை நிர்மாணிக்க முடியாமல் சுகாதாரத்துறை தடுமாறக் காரணங்களில் ஒன்றாக இருப்பது இடப் பிரச்சினை ஆகும்.

யாழ். கோட்டையின் நிலப்பரப்பு வைத்தியசாலை அமைக்க போதுமானது. அதுமட்டுமல்லாது கடற்கரையை அண்டிய காற்றோட்டமான இடமாகக் காணப்படுவதால் இனியேனும் அது தமிழ் மக்களைக் காக்கும் இடமாகப் பயன்பட முடியும்.

கோட்டைச் சுவரின் கீழ்ப் பகுதி 40 அடி அகலமும் மேற்பகுதி 20அடி அகலமும் 30 அடி உயரமும் கொண்டுள்ளதுடன் 6,300 சுற்றளவையும் கொண்டுள்ளது. மிகப்பெரிய கன அளவு கல், மண் என்பவற்றைக் கோட்டைச் சுற்றுமதில் கொண்டுள்ளது. அவற்றை இடித்து எடுத்தால் பள்ளமாக உள்ள இடம் நிரவ, அணைகளுக்கு, பாலம் அமைக்க, வீதி அமைப்பதற்கு பயன்படுத்தலாம். அருகில் உள்ள தீவுப் பகுதிக்கான வீதியை அகலிப்பதற்கு பயன்படுத்தினால் கூட அது தீவகத் தமிழர்களுக்கு விமோசனமாக அமையும்.

சுற்றுலாத் தலமாக

(27 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சம் என்பது மடமையடா!

வாழ்க்கையில் எப்போதாவது ஒரு முறை மரணத்தைச் சந்திக்கிறவன் வீரன். மரணத்துக்கு மத்தியில் எப்போதோ ஒரு முறை வாழ்க்கையைச் சந்திக்கிறவன் கோழை.

மொகலாயப் படையெடுப்பும் அதன்பின் நடந்த ஆங்கிலேய ஆக்கிரமிப்பையும் தொடர்ந்து அடிமைத்தனம் மக்கள் மனதில் வேரூன்றி விட்டது.

கூச்சம் இல்லாமல் கூட்டணி மாறும் அரசியல் வியாபாரிகள், தேர்ந்தெடுத்த மக்களுக்கும் தெரிவு செய்த கட்சிக்கும் துரோகம் இழைக்கும் அரசியல்வாதிகள், ஊழலே உருவமான பல தலைவர்கள், உழைக்காமல் பிழைக்கும் பல அரசு ஊழியர்கள், அரசியல் வெறியர்களின் அராஜகம், அக்கிரமத்துக்கு அரசு எந்திரத்தைக் கூட்டிக் கொடுக்கும் சில மானம் கெட்ட அதிகாரிகள், வாதியும், பிரதிவாதியும் செத்த பிறகு தீர்ப்புச் சொல்லும் அதிமேதாவித்தனமான நீதி நியாயங்களை, எடை குறைவான ரேஷன், கண் எதிரில் வன்புணர்வு, லஞ்சம், வஞ்சம், அநீதி, அக்கிரமம், அநியாயம் எதுவுமே மக்களைப் பாதிக்கவில்லை. மாறாகப் பயந்து சாகிறார்கள்.

அன்றைய பாரத புத்திரர் சிப்பாயைக் கண்டு அஞ்சுவார் என்று பாரதி பாடினார். இன்றும் அவனே பொலிஸைக் கண்டு அஞ்சுகிறான். பண்ணையாரைக் கண்டு பயந்து நடுங்கிய காலம் போய் பாரத புத்திரன் பணத்தாசை பிடித்து பல அதிகாரிகளைப் பார்த்துப் பயப்படுகிறான் .

அச்சம் என்பது மடமையடா என்று கையைக் காலை அசைத்து யாராவது பாடினால் கையைத் தட்டுகிற நாட்டு மக்கள், அராஜகத்தின் முன்னால் கையைக் காலைக் கட்டிக்கொண்டு பயந்து சாகிறார்கள். பயம்... பயம்... பயம்... இதிலிருந்து வெளியே வாருங்கள் ...! வெற்றி நிச்சயம்.

இன்றைக்கு மாணவர்கள் ஆசிரியரோடு பேசப் பயப்படுகிறார்கள். ஆங்கிலத்தில் பேச அதிகமாகப் பயப்படுகிறார்கள். பயப்படாதே. ஆங்கிலத்தைச் சரியாகப் பேச முயற்சி செய்; தவறாக இருந்தாலும் கவலைப் படாதே...பேசு. அது அந்நிய மொழி. அதைச் சரியாகப் பேசாவிட்டாலும் குற்றம் இல்லை. ஆங்கிலேயர் செய்த குற்றங்களோடு ஒப்பிட்டால் இது மிக மிகச் சிறியது!

யாராவது தவறைச் சுட்டிக்காட்டினால் வெட்கப்படாதே.. நன்றி சொல். பிழையின்றி ஆங்கிலம் பேச அவர் உனக்கு உதவ முடியுமா? என்று கேள்.

மகாத்மா காந்தியின் ஆங்கிலத்தில் ரைட் ஹானரபிள் சீனிவாச சாஸ்திரி பிழை கண்டபோது காந்தி அப்படித்தான் உதவி கேட்டார். அப்படிக் கேள். உருப்படுகிற வழியைப் பார். பயப்படாதே. வீரனாகவே இரு. அடிக்கடி சாகாதே. ஒரு முறைதான் சாக வேண்டும்.

எவ்வளவு பெரிய மனிதரைப் பார்க்க நேர்ந்தாலும் துணிவுடன், நேராகப் பார். குழப்பம், தலைகுனிதல், தயக்கம், பயம், உளறல் இவற்றைத் தூக்கிக் குப்பையிலே போடு; வெற்றி அடையும் வழியைப் பார்.

ஔரங்கசீப் டில்லி பாதுஷாவாக இருந்த போது அம்மர் என்கிற சின்ன நாட்டிற்கு ஜெயசிங் என்ற பதின்மூன்று வயதுச் சிறுவன் பட்டத்துக்கு வந்தான். அவனைப் பயமுறுத்தி வைக்கும் எண்ணத்தில் டில்லிக்கு வரும்படி பணித்தார் பாதுஷா. அவனது தாயும் அமைச்சர்களும் அஞ்சினர். ஆனால் சக்கரவர்த்தி முன்பு நடந்து கொள்ள வேண்டிய மரபுகள் முறைகளைக் கேட்டறிந்து ஜெய்சிங் டில்லி சென்றான்.

சிங்கக் குட்டியைப் போல தன் முன் வந்து நின்ற ஜெயசிங்கை ஔரங்கசீப் உற்றுப் பார்த்தார். நம்மைக் கண்டு இவனுக்குப் பயம் வரவில்லையே என்று கோபம் அடைந்த பாதுஷா சிம்மாசனத்தில் இருந்து திடுமென்று குதித்து ஜெய்சிங் அருகில் வந்து அவன் கைகளைப் பிடித்தார். பற்களை நறநற என்று பயமுறுத்தும் பாணியில் கடித்தார். ஜெய்சிங் அஞ்சவில்லை; அசரவில்லை. ஔரங்கசீப் ஆச்சரியம் அடைந்தார்.

ஜெய்சிங் கைகளை இறுக்கியபடி "சிறுவனே உனக்குப் பயமாக இல்லையா? இப்போது நான் உன்னைத் தண்டித்தால் என்ன செய்வாய்? எப்படி உன்னைக் காப்பாற்றிக் கொள்வாய்?" என்றார்.

ஜெய்சிங் சிரித்துக்கொண்டு "இத்தனை பெரிய டில்லி பாதுஷாவே என் கைகளைப் பிடித்து எனக்கு அடைக்கலம் கொடுத்திருக்கும் போது நான் எதற்குப் பயப்பட வேண்டும்? யாரிடம் பயப்பட வேண்டும்?" என்று சாமர்த்தியமாகப் பதில் கூறினான்.

அவன் முதுகைத் தட்டிக் கொடுத்து, பாராட்டி ஆசனம் அளித்தார் ஔரங்கசீப் என்கிறது வரலாறு.

அச்சமின்மையை அங்கீகரித்து கௌரவித்த ஔரங்கசீப்பின் குண நலன் வித்தியாசமானது.

உண்மையில் பாராட்டத்தக்கது. அச்சத்தை வென்றால் வெற்றி நிச்சயம்.




சுகி.சிவம்

# சிறார்களுக்காக பாலர் பாடசாலை ஆரம்பித்த சதாவதானி சி.க.கூ.சங்கம்

(கடந்த வாரத் தொடர்ச்சி)

முதலாவதாக குலுக்கப்பட்ட இந்தச் சீட்டுக்கு அங்கத்தவர்களில் ஒருவரான க.கதிர்காமநாதன் தெரிவு செய்யப்பட்டு அவருக்கு உடனடியாக 850 ரூபா வழங்கப்பட்டது. அடுத்து 20 ரூபா பெறுமதியான சீட்டுக்கு 32 பேர் இணைந்து கொண்டனர். இச்சீட்டுக் குலுக்களில் க.வேலாயுதமும், த.தமிழ்ச்செல்வியும் தெரிவு செய்யப்பட்டு இருவருக்கும் தலா 320 ரூபா வீதம் வழங்கப்பட்டது.



இதே கூட்டத்தில் சமுகமளித்த மன்னார் ஐக்கிய நாணய சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத் தலைவர் க.பாக்கியநாதன் தங்கள் சங்கத்தின் செயற்பாடுகள், பணிகள் பற்றி விரிவாக எடுத்துக் கூறியிருந்தார். இவரது கருத்துக்களை மேலைப் புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை ஐக்கிய நாணய சங்க உறுப்பினர்கள் மத்தியில் சிக்கன சங்கம் தொடர்பாக புதிய உத்வேகத்தைக் கொடுத்தது.

மேலைப் புலோலி கிராம மக்களின் அடிப்படை வசதிகளுடன் கூடிய வாழ்வாதாரத்தை மேலும் மேம்படுத்த உரிய உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக அக்காலகட்டங்களில் இப் பிரதேசத்தில் செயற்பட்டு வந்த போரூட் நிறுவனத்தின் உதவியையும் இந்தச் சங்கம் நாடியது. இது தொடர்பாக கிராம மக்களுக்கு விளக்கும் வகையில் போரூட் பிரதிநிதியான கி.மகேந்திரன் என்பவர் சங்கத்துக்கு வருகை தந்து போரூட் நிறுவனம் வழங்கும் உதவிகள், சேவைகள் தொடர்பாக கடந்த 1988 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்.

இப்பகுதி விவசாயிகளின் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு அவர்களுக்கு கடனுதவி சங்கத்தின் மூலமாக சங்க அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை அங்கத்தவர் க.தங்கராசா இக் கூட்டத்தில் கொண்டு வந்த போது அத்தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், விவசாயக் கடனை வழங்குவதற்காக சேமத்திற்கு எதிரான கடனாக 50 ஆயிரம் ரூபாவை கிராம வங்கியில் கோருவதென தீர்மானிக்கப்பட்டு பின்னர் அந்தப் பணம் பெறப்பட்டு விவசாயத்தைத் தொழிலாகக் கொண்ட அங்கத்தவர்கள் சிலருக்கு விவசாயக் கடனாக வழங்கப்பட்டது. விவசாயக் கடன்களை அங்கத்தவர்கள் 6 மாதகாலத்துக்குள் திருப்பிச் செலுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

> மூன்றாண்டுகளில் சங்கம் அபரிமிதமான வளர்ச்சி கண்ட தையடுத்து இது வரைகாலமும் சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்தில் செயற்பட்டு வந்த இந்தச் சங்கத்துக்கென ஒரு வீடொன்றை வாடகைக்குப் பெற்று அலுவலகமாகச் செயற்பட ஆரம்பித்தது.

மேலைப் புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை ஐக்கிய நாணய சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு சங்கம் கிராம மக்களுக்கு வழங்கி வந்த வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டம் வளர்ச்சி பெற்றுக் கொண்டிருந்தது. மூன்றாமாண்டுக் காலத்தில் கிராம மக்களிடையே தமிழையும், சைவத்தையும் மேலோங்கச் செய்வதற்காக 16.10.1988 அன்று மேலைப்புலோலி சைவப் பிரகாச வித்தியாலயத்தில் நவராத்திரி விழா ஒன்றை நடத்தியது. இந்த விழாவில் அப்போதைய பருத்தித்துறை உதவி அரச அதிபர் வை.வேலும்மயிலும், யாழ். பிராந்திய கூட்டுறவு உதவி ஆணையாளர் அமரர் முருகேசப் பிள்ளை, சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் அமரர் ச. சிவபாதசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

மூன்றாண்டுகளுக்கு முன்னர் சங்க அங்கத்தவரின் பங்குப்பணம் 50 ரூபாவாகவும் சேமிப்பு 100 ரூபாவாகவும் இருந்து வந்தது. 27.11.1988 முதல் பங்குப்பணம் நூறு ரூபாவாகவும், சேமிப்புப்பணம் இருநூறு ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டதுடன் அரச சார்பற்ற போரூட் நிறுவனத்தின் உதவிகளையும் பெறத் தீர்மானித்து அந்த நிறுவனத்தில் 50 ஆயிரம் ரூபா கடன் பெற்று சங்க அங்கத்தவர்களின் வாழ்வாதாரத் தேவைகளுக்கு வழங்கப்பட்டது.

அத்துடன் சுயதொழில், விவசாய, வீட்டுக்கடன்களுடன் அங்கத்தவர் ஒருவர் மலசல கூடம் கட்டுவதற்கும் கடன் உதவிகள் வழங்கப்பட்டன.

மூன்றாண்டுகளில் சங்கம் அபரிமிதமான வளர்ச்சி கண்டதையடுத்து இதுவரைகாலமும் சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்தில் செயற்பட்டு வந்த இந்தச் சங்கத்துக்கென ஒரு வீடொன்றை வாடகைக்குப் பெற்று அலுவலகமாகச் செயற்பட ஆரம்பித்தது. இந்த அலுவலகத்துக்கு அலுவலகப் பணியாளர் ஒருவர் மாதாந்தச் சம்பள அடிப்படையில் நியமிக்கப்பட்டு இந்த அலுவலகம் தினமும் காலை 9 மணி முதல் 12 மணி வரையும். பின்னர் 3 மணியிலிருந்து 6 மணி வரையும் 28.03.1989 ஆம் திகதி முதல் செயற்பட ஆரம்பித்தது. அந்த நேரம் அலுவலகம் அமைந்த வீட்டுக்கு மாதாந்தம் 100 ரூபா வாடகையாக செலுத்தப்பட்டு வந்தது.

இதேகாலப் பகுதியில் கிராமத்தைச் சேர்ந்த பெண்பிள்ளைகள் தையல் பயிற்சி பெறுவதற்கென சங்கத்தால் தையல் பயிற்சி நிலையம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டு முதலாவது வகுப்பில் 11 பெண் பிள்ளைகள் இணைந்து தையல் பயிற்சி பெற்றனர்.

இந்தத் தையல் பயிற்சி நிலையத்துக்கான தையல் இயந்திரத்தை மேலைப்புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை மாதர் சங்கத் தலைவி அன்பளிப்பாக சங்கத்திற்கு வழங்கியிருந்தார். தையற் பயிற்சி இலக்கைத் தொடர்ந்து சிறார்களின் கல்வியைக் கருத்தில் கொண்டு 19.04.1989 அன்று பாலர் பாடசாலை ஒன்றும் சனசமூக நிலையத்துக்கு அருகில் ஆரம்பிக்கப்பட்டது. இதே வேளை சங்கத்தின் நடவடிக்கைகள் அதிகரித்ததால் நிதி நிலைமைகளை சரிவர வைத்துக்கொள்ள வசதியாக கணக்காய்வாளர் ஒருவர் சங்கத்தால் நியமிக்கப்பட்டு நிதி கையாளல் சரியான முறையில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சங்கத்தின் இரண்டாவது ஆண்டுப் பொதுக் கூட்டம் 22.05.1989 அன்று சங்கத்துக்கென தனியாக ஏற்படுத்தப்பட்ட அலுவலகத்தில் சங்கத் தலைவர் வே.மார்க்கண்டேய பிள்ளை தலைமையில் நடைபெற்ற போது சங்கத்துக்கென

**கர்ணன்**

பருத்தித்துறை மக்கள் வங்கிக் கிளையில் தனியான நடைமுறைக் கணக்கு ஒன்றை ஆரம்பித்து 100 ரூபாவிற்கு மேற்பட்ட கொடுக்கல் வாங்கல்களை காசோலை மூலமே செயற்படுத்த வேண்டும் எனவும் அங்கத்தவர் அல்லாதோருக்கும் அவர்களது சேமிப்புக்கு 14 வீதம் வட்டி வழங்கப்பட வேண்டும் எனவும் கடன் அறவிடப்படும் காலம் 5 வருடத்திற்கு மேற்படலாகாது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

விவசாயிகளைப் பெரும்பான்மையாக அங்கத்தவர்களாகக் கொண்டு இந்தச் சங்கம் இருந்து வருவதனால் அவர்களின் நன்மை கருதி உரம், கிருமிநாசினி போன்றவற்றைப் பெற்று அவர்களுக்கு வழங்க வேண்டும் எனவும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகிஷ்கரிப்பில் ஈடுபட்டால் அனுமதிப்பத்திரங்கள் ரத்து

### தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு அமைச்சர் ரத்நாயக்க எச்சரிக்கை

**தேவையற்ற அச்சுறுத்தல்களை விடுக்கும் தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.**



கொழும்பு,பெப்.14

தனியார் பஸ் உரிமையாளர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் தொடர்ந்து ஈடுபட்டால் வீதி அனுமதிப்பத்திரம் ரத்துச் செய்யப்படும் என்று தனியார் போக்குவரத்து அமைச்சர் சீ.பி. ரத்நாயக்க தெரிவித்தார்.

பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க பாதுகாப்புச் செயலாளரின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்தார்.

எரிபொருள் விலையேற்றத்துக்கு அமைவாக தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படுகின்றன என்று அவர் தெரிவித்தார்.

குழப்பம் விளைவிக்கும் நோக்கில் சில சக்திகள் பணிப் பகிஷ்கரிப்பு போராட்டங்களை நடத்த முயற்சிக்கின்றன. தேவையற்ற அச்சுறுத்தல்களை விடுக்கும் தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

எரிபொருள் விலையேற்றம் பொதுப் போக்குவரத்து சேவைகளைப் பாதிக்காது என்று அவர் தெரிவித்தார்.

எரிபொருள் விலையேற்றத்தினைக் கண்டித்து, அரசு எரிபொருளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் அல்லது பஸ் கட்டணங்களை உயர்த்த அனுமதி அளிக்க வேண்டும் என்று தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் பணிப் பகிஷ்கரிப்பு போராட்டத்தினை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# பொருளாதாரக் கொள்கை: மக்கள் பெரும் பாதிப்பு

**அபிவிருத்தி ஏற்படுத்துவதனை விடவும் அதற்கான பிரசாரங்களுக்காக அரசு கூடுதலாக செலவிடுகின்றது. இதன் காரணமாகவே நாட்டில் ஊழல் மோசடிகள் அதிகரித்துள்ளன.**

கொழும்பு,பெப்.14

அரசின் பொருளாதாரக் கொள்கைகளினால் மக்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

எரிபொருள் விலையேற்றம் தொடர்பில் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அபிவிருத்திப் பொருளாதாரக் கொள்கைகளுக்கு மாறாக, அரசு பகட்டான கண்காட்சிப் பொருளாதாரக் கொள்கைகளைப் பின்பற்றுகின்றது என்று அவர் தெரிவித்தார்.

இந்த அரசு மக்கள் மீது பொருளாதார சுமைகளை திணிக்கின்றது என்று அவர் தெரிவித்தார்.

எரிபொருள் விலையேற்றம் நாட்டின் சகல விடயங்களையும் பாதிக்கும். உலக சந்தையில் இவ்வாறு சடுதியாக விலை அதிகரிப்பு ஏற்படவில்லை என்று அவர் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனைக்கு அமைய ரூபாவின் பெறுமதி மதிப்பிறக்கம் செய்யப்பட்டுள்ளது. அபிவிருத்தி ஏற்படுத்துவதனை விடவும் அதற்கான பிரசாரங்களுக்காக அரசு கூடுதலாக செலவிடுகின்றது. இதன் காரணமாகவே நாட்டில் ஊழல் மோசடிகள் அதிகரித்துள்ளன என்று அவர் தெரிவித்தார்.

# தாக்குதல் நடத்திய 17 பேர் கைது

கொழும்பு,பெப்.14

கொழும்பு - நாரஹென்பிட்டிய பகுதியில் சேவையில் ஈடுபட்டுள்ள தனியார் பஸ்கள் மீது தாக்குதல் நடத்திய 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள நிலையில் அதனை மீறி சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் மீது இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (ச)



எரிபொருள் உயர்வைக் கண்டித்து கொழும்பு - சிலாபம் பிரதான வீதியில் மீனவர்கள் ரயர்களை எரித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# எரிபொருள் மானியங்களை வழங்கி தாக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாது

கொழும்பு,பெப்.14

போக்குவரத்து சேவைக்காக எரிபொருள் மானியங்களை வழங்குவது மாத்திரம் போதுமானதாக அமையாது என்று ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஆனமடுவ பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மானியங்களை வழங்குவதன் மூலம் எரிபொருள் விலையேற்றத்தால் ஏற்படும் தாக்கங்களை நிவர்த்திக்க முடியாது என்று அவர் தெரிவித்தார்.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் விலையேற்றத்துக்கு, சர்வதேச ரீதியான எரிபொருள் விலை அதிகரிப்பு தாக்கம் செலுத்தவில்லை என்று ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விஜித்த ஹேரத் தெரிவித்தார். (ச)

### ஜி.சீ.ஈ.உயர் பரீட்சை குளறுபடி:

# அடிப்படை உரிமை மனு; மே 10 இல் விசாரணை

கொழும்பு,பெப்.14

2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட இசட் புள்ளிகளை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. மே மாதம் 10 ஆம் திகதி இந்த ஆட்சேபனை மனு மீதான விசாரணைகள் இடம்பெறவுள்ளது.

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய 16 மாணவர்களுடன் இணைந்து இலங்கை ஆசிரியர் சங்கம்இந்த அடிப்படைமனித உரிமை மீறல்மனுவைத் தாக்கல்செய்திருந்தது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தலைமையிலான மூன்று நீதியரசர்கள் கொண்ட குழு முன் இந்த மனு நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. புதிய மற்றும் பழைய பாடத்திட்டங்களை இணைத்து இசட் புள்ளி வழங்க மேற்கொண்ட நடவடிக்கையில் சிக்கல்கள் காணப்படுவதாக மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி தெரிவித்தார். இதனால் மாணவர்கள் பலர் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருவதாக மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.இதனால்மே மாதம் ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# காணி, பொலிஸ் அதிகாரம் வழங்கினால் நாட்டைத் துண்டாடுவதாக அமையாது

### முன்னாள் நீதியரசர் தெரிவிப்பு

கொழும்பு,பெப்.14

**காணி, பொலிஸ் அதிகாரங்களுடனான 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை இனப்பிரச்சினைக்குத் தீர்வாக வழங்கினால் அது நாட்டைத் துண்டாடுவதாக இருக்காது. இதையிட்டு சிங்கள மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்தார்.**

இதுதொடர்பில் கொழும்பில் உள்ள ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டியின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியலமைப்புத் திருத்தம் சிறந்த தீர்வாக இருக்கும். இதில் குறைபாடுகள் இருப்பதாக அரசோ அல்லது கட்சிகளோ கருதினால் அதை 13 பிளஸ் மூலம் நிவர்த்தி செய்யலாம்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் 13 ஆவது அரசியலமைப்பு திருத்தம் கொண்டுவரப்பட்டது. இந்தத் திட்டம் இந்தியாவில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

அமெரிக்கா, கனடா, பிரிட்டன் போன்ற நாடுகளிலும் இதேபோன்று அதிகாரப் பகிர்வு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அந்த நாடுகள் பிரிந்து விடவில்லை.

காணி, பொலிஸ் அதிகாரங்கள் 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின்படி மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டாலும் அதனால் ஒரு பிரச்சினையும் ஏற்படாது.

அப்படி பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அதை சட்டப்படி கட்டுப்படுத்தும் வழிமுறைகளும் 13 ஆவது அரசியலமைப்பு சட்டத்தின் மூலம் மத்திய அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது. காணி, பொலிஸ் அதி காரங்கள் வழங்குவதால் நாடு துண்டாடப்பட்டுவிடும் என்று பேரினவாத சிங்களக் கட்சிகள் தெரிவிப்பதில் உண்மையில்லை- என்றார். (ச)

# டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்

கொழும்பு,பெப்.14

கொழும்பு நகரில் டெங்கு அபாயம் அதிகரித்துள்ள பிரதேசங்களை இலக்காகக் கொண்டு டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் இன்றும், நாளையும் முன்னெடுக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் பாலித மஹிபால தெரிவித்தார்.

கொழும்பில் பொரளைப் பகுதியை அண்மித்த 6 பிரதேசங்களிலுள்ள அரச தனியார் அலுவலகங்கள் மற்றும் வீடுகளை பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார். (ச)

# எரிபொருள் மானியம்: அரசின் வாக்குறுதி பொய்

கொழும்பு,பெப்.14

எரிபொருள் மானியம் வழங்கப்படும் என்று அரசு வாக்குறுதி அளிப்பது பொய்யான விடயமாகும். கடந்த காலங்களில் அரசால் உறுதி அளிக்கப்பட்ட இந்தவொரு எரிபொருள் மானியமும் வழங்கப்படவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசின் உறுதியின்படி கொழும்பு - கண்டி செல்லும் தனியார் பஸ்களுக்கு 8000 ரூபா எரிபொருள் மானியம் வழங்கப்பட வேண்டும்.

எரிபொருள் விலையை உயர்த்தியதன் மூலம் அரசுஅதிக லாபத்தை ஈட்டியுள்ளது.

உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரித்துள்ளதாக கூறப்படும் செய்தியில் உண்மை இல்லை. அவ்வாறு உண்மை என்றால் இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளிலும் எரிபொருள்களின் விலை அதிகரித்திருக்க வேண்டும்- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை ஊடாக இந்தியாவுக்கு போலி நாணயத்தாள் கடத்தல்

போலி நாணயத்தாள் கடத்தலில் ஈடுபடும் கும்பல் இலங்கையைத் தளமாகப் பயன்படுத்துவதாக இந்திய குற்றவியல் பிரிவும் தேசிய விசாரணைப் பிரிவும் நடத்திய விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

கண்டுபிடிக்கப்பட்ட போலி நாணய மோசடி சம்பவங்களில் பெருந்தொகையானவை தமிழ் நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. பாகிஸ்தானில் அச்சிடப்படும் போலி நாணயத் தாள்கள் இலங்கைக்குக் கொண்டு செல்லப்பட்டு கடல் ஊடாகவும் விமானம் மூலமாகவும் தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களுக்குக் கடத்தப்படுகின்றன.

பாகிஸ்தானில் போலி நாணயத் தாள்கள் அச்சிடப்படுகின்றன. இந்தியாவின் பொருளாதாரத்தைச் சீர்குலைப்பதே அதன் ஒரே நோக்கம் என்று இந்திய குற்றப் புலனாய்வு பிரிவு தெரிவித்துள்ளது. இந்தத் திட்டமிட்ட சதியில் பாகிஸ்தான் - இலங்கை அரசுகளுக்கும் தொடர்பு இருக்கலாம் என்று சந்தேகிக்கப் படுகிறது.

மீன்பிடிப்படகுகளும் போலி நாணயத்தாள்களை கடத்தப் பயன்படுத்தப்படுவதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. பெரும் எண்ணிக்கையிலான இலங்கை மீன்பிடி இழுவைப்படகுகள் மீன் பிடிப்பது என்ற போர்வையில் இந்திய கடல் பிராந்தியத்துக்குள் போலி நாணயத்தாள்களைக் கடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பாகிஸ்தானிலிருந்து படகுகள் மூலம் கடத்தி வரப்படும் போலிநாணயத்தாள்கள் இடம் பெயர்ந்து வந்துள்ள தொழிலாளர்கள் மூலம் இந்தியாவின் பல பாகங்களுக்கும் எடுத்துச் செல்லப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன என்று இந்திய வருமான புலனாய்வுப் பணிப்பகம் தெரிவித்துள்ளது.



நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அதிபராகப் பணியாற்றி யாழ். வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்ற இ.குணநாதனின் சேவை நலன் பாராட்டு விழா கடந்த சனிக்கிழமை காலை இடம்பெற்றது. இதன்போது விழா நாயகர் இ. குணநாதனும் மனைவி பங்கஜவல்லியும் நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் இருந்து பாடசாலைப் பிரதான மண்டபம் வரை ஊர்வலமாக அழைத்து வரப்படுகின்றனர். (வ-38)

# மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப்.14

ஏழாலை மகாவித்தியாலய வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் பாடசாலை அதிபர் மா. ஆனந்த குமார் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.ஈஸ்வரநாதனும், சிறப்பு விருந்தினராக ஏழாலை மகாவித்தியாலய ஓய்வுபெற்ற உப அதிபர் க.கனகசபாபதி கலந்து கொள்வர். (வ-16)

* * *

யாழ்ப்பாணம், பெப்.14

சன்மார்க்க மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய் வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பெருமாள் கோயில் முன்றிலில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி மி.விமலகாசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா கலந்துகொள்வர். (த-14)

* * *

மிருசுவில் அ.த.க. பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் த.சோதிலிங்கம் தலைமையில் நடைபெறும் போட்டிக்கு முதன்மை விருந்தின ராக தென்மராட்சி கல்வி வலய பிர திக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி கலந்து கொள்வர். (வ-9)

* * *

யாழ்ப்பாணம், பெப்.14

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான வருடாந்த மென்வன்மைப்போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணிக்கு நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நெடுந்தீவுப் பிரதேச செயலாளர் ஆ.சிறி தலைமையில் நடைபெறும் இந்தப் போட்டியில் பாண்ட் வாத்தியப்போட்டி, கபடிப் போட்டி, விளையாட்டு வீரர் கௌரவிப்பு என்பன இடம்பெறும். (வ-14)

* * *

யாழ்ப்பாணம், பெப்.14

நீர்வேலி றோ.க.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய் வன்மைபோட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் சி.தர்மரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய மாணவர் அபிவிருத்திப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.குணநாதன் கலந்து கொள்வார். (வ-14)

* * *

யாழ்ப்பாணம், பெப்.14

நீர்வேலி தெற்கு இ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய் வன்மைப்போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் மகாலிங்கம் சிவானந்தன் தலைமையில் நடை பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வே. பாலசுப்பிரமணியம் கலந்துகொள்வார். (வ-14)

* * *

ஊர்காவற்றுறை, பெப்.14

எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் ச. கமலதீபன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோன் தி.குயின்ரன் கலந்துகொள்ளவுள்ளார். (வ-325)

* * *

யாழ்ப்பாணம், பெப்.14

புத்தூர் மடிஹே பஞ்சசீஹ வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் கு.ரவீந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலய மாணவர் அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.குணநாதன் கலந்து கொள்வார். (வ-14)


## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான No.1 பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். முன்கூட்டியே பதிவு செய்யவும்.

தொடர்பு:

நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். 0212226944

நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி. 0776225944

சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை 0778996085


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



நீர்வேலி அருள்மிகு செல்லக் கதிர்காம கோயில் திருப்பணிச் சபையின் உபசெயலாளர் கு.சிறிகானந்தன் அவர்களின் பாசமிகு மாமன்

### முத்துவேல்

அவர்களின் மறைவால் துயர் அடைந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி! சாந்தி!!

திருப்பணிச்சபை

(14451) (6,7,10) செல்லக்கதிர்காம தேவஸ்தானம், நீர்வேலி.

## 21 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

### புவனேஸ்வரி அரியராஜா

(ஆசிரியர், இ.த.க.பாடசாலை,.தாவடி)

மலர்வு 30★09★ 1941

உதிர்வு 14★02★ 1991

கற்றிட்ட தாயே நின் காதற் கணவனையும்
பெற்றிட்ட மைந்தனையும் பிரிந்து நீ சென்றாலும்
பற்றுடனே கற்ற வுந்தன் பள்ளிச் சிறுவரெலாம்
பெற்றிட்ட பெருமையுமோ பேசற்கரியதம்மா

தாவடி தெற்கு, கொக்குவில்.

அரியராஜா (கணவர்), ஜெயந்தன் (மகன்) குடும்பம் (லண்டன்).

## நபிகள் நாயகம் குறித்து சர்ச்சையான தகவல் வெளியிட்டவர் நாடு கடத்தப்பட்டார்

நபிகள் நாயகம் தொடர்பில் சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்டமையால் தண்டனைக்கு அஞ்சி மலேஷியாவுக்குத் தப்பிச் சென்ற இளம் எழுத்தாளரை மலேஷியா சவூதிக்குத் திருப்பி அனுப்பியுள்ளது.

ஹம்சா கஷ்காரி (வயது 23) என்ற இளம் எழுத்தாளர் நபிகள் நாயகத்தின் பிறந்த தினத்தை யொட்டி தனது டுவிட்டரில் செய்தியொன்றை வெளியிட்டார். இவர் தனது டுவிட்களை பதிவு செய்து சில மணி நேரத்திலேயே இவரது கருத்துக்கு பலத்த எதிர்ப்பு வெளியாகியது. கஷ்காரி புனித இஸ்லாம் மதத்தை அவமதித்ததாகவும், தனது மதத்துக்கே துரோகம் செய்துள்ளதாகவும் இவரின் கருத்துக்கு எதிர்ப்பு வெளியாகியது. இதனை யடுத்து உடனேதனது டுவிட்களை அழித்த ஹம்சா கஷ்காரி தன்னை மன்னிக்குமாறும் வேண்டுகோள் விடுத்தார். எனினும் இவரது டுவிட் மிகவேகமாக இணையத்தில் பரவத்தொடங்கியது. (வ)


## விற்பனைப் பிரதிநிதி தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல நிறுவனத்துக்கு Marketing தொடர்பான அடிப்படைப் பயிற்சி முடித்திருக்கும் அல்லது ஒரு வருட அனுபவமுள்ள விற்பனைப் பிரதிநிதி தேவை. (வாகன அனுமதிப் பத்திரம் அவசியம். தொடர்பு: 0779114476


## அறிவித்தல்

நொத்தாரிசு அமரர் க.பரமநாதனின் மனைவி பரிபூரணம் பரமநாதன் ஆகிய நான் இத்தால் சகலருக்கும் அறியத் தரப்படுவதாவது எனது கணவரின் மூலம் எழுதப்பட்ட தங்கள் உறுதிகளை மூன்று வாரங்களுக்குள் குப்பிளான் சந்தி, குப்பிளான் எனும் முகவரியில் உள்ள எனது வீட்டில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.


## விற்பனைப் பிரதிநிதி தேவை

நிறுவனமொன்றுக்கு விற்பனைப் பிரதிநிதி (Sales Rep.) தேவை. திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு: 0777741389

## சிறுவர் பூங்கா முன்பள்ளியும் குழந்தைகள் காப்பகமும்



Kids Park Pre School & Day Care Center

முன்பள்ளி ஆசிரியர் தேவை - 2012

எமது முன்பள்ளியில் கற்பிப்பதற்கு, சிறந்த தகுதியும், ஆற்றலும், ஆளுமையும், ஈடுபாடும் உடையவர்களிடமிருந்து விண்ணப்பங் கள் கோரப்படுகின்றன. யாழ்.நகரிலிருந்து 6 km க்குள் வசிப்பவர்கள் விண்ணப்பிக்கவும். விண்ணப்ப முடிவு திகதி 20.02.2012. தங்கள் சுய விவரத்தைப் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

பணிப்பாளர், சிறுவர் பூங்கா முன்பள்ளியும் குழந்தைகள் காப்பகமும், 528, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

T.P:0779360607


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 01.02.2012 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும், ஓமந்தையை வதிவிடமாகவும் கொண்ட எமது அன்புத் தெய்வம்

அமரர்

### நமசிவாயம் சுகுமார்

(செல்வம்)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று [14.02.2012] செவ்வாய்க்கிழமை கீரிமலையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் 16.02.2012 வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சங்கத்தானை வீதி, சாவகச்சேரி.

நாதஸ்வரம் S. சுப்பிரமணியம் கனகா குடும்பத்தினர்.

(14217) (6,7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

### இலங்கை சார்ந்த விவகாரங்களில்

# கனடிய அரசின் போக்கை மாற்றியது அந்நாட்டின் மனித உரிமை மையம்

இலங்கை சார்ந்த விவகாரங்களில் கனடிய மனிதவுரிமை மையம் முன்னின்று செயற்பட்டு மனித வுரிமை மீறல்களை வெளிக்கொணர்ந்து, அதன் காரணமாக கன டிய அரசின் போக் கில் கடந்த இரண்டு வருடங்களில் கொள்கை மாற்றங்களை இலங்கை விவகாரத்தில் ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு தெரிவித்தார் கன்சவேட்டிவ் நாடாளுமன்ற உறப்பினர் பற்றிக் பிரவுன். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது;

கனடிய மனிதவுரிமை மையமே தற்போது கனடாவில் மனிதவுரிமைக்காகக் குரல் கொடுக்கும் அமைப்புக்களில் முன்னிலையில் நின்று செயற்படுகிறது. மனித வுரிமை விவகாரங்களில் தொடர்ச்சியாகத்தான் அக்கறையுடன் செயற்பட்டு வருவதால் அது கனடாவில் காத்திரமான பங்கை வகிப்பதோடு மாத்திரமல்லாமல் கனடாவின் நாடாளுமன்றில் தாக்கம் விளைவிக்கக்கூடியதொரு அமைப்பாகவும்

**கனடிய மனிதவுரிமை மையம் ஈழத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட மனித வுரிமை மீறல்களை வெளிக்கொணரப் பாடுபடுகிறது.**

மாறிவிட்டது என்பதை தன்னால் உறுதிபடக்கூற முடியும் என அவர் தெரிவித்தார். குறிப்பாக இலங்கை சார்ந்த விவகாரங்களில் கனடிய மனிதவுரிமை மையம் முன்னின்று மனிதவுரிமை மீறல்களை வெளிக்கொணர்வதையும் அதன் காரணமாக கனடிய அரசின் போக்கில் கடந்த இரண்டு வருடங்களில் கொள்கை மாற்றங்களை இலங்கை விவகாரத்தில் இது ஏற்படுத்தியுள்ளது எனவும் தெரிவித்த அவர்கள் மேலும் கனடிய மனிதவுரிமை மையம் கனடாவில்



தாக்கம் விளைவித்ததைப் போல சர்வதேச அரங்கிலும் இந்த விவகாரத்தில் தாக்கம் விளைவிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

கனடிய தேசிய ஊடக மற்றும் கனடிய அரசியற் பிரமுகர்களை இயக்குநர் சபை அங்கத்தவர்களாகக் கொண்ட கனடிய மனிதவுரிமை மையம் ஈழத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட மனித வுரிமை மீறல்களை வெளிக்கொணரப் பாடுபடுவதுடன், தமிழர்களுக்கான தீர்வுக்காக உழைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சு முயற்சிகளுக்கு முழு ஆதரவை வழங்கி வரும் ஓர் அமைப்பாகச் செயற்படுவது குறிப்பிடத்தக்கது. (ந)

## நெல் அறுவடை மும்முரம்

வடமராட்சி. பெப்.14

கரவெட்டிப் பகுதியில் நெல் அறுவடை மும்முரமாக நடைபெற்று வருகின்றது.

இப்பகுதியில் பெருமளவு ஹெக்ரேயர் நெல் வயல்கள் கொண்ட வல்லை, கப்பூது, அந்தணந்திடல் ஆகிய இடங்களில் கூலித் தொழிலாளர்களைக் கொண்டும், இயந்திரம் மூலமும் நெல் அறுவடை செய்யப்படுகின்றது.

முதன் முதலாக இம்முறையே நெல் அறுவடையில் இயந்திரம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. நெற்கதிர்களை வெட்ட தனியான இயந்திரமும், நெற்கதிர்களை வெட்டி, சூடுமிதிக்க தனியான இயந்திரங்களும் பயன்படுத்தப்படுகின்றன.

இந்த அறுவடைக்கான இயந்திரங்களை விவசாயிகள் வெளியிடங்களிலிருந்து பரப்புக் கட்டண அடிப் படையில் வாடகைக்கு அமர்த்தி அறுவடை செய்து வருகின்றனர். (ந.8)

## வடமாகாண உற்பத்திகளில் முன்னேற்றம்

### ஆளுநர் செயலகம் அறிக்கை

நெல், உப உணவுப் பொருள்கள், மரக்கறிகள், பழ வகை, தென்னை ஆகியவற்றின் உற்பத்திகள் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் கண்டுள்ளன என வடமாகாண ஆளுநர் செயலகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் 2010, 2011 ஆம் ஆண்டுகளில் பெரும்போக பயிர்ச்செய்கையின் போது 78 ஆயிரத்து 279 ஹெக்ரேயர் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தப்புள்ளி விவரங்களின் படி 43 ஆயிரத்து 636ஹெக்ரேயர் நிலப் பரப்பில் புதிதாக நெற்செய்கை ஆரம் பிக்கப்பட்டுள்ளது. சிறு தானியப் பயிர்ச் செய்கை 21 ஆயிரத்து 645 ஹெக்ரேயரில்மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆயிரத்து 284 ஹெக்ரேயரில் பழச் செய்கையும், 15 ஆயிரத்து 793 ஹெக்ரேயரில் தெங்குப் பயிர்ச் செய்கையும் நடைபெற்று வருகின்றன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள பயிர்ச் செய்கைக்கு இலவச விதைகள், மானிய அடிப்படையில் பசளைகள், இலவசமாக பற்றைகள் அழிப்பு, போன்றனவும், உப பயிர்ச் செய்கைக்கு இலவச நீர்ப் பம்பிகள், தென்னைப் பயிர்ச் செய்கைக்கு ஒரு லட்சம் நாற்றுக்கள் ஆகியன வழங்கப்பட்டமையுமே இப்பயிர்ச்செய்கை அதிகரிப்புக்கு காரணமாக அமைகின்றன என்று மேலும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-14)

## விடுதி முகாமைத்துவக் கற்கை

யாழ்ப்பாணம், பெப்.14

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் சுற்றுலாத்துறை, விடுதி முகாமைத்துவம் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நேற்றுத் திங்கட்கிழமை முதல் பிறவுன் வீதி கொக்குவிலில் அமைந்துள்ள பிராந்திய நிலையத்தில் விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இந்தக் கற்கை நெறிக்கு 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் விண்ணப்பிக்க முடியும் என யாழ் பிராந்திய நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (எ-14)

# மரண அறிவித்தல்



## திருமதி சீவரத்தினம் மகேஸ்வரி

வேலணை, சோளாவத்தையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சீவரத்தினம் மகேஸ்வரி நேற்றுமுன்தினம் (12.02.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்- கண்மணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா- சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தையா சீவரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அன்னபூரணம், கந்தசாமி, செல்வரத்தினம், இராசலிங்கம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற நாகரத்தினம் மற்றும் புவனேஸ்வரி, நாகேஸ்வரி, நாகரத்தினம், காலஞ்சென்றவர்களான நாகம்மா, இராசேந்திரம், வேலாயுதபிள்ளை, மற்றும் நல்லம்மா ஆகியோரின் மைத்துனியும், சாந்தகுமாரி, உதயகுமாரி(UK), சுகுமாரன் (Millenium Restaurant), காலஞ்சென்ற உதயகுமார் (கலட்டிக்கண்ணன்) ஆகியோரின் அன்புத் தாயும், சிவானந்தம், சிவகாந்தன் (UK), சாந்தினி, செல்வராணி ஆகியோரின் மாமியும், சந்தியா (UK), நிவேஸ் (Angel International School), மானஸ்வி, நிரோஷன் (மாணவன், University of Greenwich UK), நிவேதிகா (2010 A/L வேம்படி மகளிர் கல்லூரி), விதுஷன்,(2012 A/L சென். ஜோன்ஸ் கல்லூரி), யதுஷன் (2014 A/L யாழ். இந்துக் கல்லூரி), உதயரோஷன் (Gr- 10 சென். ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2012) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

91, இராமநாதன் வீதி, கலட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேஷம்:** பெண்கள் வகையில் பெருமைப் படும் வகையிலான உதவி கிடைக்கும். தொழில் ரீதியாக ஒப்பந்தங்கள் போட மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. பல நாள்களாகச் சந்திக்காமல் இருந்த உறவினர்களைச் சந்திக்கலாம். வியாபாரிகள் குறைந்த விலைக்கு வாங்கிய பொருள்களை அதிக விலைக்கு விற்று கூடுதல் லாபம் பெறுவர்.

**இடபம்:** மதிப்பு, கௌரவம் அதிகரிக்கும் நாள். மற்றவர்கள் செலவில் சில வேலைகளை முடித்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தர்கள் வழக்கத்துக்கு மாறாக கூடுதல் வேலைகளைச் செய்ய நேரிடலாம். புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். பெண் தொடர்பான விடயங்களில் வீண் பிடிவாதங்களைத் தவிர்க்க வேண்டும். தேக ஆரோக்கியம் தெம்பு உற்சாகம் தரும்.

**மிதுனம்:** எண்ணிய காரியங்களை முடிப்பதில் அதிதீவிரமாக செயற்படுவீர்கள். எதிர்பாராத செய்திகளைக் கேட்கலாம். வயிறு உபாதைகளைத் தவிர்க்க உணவு விடயங்களில் எச்சரிக்கை அவசியம். ஒருவரிடம் கடனாகக் கொடுத்த பணம் திடீரென திரும்பி வரலாம். அயலாரின் செயற்பாடுகளால் எரிச்சல் அடையலாம்.

**கடகம்:** புதியவர்களின் நட்பைப் பெறலாம். உறவினர்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். புதிய ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். பெற்றோர் வழியில் சிறு சிரமங்களைச் சந்திக்கலாம். நன்றி மறந்த சிலரை நினைத்து கவலை அடைவீர்கள். புதிய பொறுப்புகளை ஏற்றுச் செய்யலாம்.

**சிங்கம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி சந்தோஷம் குடிகொள்ளும் நாள். மலைபோல் குவிந்த வேலைகளையும் அசராமல் செய்து முடிப்பீர்கள். கடனாகக் கொடுத்த பணத்தைக் கேட்டு வாங்குவீர்கள். உடன் பிறப்புகளால் செலவுகள், சிரமங்களைச் சந்திக்கலாம். வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி:** எதிர்ப்புகள், இடையூறுகள் இல்லாமல் திட்டமிட்ட காரியங்களை சரியான நேரத்துக்கு முடிப்பீர்கள். சிலர் உங்களிடம் கொடுத்த வாக்கைக் காப்பாற்றி பெருமை சேர்ப்பர். அரசு தொடர்பான பணிகளில் இழுபறிகளைச் சந்திக்கலாம். நினைத்த பொருள்களை வாங்கும் வாய்ப்புக் கிட்டும். சிலர் உங்களின் கோபத்தைத் தூண்டும் வகையில் நடக்கலாம்.

**துலாம்:** சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். சக ஊழியர்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாகலாம். கடந்த காலத்தில் உதவி செய்த ஒருவருக்கு பதில் உதவி செய்யலாம். சில வேலைகளை தாமதமாகத் தொடங்கினாலும், சரியான நேரத்துக்கு முடிப்பீர்கள்.

**விருச்சிகம்:** வீட்டுத் தேவைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தேடி வரலாம். உறவினர்கள் அல்லது நண்பர்கள் தொடர்பான வேலைகளுக்காக உங்களின் கைப்பணத்தை செலவிடலாம். உடல் உபாதைகளால், ஊக்கம், உற்சாகம் குறையலாம். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம்.

**தனுசு:** பொருளாதார நிலைமையில் முன்னேற்றம் காண்பீர்கள். உறவினர் ஒருவருக்கு திடீரென உதவி செய்ய நேரிடலாம். பிள்ளைகள் தொடர்பான விடயங்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள். கடுமையாக இழுத்தடிக்கலாம் என நினைத்த காரியம் ஒன்று நொடிப் பொழுதில் முடிந்து விடலாம். வழக்கு விவகாரங்கள் சாதகமான திருப்பங்களைக் காணலாம்

**மகரம்:** பல நாள் முயற்சி ஒன்றுக்கு இன்று பலன் கிடைக்கும். அரசியல்வாதிகள் குதர்க்கமான பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். தொழில், வியாபார ரீதியாக வரவேண்டிய பணவரவுகள் வரலாம். மற்றவர்கள் பாராட்டும் வகையில் எந்த வேலையையும் செய்ய நினைப்பீர்கள். உங்களின் ஊக்கம், உற்சாகத்தை அதிகரிக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம்.

**கும்பம்:** திட்டமிட்ட வேலைகளைச் செய்ய முடியாமல், வேறு சில வேலைகள் குறுக்கிடலாம். பெண்கள் குடும்ப பெரியவர்களின் பாராட்டுக்களைப் பெறுவர். உங்களுக்காக மற்றொருவர் செலவு செய்யும் சூழ்நிலை உருவாகலாம். கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். மற்றவர்களை எடைபோட்டு பார்த்து உதவிகள் செய்வீர்கள். .

**மீனம்:** தண்டச் செலவுகளைச் சந்திக்கலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவை எதிர்கொள்ளலாம். மற்றவர்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பதைத் தவிர்க்க வேண்டும். ஓய்வாக இருக்கும் நேரத்தை வீணடித்து விட்டு பின்னர் பரபரப்பாகச் செயற்படுவீர்கள். வெறுப்பு உண்டாகும்.

**நாளை**

மாசி 3 புதன்கிழமை 15.02.2012
திதி:அட்டமி பி.ப. 12.28 வரை
நட்சத்திரம்: அனுசம் பி.இ. 03.13 வரை
சுபநேரம்: 05.03 - 06.33 வரை,
ராகு காலம்: 12.33- 02.03 வரை

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 3 | | | 5 | 2 | 1 | 4 |
| | 1 | 7 | | 6 | | | | |
| 9 | | | | 2 | 1 | | | |
| | 4 | | 9 | 8 | | 5 | | |
| 3 | 7 | | | | | | 9 | 1 |
| | | 5 | | 7 | 4 | | 2 | |
| | | | 8 | 3 | | | | 7 |
| | | | | 1 | | 6 | 8 | |
| 7 | 8 | 6 | 5 | | | 1 | | |

சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 5 | 8 | 2 | 7 | 3 | 6 | 4 | 9 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 9 | 7 | 1 | 8 |
| 6 | 7 | 9 | 8 | 4 | 1 | 2 | 3 | 5 |
| 8 | 4 | 5 | 3 | 2 | 6 | 1 | 9 | 7 |
| 9 | 2 | 7 | 4 | 1 | 8 | 3 | 5 | 6 |
| 3 | 1 | 6 | 9 | 5 | 7 | 8 | 2 | 4 |
| 7 | 9 | 3 | 1 | 8 | 4 | 5 | 6 | 2 |
| 4 | 6 | 2 | 7 | 3 | 5 | 9 | 8 | 1 |
| 5 | 8 | 1 | 6 | 9 | 2 | 4 | 7 | 3 |


# ஓராண்டு இதய அஞ்சலி



மண்ணுலகில்
18. 07. 1933

விண்ணுலகில்
24. 02. 2011

## அமரத்துவமாது பரமேஸ்வரி பரமநாதன் அவர்களின்

திதி:14.02.2012

அன்பிற்கு அடிச்சுவடாய்
இல்வாழ்வில் இமயமாய்
குடும்பத்தின் குலவிளக்காய்
ஊர் போற்றும் உத்தமியாய்
கடமைக்கு கண்ணியமாய் வாழ்ந்து
பத்துத் திங்கள் எம்மைச் சுமந்து பெற்று
பாசமுடன் சீராட்டி பாராட்டி
எம்மை வளர்த்து இவ்வுலகில் வாழ வைத்த அம்மாவே!
பன்னிரு திங்கள் எம்மைப் பிரிந்து
நீங்கள் சென்றாலும்
உங்கள் புன்சிரிப்பும்
இனிமையான பசுமையான நினைவுகளும்
என்றும் எம்முடனே வாழும் அம்மா!

உங்களது ஆத்மா சாந்தியடைய ஸ்ரீ காமாட்சி அம்பாளை பிரார்த்திக்கிறோம்.

இன்று (14.02.2012) செவ்வாய்க்கிழமை அன்னாரின் ஞாபகார்த்தமாக வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய அன்னதான மண்டபத்தில் அன்னதானம் வழங்கப்படும். அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


(β8929) (2-6-7)

1010/37, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். – குடும்பத்தினர்.



# மரண அறிவித்தல்

## வீரவாகு விசுவரத்தினம்



ஓட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட M.P. வீரவாகு விசுவரத்தினம் கடந்த (11.02.2012) சனிக்கிழமை இயற்கை எய்தினார். அன்னார் காலஞ் சென்றவர்களான M.P. வீரவாகு- கனகம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் மனோன்மணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான அளவெட்டி தெற்கைச் சேர்ந்த முருகேசு- கனகம்மா தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற வீரவாகு பொன்னுத்துரையின் பாசமிகு தம்பியும் பொன்னுத்துரை மற்றும் மங்கையர்க்கரசியின் மைத்துனரும் (UK), காலஞ்சென்ற வீரவாகு (தேவன்) மற்றும் ரவீந்திரன், கெங்காதரன், றங்கநாதன் (Swiss), ஈஸ்வரன் (Swiss) ஆகியோரின் அன்புத் தந்தையும் பிறேமராணி, புஸ்பராணி, தேவகலா(Swiss), செல்வரஞ்சினி (Swiss) ஆகியோரின் அன்பு மாமனும் குமணன் (UK), பிராமினி, குணாளன் (UK), சாளினி, தர்சினி, மகிழினி, கிஷாயினி(Swiss), கிஷாந் (Swiss), ஹபிலன் (Canada) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.02.2012) புதன் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
V. ரவீந்திரன்,
V. கெங்காதரன்,

13/3, சேச்லேன்,
ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம். (14458)(6-7-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணம் வசூலிப்பதற்கு சிறுவர்கள் பயன்படுத்தும் இல்லம் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப்.14

சிறுவர்களைப் பயன்படுத்தி பணம் வசூலிக்கும் முயற்சிகளில் சிறுவர் இல்ல நிர்வாகத்தினர் ஈடுபடக்கூடாது. இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடும் இல்லங்களை இயக்குவதற்கு அனுமதிக்க முடியாது.

யாழ். மாவட்டத்தில் ஆயிரத்து 200 சிறுவர்கள் பெற்றோரை இழந்து நிர்க்கதியாக்கப்பட்டுள் ளனர். கடந்த காலங்களில் நடை பெற்ற போர் காரணமாக அனேக சிறுவர்கள் பெற்றோரை இழந் துள்ளனர். இவ்வாறு தெரிவித் தார் யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார்.

நாயன்மார்க்கட்டில் நேற்று இடம்பெற்ற எஸ்.ஓ.எஸ். சிறுவர் கிராமத்துக்கான அடிக்கல் நாடும் நிகழ்வில் பிரதம விருந்தினரா கக் கலந்து கொண்டு உரை நிகழ்த் தும் போதே அரச அதிபர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித் தவை வருமாறு:-

எனது அவதானத்தின் அடிப் படையில் யாழ். மாவட்டத்தில் உள்ள சிறுவர் இல்லங்கள் சில பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கி வருகின்றன. 11 சிறுவர் இல்லங்களை மூடுமாறு ஏற்க னவே ஆளுநர் பணித்துள்ளார்.

சிறுவர்கள் தொடர்பான சர்வ தேச விதிமுறைகளுக்கு முரணாக செயற்படும் சிறுவர் இல்லங்கள் மூடப்படவேண்டும். இல்லங் களுக்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

வெளிநாடுகளிலிருந்து பணத்தை பெறும் நோக்குடன் சிறுவர் இல் லங்கள் ஆரம்பிக்கப்படும் நிலமை யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி நாடு முழுவதும் தோன்றியுள்ளது.

பெற்றோரின் அரவணைப்பில் அன்பு, ஆதரவுடன் பிள்ளைகள் எப்படி வளர்கின்றனரோ அதே போன்று சிறுவர் இல்லங்களிலும் பிள்ளைகள் சீராகப் பராமரிக்கப் படல் வேண்டும்.

இல்லங்களினை நடத்துப வர்கள், பராமரிப்பாளர்கள், பணி யாளர்கள் பிள்ளைகளுக்கு முன் மாதிரியாக வாழ்ந்து காட்ட வேண் டும். மாறாக பிள்ளைகள் மத்தியில் அநாகரிகமாக நடப்பதை தவிர்க்க வேண்டும்.

பராமரிக்கப்படும் சிறுவர்களைச் சமூகத்துக்கு ஏற்றபிரஜைகளாக வளர்த்தெடுக்கும் பெரிய பொறுப்பு இல்ல நிர்வாகத்தினருக்கு உரியது. அதற்கு மாறாகச் செயற்படும் இல் லங்களை மூடிவிட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (10-03)

# ஆய்வுக் கட்டுரைகள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், பெப்.14

போருக்குப் பின்னரான சூழலில் திறன் அபிவிருத்தி என்ற தொனிப்பொருளில் யாழ் பல்கலைக்கழகம் வரும் ஜூலை 20ஆம் திகதி நடத்த இருக்கும் மாநாட்டுக்காக ஆய்வுக்கட்டு ரைகள் கோரப்பட்டிருக்கின்றன பட்டியலிடப்பட்ட துறை களில் இதுபற்றி ஆய்வுக் கட்டு ரைகளை சமர்ப்பிக்கலாம் என அறிவிக்கப்பிட்டிருக்கிறது. பல்கலைக்கழக மாணவர்கள் துறைசார் வல்லுநர்கள்கூட ஆய்வுகளை சமர்ப்பிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.




காரைநகர் பிரதேசத்தில் பெரும் போக நெல் அறுவடை மிக மும்முரமாக இடம்பெற்று வருகிறது. கட்டாக்காலி கால்நடைகள் அவற்றை வகைதொகையின்றி அழித்துவருவதனால் உரிய பருவத்தை எட்டமுன்னரே அறுவடைசெய்வதில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த தைப்பூச தினத்தன்று ஈழத்து சிதம்பர தேவஸ்தானத்தினால் புதிர் எடுக்கும் நிகழ்வும் அறுவடையை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வும் இடம்பெற்றன. இதன் போது சுவாமிக்கு புதிர் எடுத்த பின்னரே விவசாயிகள் தாங்கள் இல்லங்களுக்கு புதிர் (நெற்கதிர்கள்) எடுத்து செல்வதும் காரைநகரில் இன்றும் வழக்கமான நிகழ்வாகவுள்ளது. (ந-250)

# மானிய விலையில் எரிபொருள் இன்று சாதகமான பதில் வேண்டும்

## யாழ். கடற்றொழிலாளர்கள் காலக்கெடு

யாழ்ப்பாணம், பெப்.14

மானிய அடிப்படையில் எரி பொருளை வழங்கி தமது வாழ் வாதாரத் தொழிலுக்கு உதவுமாறு யாழ். மாவட்ட மீனவர்கள் யாழ். மாவட்ட கடற்றொழில் திணைக் களத்திடம் கோரிக்கை விடுத்துள் ளனர்.

தமது கோரிக்கைக்கு இன்று முற்பகல் 10 மணிக்கு முன்னர் பதில் தர வேண்டும் எனவும் அவர்கள் காலக்கெடு வழங்கியுள் ளனர்.

யாழ். மாவட்ட கடற்றொழி லாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ். தவரட் ணம் தலைமையில் மாவட்டத் திலுள்ள சமாசம் மற்றும் சங் கங்களின் பிரதிநிதிகள் சுமார் 10 பேர் ஒன்றாகச் சென்று மேற்படி கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ். தவரட்ணம் தெரிவித்தவை வருமாறு:-

எரிபொருள் விலையேற்றத் தால கடற்றொழிலாளர்கள் மோ சமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். தென்னிலங்கை மற்றும் மன்னார் பகுதி மீனவர்கள் விலையேற்றத் துக்கு தமது எதிர்ப்பைக் காட்டி வருகின்றனர். இன்றைய தினம் எமக்கு சாதகமான பதில் உத விப் பணிப்பாளரிடமிருந்து கிடைக்காதுவிடின் மீனவர் பிரதிநிதிகள் கூடி தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற வேண்டி ஏற்படும். சில வேளை அது மீன வர் போராட்டத்தை முன்னெடுப் பது தொடர்பாகவும் அமையக் கூடும் - என்றார்.

(10-03)

# கைத்திறன் போட்டி

தென்மராட்சி.பெப்.14

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை களின் மாணவர்களுக்கான கோலம் போடுதல், மாலை கட்டுதல், தோரணம்பின்னுதல் ஆகிய போட்டிகள் நாளை புதன் கிழமை பி.ப 2.00 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறும்.

தரம் 6,7 மாணவர்களுக்கு கோலம் போடுதல் போட்டியும், தரம் 8,9 மாணவர் களுக்கு மாலை கட்டுதல் போட்டியும், தரம் 12,13 மாணவர்களுக்கு தோரணம் பின்னுதல் போட்டியும் இடம்பெறும்.

போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர் களை போட்டிக்குரிய பொருள்களை (பூ, நார்,ஓலை,ஆயுதம்) கெண்டு வருமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

# வில்லுப் பாட்டுப் போட்டி

தென்மராட்சி கல்வி வலய பாடசாலை களின் தரம் 10,11 ஆகிய வகுப்பு மாணவர் களுக்கான வில்லுப்பாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை 8.30 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறுமென வலயக் கல் விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் தெரி வித்தார்.

திறப்புவிழா அழைப்பு
எமது நிலையத்தில் இன்னுமொரு சேவைக்காக அமைக்கப்பட்ட,
ஏஞ்சல் திருமண அழைப்பிதழ்கள்
எனும் கண்கவர் காட்சியறை இன்று(14.02.2012)
செவ்வாய்க்கிழமை மு.ப.11.00மணியளவில்
கோலாகலமாகத் திறந்துவைக்கப்படும்
இந்தமகிழ்ச்சியான நாளில்கலந்துகொண்டு
சிறப்பிக்க அன்புடன் அழைக்கின்றேன்.
திறந்துவைப்பவர்:
பருத்தித்துறைநகரபிதா
உயர்திரு.சபா.இரவீந்திரன் அவர்கள்
(பிரபல சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும் சமாதானநீதிவானும்
உத்தியோகப்பற்றற்ற நீதிவானும்)
தங்களின் மேலான ஆதரவை நாடும்
K.V.S. திரு குடும்பத்தினரும்
மற்றும் சக ஊழியர்களும்.
(திரு ஸ்ரூடியோ பருத்தித்துறை).
347,முதலாம்மாடி,
பிரதானவீதி, பருத்தித்துறை.

### அநாகரிகச் செயல் ரூ. 3000 அபராதம்

கோண்டாவிலில் பொது இடத்தில் அநா கரிகமாக நடந்து கொண்ட இளைஞர் களுக்கு மூவாயிரம் ரூபா அபராதம் விதிக் கப்பட்டது.

ஒரு வருடத்துக்கு முன்னர் இடம்பெற்ற இச் சம்பவத்தில் 6 பேர் தொடர்புபட்டிருந் தனர். அவர்களில் முதல் ஐந்து பேரும் மன்றினால் தண்டிக் கப்பட்டிருந்தனர். 6ஆவது சந்தேக நப ரான இவர் சிகிச்சைக் காக இந்தியா சென்று அண்மையில் தனது ஊருக்குத் திரும்பி வந்துள்ளார். அவருக்கு எதிராக நீதிமன்று ஏற் கனவே பிடியாணை பிறப்பித்திருந்தது.

இந்த நிலையில் சந்தேக நபர் யாழ். நீதி மன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன் னிலையில் நேற்று முற்படுத்தப்பட்டார். சந்தேக நபரின் சட்டத்தரணி ஜோனி மதுரநாயக்கம் ஊடாக மன்றில் முன்னிலை யானார். விசாரணை யின் போது தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து சந்தேக நபருக்கு 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

(ஏ-4)

# கணினி, தையல் பயிற்சி

தென்மராட்சி கல்வி வலயத்தின் முறைசாராப் பிரிவினரால் கணினி, மற்றும் தையல் பயிற்சி ஆகிய பயிற்சி நெறிகள் கடந்த முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கைதடி நவீல்ட் பாடசாலை, மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தி யாலயம் ஆகியவற்றில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தப் பயிற்சி நெறி களில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைக் கல்வியினைப் பூர்த்தி செய்தவர்களை அந்தந்தப் பாட சாலைகளின் அதிபர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேம காந்தன் அறிவித்துள்ளார்.

(ந-9)

மதுரா அழகுக்கலைப் பயிற்சி நிலையம்
(கோப்பாய் நாவலர் பாடசாலை அருகில்)
(அழகுக்கலை டிப்ளோமா பயிற்சி)


பேசியல் (15 வகை)
மேக்கப் (4 வகை)
கிளின்அப், ஹெயாஸ்ரைலிங் (30 வகை), ஸ்ரெயிட்னிங், அயனிங், பேமிங், ஹேயாகலரிங், ஸ்பாறீட்மென்ட், ஹெயாஹொட் ஒயில் மசாஜ், பிளக்ஸ்பொட் றீட்மன்ட், பிம்பிள் ட்றீட்மென்ட், அல்ராசொனிக் றீட்மென்ட், ஸ்கின் லைட்னிங் றீட்மென்ட், மச்சம் வைத்தல், பெடிக்கியூர், மெனிக்கியூர், நெயில் ஆர்ட் மெஹந்தி டிசைன், திரட்டிங் வக்ஸிங், ஹெயாடையிங், சாறி கட்டும் முறை (10) ஆகிய பயிற்சிகள் நடைபெறுகின்றன. பயிற்சியில் இணைய விரும்புவோர் 15.02.2012 புதன்கிழமை மு.ப. 10 மணியில் இருந்து பி.ப. 1 மணிவரை பயிற்சி நிலையத்தில் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்.

கேக் ஐசிங் (கேக் 30, ஐசிங் 30) தையல், சாறி வேக்ஸ் பயிற்சிகளும் நடைபெறுகின்றன.
பயிற்சி நிறைவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும்.
மேக்கப், கேக் ஐசிங் ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்
தொடர்பு:077 936 2642, 021 321 4013.
பழைய வீதி, கோப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

பொருளியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளரும் எமது சங்க உறுப்பினருமான சி.விஜயகுமார் அவர்களின் அன்புத் தாய் **திருமதி சின்னத்துரை வள்ளிப்பிள்ளை** 12.02.2012 அன்று இறைபதமடைந்துவிட்டார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம். (14479)(6-7-8)

## மரண அறிவித்தல்

### Dr. சின்னத்தம்பி விவேகானந்தன்

(ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரி)



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட Dr. சின்னத்தம்பி விவேகானந்தன் 10.02.2012 அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் Dr. மீனலோசனியின் (ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரி) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான உரும்பிராயைச் சேர்ந்த உமாபதி சின்னத்தம்பி சுந்தரம் தம்பதியரின் புதல்வனும், இடைக்காட்டைச் சேர்ந்த காலஞ்சென்ற பண்டிதர் சின்னத்துரை-பாக்கியம் தம்பதியரின் மருமகனும், காண்டீபன் (வைத்திய கலாநிதி), யதீபன் (பொறியியலாளர்), சஞ்சீபன் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஞ்சனா, சிவாஜினி (பொறியியலாளர்) ஆகியோரின் அன்பு மாமனும், கேஷன், தனோசன், அஞ்சலி, வருணன் ஆகியோரின் அன்புப்பேரனும், காலஞ்சென்றவர்களான திரவியம், சர்வானந்தன், பரமானந்தன் மற்றும் இராசானந்தன், கிருஷ்ணானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், வீரசிங்கம், பத்மாசனி, சத்தியேஸ்வரி, தங்கலக்ஷ்மி, வடிவாம்பிகை, பத்மலோசனி, சரோஜினிதேவி, சிவலோசனி ஆகியோரினது மைத்துனரும், மகேசன், நாகேந்திரன் (மீசாலை), புவனேந்திரன் ஆகியோரின் சகலனும், அமரர் தேவராஜா-மனோன்மணி, சிவசுப்பிரமணியம்-சிவலோஜனி தம்பதியரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14.02.2012) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணி முதல் மாலை 6 மணிவரை இல.591, காலி வீதி, கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (15.02.2012) புதன்கிழமை இறுதிக்கிரியைகள் நடைபெற்று மு.ப. 10 மணிக்கு தகனக் கிரியைக்காக கல்கிசை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
Dr.காண்டீபன் (மகன்)
Dr.மீனலோசனி விவேகானந்தன் (மனைவி)
நாகேந்திரன் (சகலன் - மீசாலை).

இல.55,5/1, சன்பிளவர் கோட்,
37ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை.

## மரண அறிவித்தல்

### மனுவேற்பிள்ளை பல்தசார்



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் மாதகலில் வசித்து கொழும்பில் கணக்காளராக பணியாற்றி இளைப்பாறி 1985 முதல் நோர்வேயில் வசித்து வந்தவரான மனுவேற்பிள்ளை பல்தசார் தனது 96 ஆம் வயதில் 09.02.2012 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் மேரிஆன்பொன்றோஸின் (வயது88) அன்புக்கணவரும் பொன்ராசா பல்தசார் (சட்டத்தரணி, கனடா), ஆனந்தராசா (இளைப்பாறிய கிராம அலுவலர், கிளிநொச்சி), இறஞ்ஜினி (பிரான்ஸ்), சறோஜினி (கனடா), சாமினி(நோர்வே), பத்மினி(நோர்வே), இராஜ்குமார்(நோர்வே) ஆகியோரின் அன்புத்தந்தையும் றுக்மணி (கனடா), வசந்தி (ஆசிரியை- கிளிநொச்சி), அந்தோனிப்பிள்ளை(பிரான்ஸ்), சச்சிதானந்தன்(கனடா), ஜேம்ஸ்(நோர்வே), பிரான்சிஸ்(நோர்வே), செல்வினி(நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனும் கனடாவைச் சேர்ந்த இராதிகா, சங்கர், கிளிநொச்சியைச் சேர்ந்த நிமல்ராஜ், ஜெயந்தி, தயானந்தி, அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த வசந்தன், சுபாஸ், தமயந்தி பிரான்ஸைச் சேர்ந்த அமுதன்- சுகந்தி, கண்ணன், ரமேஷ், ஈழநாதன், வள்ளுவன், கன டாவைச் சேர்ந்த இலட்சுமணா, அர்ச்சுனா, நோர்வேயைச் சேர்ந்த நவநீதன், அரவிந்தன், நளாயினி-மாட்டீன், மைதிலி, வாசுகி, ஜானகி, தேவகி, இராஜினி, நந்தினி, ஸ்ரெவன்ஆகியோரின்பேரனும், சோவியா, (F) பிறீடா, மக்ஸன், மனோன் ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 16.02.2012 வியாழக்கிழமை நோர்வே " ஒல்கோர்ட்" இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நோர்வே தொலைபேசி இல
004751618175 - பத்மினி
004751617423 - சாமினி
004751669692 - இராஜ்குமார்

Uthayan.com இலும் பார்வையிடலாம்

தகவல்:
ப.லோ.இ. ஆனந்தராசா (மகன்),
வசந்தி (மருமகள்)
இல. 585, [illegible]
கிளிநொச்சி (11033)(6-7-8)

## வேலணைப் பிரதேச சபைக்கு இருமாடிக் கட்டடம்

யாழ்ப்பாணம், பெப்.14

நெல்சிப் திட்டத்தின் கீழ் வேலணைப் பிரதேச சபைக்கு புதிய இருமாடிக் கட்டடம் 50 மில்லியன் ரூபா செலவில் வங்களாவடிச் சந்தியில் அமைக்கப்படவுள்ளது.

வேலணைப் பிரதேச சபைக் கட்டடப் புனர்நிர்மாணம் தொடர்பான முன்னேற்றக் கூட்டம் நேற்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் தலைமையில் நடைபெற்றது.

இதன்போதே மேற்படி கட்டடத்துக்கான தீர்மானம் அறிவிக்கப்பட்டது. அத்துடன் கட்டடத்துக்கான முன்மொழிவுகள் யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபை பிரதம பொறியியலாளர் எந்திரி எஸ்.சுதாகரன், வேலணைப் பிரதேச சபை தலைவர், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (10)

## இ.போ.ச ஊழியர்களுக்கு விடுமுறை ரத்து

தனியார் பஸ் சங்கங்களின் வேலை நிறுத்தத்தையடுத்து இ.போ.ச. ஊழியர்களின் விடுமுறைகள்யாவும் நேற்றுமுன்தினம் முதல் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

பஸ் வண்டிகள் மற்றும் வளப்பற்றாக் குறைகளுக்கு மத்தியில் நேற்றையதினம் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காரைநகர் இ.போ.ச டிப்போக்கள் வழமையை விடக் கூடுதலான சேவைகளை நடத்தின. (10-08)

## போலி சாரதி 'லைசன்ஸ்' தயாரித்த மூவருக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், பெப். 14

போலியான சாரதி அனுமதிப்பத்திரம் தயாரித்து வழங்கிய அரச உத்தியோகத்தர் உட்பட மூவர் யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று முற்படுத்தப்பட்டார்.

2009ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்தக் குற்றம் தொடர்பான குற்றச்சாட்டுப் பத்திரம் வாசிக்கப்பட்டபோது சந்தேக நபர்கள் மூவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

அதனையடுத்து சந்தேக நபர் ஒருவர் அரச ஊழியர் என்பதனால் அவருக்கு அரச செலவாக ஆயிரம் ரூபா விதிக்கப்பட்டது. ஏனைய இருவருக்கும் தலா ஆயிரம் அபராதமும், 5 வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத கால சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார் நீதிவான். யாழ். விசேட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தனர். (ஒ-4)

## கிளைக்குழுத் தேர்தல்கள்

வடமராட்சி, பெப். 14

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் குழுத் தேல்தல் எதிர்வரும் 19ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்கத்தின் 27 கிளைகளுக்கும் அந்தந்த கிளைகள் அமைந்துள்ள பகுதிகளில் தேர்தல் நடைபெறும் என மாவட்டக் கூட்டுறவு உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் அறிவித்துள்ளார். (10-8)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 10 ★ 05 ★ 1940



விண்ணில் 27 ★ 01 ★ 2011

### திருமதி ஐயாத்துரை பரமேஸ்வரி


பொங்கிவரும் பெரு நிலவாய் ஒளிர்ந்தவளே
மங்காது சுடர் வீசும் எங்கள் குலவிளக்கே
பங்கமில்லாப் பெருவாழ்வு பெற்றுச்சென்றனையோ
எங்குற்றாய் ஏன் சென்றாய் வந்திடம்மா விரைந்து
என்றும் உங்கள் ஆத்ம சாந்திக்காக வேண்டிநிற்கும்

கணவர், பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

K.K.S.வீதி, இணுவில்.

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



அமரர்

### கந்தையா இராஜகோபாலன்

(கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறை)

எங்கள் இதயத் தெய்வத்தின் அந்தியேட்டி கிரியைகள் 15.02.2012 புதன்கிழமை காலை 6.00 மணிக்கு முகத்துவாரம் அந்தியேட்டி மண்டபத்திலும், சபிண்டீகரணம் காலை 6.30 மணிக்கு அன்னாரின் இல்லத்திலும், 16.02.2012 வியாழக்கிழமை கோயில் வீதி, முகத்துவாரம் இந்து பரிபாலன சங்கத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் இடம்பெறும்.

இத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் எம்முடன் இணைந்து எங்கள் இதயத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.360/5, அளுத்மாவத்தை றோட்,
கொழும்பு - 15.
தொ.பே.இல.011 5685758

- குடும்பத்தினர். (14474)(2-6-7)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### இளையப்பு முத்துவேலு

(நீர்வேலி)

தோற்றம் :- 15.10.1932
மறைவு :- 15.01.2011

திதி:- கர வருஷ 2012 ஆம் ஆண்டு தைமாத அபரபட்ச சப்தமி

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் இருந்து
அமுதூட்டி பாசத்தால் பாதுகாத்து
வாழ்க்கைக்கு நல் வழிகாட்டியாய்
திகழ்ந்த எமதன்புத் தெய்வமே
நாமுள்ள வரைக்கும் எம் உள்ளங்களில்
உங்கள் நினைவலைகள் என்றுமே அழியா
உங்கள் ஆத்ம சாந்திக்காக கண்ணீர்ப் பூக்களைக்
காணிக்கையாக்குகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(14413) (2-6-7)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வென்றது சிவானந்தா

## கலைமதியை வீழ்த்தி சம்பியனானது

**றஜீகரன் இரண்டு கோல்களையும் சந்துரு ஒரு கோலையும் அடித்து அசத்த, ஆட்டம் சிவானந்தா அணியின் பக்கம் திரும்பியது. இறுதியில் 3:0 என்ற ரீதியில் வெற்றிக்கனியை சுவைத்தது சிவானந்தா அணி.**

யாழ்ப்பாணம், பெப்.14

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய 7 பேர் பங்குபற்றிய விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் கொற்றவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுச் சம்பியனானது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலைமதி விளையாட்டுக் கழக அணி களம் இறங்கியது.

ஆட்டத்தின் ஆரம்பத்திலிருந்தே இரண்டு அணியினரும் உற்சாகத்தோடு மோதிக் கொண்டனர்.

இதன்போது கலைமதி விளையாட்டுக் கழக அணிக்கு கோல் அடிக்கும் சந்தர்ப்பம் ஒன்று கிடைத்த போதும் அதனை அது கோலாக்கத் தவறியது.

இதன்போது 10 நிமிடத்தில் கொற்றவத்தை சிவாணந்தா விளையாட்டுக் கழக அணி வீரன் சந்துரு முதலாவது கோலையும் 19 ஆவது நிமிடத்தில் றஜீகரன் இரண்டாவது கோலையும் போட்டனர் இதனால் ஆட்டம் சூடு பிடிக்கத்தொடங்கியது. இரண்டு அணியினரும் ஆட்டத்தை வேகப்படுத்தித் தமது அணிக்கான கோல்களைப் பெற முயற்சிகள் மேற்கொண்டனர்.

இடைவேளைக்காக நிறுத்தப்பட்ட போது கொற்றாவத்தை சிவாணந்தா விளையாட்டுக் கழகம் 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரண்டு அணியினரும் ஆக்ரோஷமாக மோதிக் கொண்டனர்.

47 ஆவது நிமிடத்தில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழக அணி வீரன் றஜீகரன் மூன்றாவது கோலை போட்டதையடுத்துக் கொற்றாவத்தை சிவாணந்தா விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

சிறந்த ஆட்டநாயகனாக கொற்றவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழக வீரன் சந்துரு, சிறந்த கோல் காப்பளராக கொற்றவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழக வீரன் பிரசாந்தன், சிறந்த தொடர் நாயகனாக கலைமதி விளையாட்டுக்கழக அணி வீரன் விஜேந்திரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டன.

(த-23)




*சாவகச்சேரி இந்துக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு இடம்பெற்ற வீதியோட்டப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவிகளும், மாணவர்களும் கல்லூரி அதிபருடன்.* (23)

# நெடுந்தீவுப் பிரதேசத்தில் விளையாட்டு விழா இன்று

யாழ்ப்பாணம், பெப்.14

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான 2012 ஆம் ஆண்டிற்கான விளையாட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை மதியம் 2 மணிக்கு நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் எஸ். சிறி தலைமையில் நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், சிறப்பு விருந்தினர்களாக நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் தா.றெக்சியன் நெடுந்தீவுக்கடற்படை முகாம் கட்டளை அதிகாரி ஈ.என். எச் என்.எஸ் ஏக்க நாயக்க, வட மாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் எஸ். அண்ணாத்துரை, வட மாகாண விளையாட்டுத் துறை உதவிப் பணிப்பாளர் எஸ். கனகராஜா ஆகியோரும்.

கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி ஏ.எவ்.ஜே ரூபசிங்கம், நெடுந்தீவுப் பல நோக்கு கூட்டுறவுச் சங்க தலைவர் டபிள்யூ. அரியநாயகம், நெடுந்தீவுக் கோட்டக் கல்வி அதிகாரி கா. அரசரெட்ணம்,

இலங்கை வங்கி நெடுந்தீவுக் கிளையின் முகாமையாளர் எஸ். லவக்குமார், நெடுந்தீவு வைத்திய அதிகாரி நன்னித்தம்பி, நெடுந்தீவுப்பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி என்.பி. மெண்டிஸ் ஆகியோர் கலந்துகொள்வர். (த-23)

# நித்தி அணிக்கு வெற்றி



யாழ்ப்பாணம், பெப்.14

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த ஆட்டத்தில் நித்தி விளையாட்டுக்கழகஅணியை எதிர்த்து செஞ்சுடர் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் நித்தி விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)


## மரண அறிவித்தல்

### இரத்தினம் சிவக்கொழுந்து (ராணி)



பெரியமாவடி, சாவகச்சேரியை பிறப்பிடமாக வும் வசிப்பிட மாகவும் கொண்டஇரத்தினம் சிவக்கொழுந்து நேற்று (13.02.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் மகாலட்சுமியின் அன்பு மகளும் இராமச்சந்திரன் (மீசாலை), குகனேஸ்வரன் (கொழும்பு), சாந்தகுமாரி (உருத்திரபுரம்), யோகேந்திரகுமாரி (மீசாலை), சிவயோகச்செல்வி (பெரியமாவடி), புவனேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2012) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் மீசாலை கிழக்கு , மீசாலையில் உள்ள இ.இராமச்சந்திரனில் இல்லத்தில் நடைபெற்று அல்லாரை கொற்புலவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.இராமச்சந்திரன்
(நேசன் - சகோதரன்)

மீசாலை கிழக்கு,
மீசாலை.



## இரண்டாம் ஆண்டு நினைவு

மண்மகிழ
11.11.1939

கண்ணெகிழ
14.02.2010

அமரர்
**திருச்செல்வம் தவநாதன்**
(முளாயூர் தி.தவம்)



அமைதியாய் கழிந்தது ஆண்டிரண்டு என்றாலும்
எமைக்காத்த திருமகனே
கலையுணர்வின் தலைமகனே
உமையிழந்த கொடுந்துயரம்
ஊனுயிரில் உறைந்து கண் இமைக்கின்ற
பொழுதெல்லாம் அடிமனதில் அதிருதையா

மானிப்பாய். (14417) (6,7,10) குடும்பத்தினர்.


# கிரிக்கெட்டில் வென்ற அணிகள்



யாழ்ப்பாணம், பெப்.14

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இதில் ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் ஞானம்ஸ் விளையாட்டுக் கழகமும் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

பரபரப்பாக நடைபெற்ற இறுதிப் போட்டியில் அபாரமாக விளையாடிய ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம் மனோகராவை வீழ்த்தி கரவெட்டிப் பிரதேச செயலக கிரிக்கெட் சம்பியனாகத் தெரிவானது. (த-23)


## மரண அறிவித்தல்

### திருமதி தம்பாப்பிள்ளை சுபத்திரை

வண்ணை மேற்கு, கேசாவில் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வேலன்பிராய், தச்சன்தோப்பை புகுந்த இடமாகவும் கொண்ட திருமதி தம்பாப்பிள்ளை



சுபத்திரை 12-02-2012 அன்று இரவு 8 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம்-தங்கப்பிள்ளை தம்பதிகளின் ஏகபுத்திரியும், காலஞ்சென்ற தம்பாப்பிள்ளையின் (ஆசாரியார்) அன்பு மனைவியும், காலஞ் சென்ற சுப்பையா - ஆச்சிப்பிள்ளை தம்பதி களின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர் களான பிரபல கார் மெக்கானிக்குகள் கனகரத்தினம், இராசதுரை ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர் களான நேசரத்தினம், செல்வரத்தினம் ஆகியோரின் அருமை மைத்துனியும், கிருஷ்ணமணி, காலஞ் சென்ற செல்வி தனராணி மற்றும் சண்முகராசா (சுவிஸ்), தில்லைநாயகி ஆகியோரின் பாசமிகு தாயும் கனகலிங்கம் ((முன்னாள் ஒப்பந்தக்காரர்), குணராணி, நித்தியானந்தன் (மெக்கானிக்) மற்றும் தர்மராசா (ஹொலன்ட்), இரதிநாயகி, புஷ்பராணி, தங்கராணி, உதயகுமார் (பிரான்ஸ்), செல்வகுமாரி (இந்தியா) ஆகியோரின் பாசமிகு மாமியும், அருட்செல்வி (ஆசிரியை, வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), நித்தியானந்தன் (மாவட்டக் கலாசார உத்தியோகத்தர் - வவுனியா), கிருஷ்ணகுமார் (கணக்காளர் - UK ), தயாவதனி (நிர்வாக அதிகாரி - UK), Dr.கோபாலன் (USA) வனிதா (கணினிப் பொறியியலாளர் - USA ), பத்மலோஜினி (தாதிய உத்தியோகத் தர் - வவுனியா பொது வைத்தியசாலை), நிமலகாந்தன் (மாணவன் - UK), கோபிகிருஷ்ணா, யோகிதா (பிரான்ஸ்), யசிந்தன் (பிரான்ஸ்), யுகவேந்தன் (பிரான்ஸ்), யுகரூபன் (பிரான்ஸ்), தர்ஜினி (பிரான்ஸ்), ஷாலினி (ஆசிரியை Techno World - திருநெல்வேலி), வித்தியா (மாணவி, கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பிரியமுள்ள பேர்த்தியும், தயாணந்தி, வித்தகி (மாணவிகள் - வவுனியா Convent), லக்ஷ்மிதா (UK), அமரர் ஹரிஸ் லக்ஷ்மன் (UK) மற்றும் சேரன் (UK), அனிக்கா (USA), அனகன் (USA), சயன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமுள்ள பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 63, கேசாவில் வீதி, வண்ணை மேற்கில் அமைந்துள்ள அன்னாரின் மகளின் இல்லத்தில் இன்று செவ்வாய்க்கிழமை (14-02-2012) மு.ப. 10 மணியளவில் இடம்பெற்று புதவுடல் தகனக்கிரியைக்காக வண்ணை கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்: சண்முகராசா 0041434338470
குணராணி, கனகலிங்கம், தில்லைநாயகி
(இலங்கை)

(14483)(2-6-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் ஜொலித்த தமிழ் நட்சத்திரங்கள்



இந்திய சினிமா நட்சத்திரங்கள் பங்குகொள்ளும் சி.சி.எல் (Celeberity Cricket Leaque) நட்சத்திர கிரிக்கெட் ஆட்டத்தில் தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக தமிழ் சினிமாவை பிரதிநிதித்துவப்படுத்தும் சென்னை ரைனோஸ் சம்பியனாகியுள்ளது. இறுதி நிமிடம் வரையில் பரபரப்பை ஏற்படுத்திய இந்த ஆட்டத்தில் சென்னை சார்பில் நடிகர் விக்ராந்த் சிறப்பாக துடுப்பாட்டத்திலும், பந்து வீச்சிலும் அசத்தி அணியின் வெற்றிக்கு முக்கியபங்காற்றினார்.

ஆறு அணிகள் பங்குபற்றிய இந்தத் தொடரின் இறுதி ஆட்டம் சென்னை ரைனோஸ் - கர்நாடகா புல்டோசர்ஸ் அணிகளுக்கிடையில் ஹைதராபாத் ராஜீவ் காந்தி சர்வதேச அரங்கில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றது.

ஆட்டத்தில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை ரைனோஸின் முதலாவது இலக்கு ஓட்டமெதனையும் பெறாத நிலையில் வீழ்த்தப்பட்டது. எனினும் தனித்து போராடிய விக்ராந்த் ஆட்டமிழக்காமல் 95 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்து அணிக்கு வலுச் சேர்த்தார். விக்கிராந்த் தேர்ந்த துடுப்பாட்ட வீரர் போல அதிரடியாக துடுப்பெடுத்தாடி ஓட்டங்களைக் குவித்தார்.

ஏனைய வீரர்கள் எவரும் பெரிதாக சோபிக்காத நிலையில் சென்னை ரைனோஸ் நிர்ணயிக்கப்பட்ட 20 பந்து பரிமாற்றங்களில் நான்கு இலக்குகளை இழந்து 161 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

கர்நாடகா புல்டோசர்ஸ் அணியின் பந்துவீச்சில் கார்த்திக், துர்வா, பிரதீப்,மற்றும் அபிமன்யூ ஆகியோர் தலா ஒரு இலக்கினை வீழ்த்தினர்.

162 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கோடு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கர்நாடகா புல்டோசர்ஸ் அணி 20 பந்து பரிமாற்றங்கள் முடிவில் ஏழு இலக்குகளை இழந்து 160 ஓட்டங்களைப் பெற்று 1 ஓட்டத்தினால் தோல்வியைத் தழுவியது. கர்நாடகா அணியின் துடுப்பாட்டத்தில் துர்வா 58 ஓட்டங்களயும் கார்த்திக் 51 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

கர்நாடகா அணி துடுப்பெடுத்தாடுகையில் முதல் மூன்று இலக்குகளையும் 34 ஓட்டங்களுக்கு இழந்தது. அதன் பின்னர் இணைந்த துர்வா மற்றும் கார்த்திக் இருவரும் இணைந்து சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி சென்னையின் வெற்றியைப் பறிக்க முற்பட்டனர். ஒரு கட்டத்தில் கர்நாடகா அணியின் வெற்றி உறுதியான நிலையில் இருந்தது. இறுதிப் பந்து பரிமாற்றத்தில் வெற்றிக்கு 10 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில், சென்னையின் சார்பில் விக்ராந்த் பந்து வீசினார். முதலாவது பந்தை எதிர்கொண்ட துர்வா 58 ஓட்டங்களுடன் முதலாவது பந்திலேயே 'போல்டானார்'. அதன் பின்னர் கர்நாடகா அணித் தலைவர் சுதீப் மாற்று ஓட்ட வீரருடன் களமிறங்கினார். 19.2 ஆவது பந்தில் அவர் நான்கு ஓட்டங்கள் விளாச 6 ஓட்டங்கள் வெற்றிக்குத் தேவையானது. அடுத்த பந்தில் 2 ஓட்டங்கள் பெறப்பட்டது. நான்காவது பந்தில் ஓட்டம் பெற முயலுகையில் இலக்குக் காப்பாளர் ரமணாவினால் 'ரன் அவுட்' செய்யப்பட்டார். இரண்டு பந்துகளில் 2 ஓட்டங்கள் பெற வேண்டிய நிலையில் ஐந்தாவது பந்திலும் ஓட்டமெதுவும் பெறப்படவில்லை. இறுதிப் பந்தில் 2 ஓட்டங்கள் பெற வேண்டிய நிலையில் பந்து வீச வந்த விக்கிராந், பந்தை வீசாமல் 'ஸ்டம்பை' தட்டி கார்த்திக்கை ஆட்டமிழக்கச் செய்தார். இறுதிப் பந்தில் இரண்டு ஓட்டங்கள் பெற வேண்டிய நிலையில் பந்து துடுப்பில் படாமல் இலக்கு காப்பாளர் ரமணா கைகளுக்குச் சென்றது. இதனால் இறுதியில் ஓர் ஓட்டத்தால் கர்நாடகா அணி தோல்வியைச் சந்தித்தது.

சென்னை அணியின் பந்துவீச்சில் சிவா இரண்டு இலக்குகளை வீழ்த்தினார். ஆட்டத்தின் நாயகனாக விக்ராந்த் தெரிவானார்.

ஆட்டத்தைப் பொறுத்தவரை கடந்த வருடம் இறுதி ஆட்டத்தில் சந்தித்த அதே அணிகள் இந்த முறையும் களமிறங்கியமையும் கடந்த வருடம் சம்பியனாகிய சென்னை அணியே இந்த முறையும் சம்பியனாகியமையும் விசேட அம்சமாகும். (ங-5)

போட்டியின் இறுதிக் கணங்களில் வெற்றி கர்நாடகாவின் பக்கமே இருந்தது. எனினும் இறுதிப் பந்துப் பரிமாற்றத்தில் மாயா ஜாலம் காட்டினார் விக்ராந்த். துடுப்பாட்டத்தில் ஆட்டமிழக்காமல் 95 ஓட்டங்களை விளாசிய இவர் இறுதிப் பந்துப் பரிமாற்றத்தில் 8 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு இலக்கைக் கைப்பற்றி சென்னைக்கு வெற்றி தேடிக் கொடுத்தார்.



பார்வையாளர்களை கவர்ச்சி சிந்தும் மழையால் நனையவைத்த நமீதா



[illegible] சந்தனுவை கட்டித் தழுவும் ராதிகா.



ஆடுவோம் பாடுவோம் கொண்டாடுவோம்.



சென்னைக்கு ஆதரவு.




வெற்றியின் கடைசிக் கணம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ‘வீரனுக்காக விலகுகிறேன்’

## இங்கிலாந்துப் பயிற்சியாளரின் அதிரடி முடிவு



லண்டன், பெப். 14

இங்கிலாந்து அணியின் பயிற்சியாளர் பதவியில் இருந்து பேபியோ கெபேலோ ராஜினாமா செய்துள்ளார்.

இனவெறி குற்றச்சாட்டுக்குள்ளான ஜோன் டெர்ரி சமீபத்தில் இங்கிலாந்து அணித் தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார். இதற்கு அந்த அணியின் பயிற்சியாளர் பேபியோ கெபேலோ கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

ஜோன் டெர்ரியே 2012 யூரோ போட்டிவரை இங்கிலாந்து அணியின் தலைவராகத் தொடர வேண்டும் என்று பேபியோ கெபேலோ விரும்பினார்.

ஆனால் இதற்கு இங்கிலாந்து உதைபந்தாட்ட சங்கம் ஒப்புதல் அளிக்கவில்லை. அணித் தலைவர் பதவியில் இருந்து ஜோன் டெர்ரியை நீக்கியே தீர வேண்டும் என்று இங்கிலாந்து உதைபந்தாட்ட சங்கம் ஆணித்தரமாகக் கூறி விட்டது.இந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக் கிழமையன்று இத்தாலி தொலைக்காட்சி ஒன்றுக்குப் பேட்டியளித்த கெபேலோ, ஜோன் டெர்ரியின் பிரச்சினை தொடர்பாக இங்கிலாந்து உதைபந்தாட்ட சங்கத்துக்கு எதிரான கருத்துக்களை கூறினார்.

கெபேலோஇப்படிவெளிப்படையாக இங்கிலாந்து உதைபந்தாட்ட சங்கத்தை விமர்சித்தது சர்ச்சையை ஏற்படுத்தியது. இதனைத் தொடர்ந்து இங்கிலாந்து உதைபந்தாட்ட சங்கத்துக்கும் பேபியோ கெபேலோவுக்கும் இடையே மோதல் முற்றியது.

இந்தநிலையில்,பேபியோ கெபேலோ தனது பயிற்சியாளர் பதவியை ராஜினாமா செய்துள்ளார். அவரது ராஜினாமா ஏற்கப்பட்டது என்று இங்கிலாந்து உதைபந்தாட்ட சங்கத் தலைவர் டேவிட் பெர்ன்ஸ்டின் தெரிவித்துள்ளார்.

ரியல்மாட்ரிட் மற்றும் இன்டர்மிலான் அணிகளின் முன்னாள் பயிற்சியாளரான பேபியோ கெபேலோ (65வயது) இத்தாலியைச் சேர்ந்தவர். 2010 உலகக் கிண்ண உதைபந்தாட்ட போட்டிக்கு முன்னதாக இங்கிலாந்து அணிக்கு பயிற்சியாளராக இவர் நியமிக்கப்பட்டார். தென்னாபிரிக்காவில் நடைபெற்ற இந்த உலகக் கிண்ணச் சுற்றுப் போட்டியில் 2ஆவது சுற்றிலேயே 4:1 என்ற கோல் கணக்கில் ஜேர்மனியிடம் இங்கிலாந்து தோற்று வெளியேறியது. அப்போதே இங்கிலாந்து அணியின் பயிற்சியாளர் பதவியில் இருந்து பேபியோ கெபேலோ விலக வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது குறிப்பிடத்தக்கது. (ந)

# கைப்பையால் வந்த வினை

சிங்கப்பூர் ஸிட்டி, பெப்.14

நண்பர் செய்த தவறால் சிங்கப்பூர் லயன்ஸ் அணி வீரர் மிட்பீல்டர் பிர்துஸ் கேஸ்மானுக்கு மறு அறிவித்தல்வரை உதைபந்தாட்டப் போட்டிகளில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூர் லயன்ஸ் அணியின் மிட்பீல்டர் பிர்துஸ் கேஸ்மான் தனது நண்பரின் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் தனது காதலியுடன் கலந்து கொண்டார்.விருந்தில் அளவுக்கு மீறி மது அருந்திய பிர்துஸ் கேஸ்மான் தன்னிலை மறந்தார். இதையடுத்து பிர்துஸ் கேஸ்மானை அவரது நண்பர் கைத்தாங்கலாக அழைத்துச் சென்றுள்ளார். அந்த சமயத்தில் பிர்துஸ் கேஸ்மானின் காதலியின்கைப்பை என்று நினைத்து மற்றொரு பெண்ணின் கைப்பையை அவரது நண்பர் தவறுதலாக எடுத்துச் சென்று விட்டார்.

இது குறித்து பொலிஸார் பிர்துஸ் கேஸ்மானின் நண்பரை விசாரித்து வருகின்றனர். இந்த நிலையில் பிர்துஸ் கேஸ்மான் கடந்த 5ஆம் திகதி முதல் பயிற்சிக்கும் வரவில்லை. இதனையடுத்து பிர்துஸ் கேஸ்மானை உதைபந்தாட்ட நடவடிக்கைகளில் இருந்து நீக்கிவைக்க சிங்கப்பூர் உதைபந்தாட்டச் சங்கம் உத்தரவிட்டுள்ளது. (ந)

# பளு தூக்குதலில் வென்றோர்

யாழ்ப்பாணம், பெப்.14

சண்டிலிப்பாய் சக்தி ‘ஜிம்’ நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ் மாவட்ட ரீதியாக நடத்தப்பட்ட பளுதூக்கும் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை சண்டிலிப்பாய் கல்வயல் பகுதியில் நடைபெற்றன.

போட்டி முடிவுகள் வருமாறு:-

**56 கிலோ எடைப் பிரிவு**

1 ஆம் இடம்: கே. குகிர்ந்தகுமார்

2 ஆம் இடம் : எஸ். திவாகர்

3 ஆம் இடம்: ஆர். பிரதாபன்

**62 கிலோ எடைப் பிரிவு**

1 ஆம் இடம் : வி.கிருசாந்தன்

2 ஆம் இடம் : ஐ. சுதன்

3 ஆம் இடம் : எஸ்.சிறிகாந்

**69 கிலோ எடைப் பிரிவு**

1 ஆம் இடம் ; எம்.தனுசன்

2 ஆம் இடம் : பி. அனோஜன்

3 ஆம் இடம் : ரி. இந்திரகுமார்

**94 கிலோ எடைப் பிரிவு**

1 ஆம் இடம்: என். ரமணன்

2 ஆம் இடம் : எஸ். ரவிவர்மா

**105 கிலோவிற்கு மேற்பட்ட எடைப் பிரிவு**

1 ஆம் இடம் : ரி.கிருபாகரன்

2 ஆம் இடம் : கே.டிலுக்சன்

இந்தப் போட்டிகளில் பங்குபற்ற குடாநாட்டின் பல பாகங்களிலிருந்தும் போட்டியாளர்கள் ஆர்வத்துடன் வந்திருந்தனர். (கு-130)



யாழ். பரியோவான் கல்லூரியில் மெய்வன்மைப் போட்டி சனிக்கிழமை நடைபெற்றது இதில் மாணவர்களின் அணி நடை அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. (த-17)

## மெய்வன்மைப் போட்டி

வடமராட்சி, பெப்.14

கட்டைக்காடு றோமன்கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய் வல்லுனர் போட்டி எதிர்வரும் 15ஆம் திகதி புதன் கிழமை பி.பகல் 2 மணிக்கு அதிபர் த.யோகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (10-8)


## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் நடராசா

மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் மீசாலை மேற்கை வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் நடராசா நேற்று (13.02.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அழகம்மாவின் அன்புக்கணவரும், தங்கராசாவின் அன்புச் சகோதரனும், பரமசிவம் (கனடா), ஜெயலிங்கம் (லண்டன்), ஜெயலச்சுமி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் பரமேஸ்வரி, வவா, கனகநாயகம், ஆகியோரின் அன்பு மாமனும், செந்தூரன், கீர்த்தனா, குகதர்சன், நந்துசன் ஆகியோரின் அன்புபேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயில் வீதி,
மீசாலை மேற்கு மீசாலை

தகவல்:
குடும்பத்தினர்.



LANKATILES

மாபெரும் மலிவு விற்பனை

ஃபுளோர் மற்றும் வோல் டைல்கள், ஸ்விஸ்டெக் டைல் மோட்டார், கிறவுட் என்பன.

பெப்ரவரி 13 – 19
மு.ப.9 – பி.ப.5

50% வரையிலான தள்ளுபடி

யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானம்
(சுப்பிரமணியம் பூங்காவுக்கு முன்னால்)



## தவறிவிட்டது

12.02.2012 அன்று நுணாவில் சந்திக்கும் யாழ்பாணத்திற்கும் இடையில் தனியார் பேருந்தில் பயணித்தபோது திருமதி ஜெயவனிதா பிரதீஸ் என்பவருடைய (808540525V) தேசிய அடையாள அட்டை, பணியட்டை ATM, என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

T.P. 0775824649



## உடனடி வேலைவாய்ப்பு

GDM Management நிறுவனத்தில் பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

1. Team Leader - 07 2. Supervisor - 04

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். (தனிப்பட்ட சலுகைகளும் உண்டு + தங்குமிட வசதி செய்து தரப்படும்)

O/L பரீட்சைக்குத் [illegible]


தொடர்புகளுக்கு: 077[illegible], 077[illegible]694

(ஆரியகுளம் சந்திக்கு அருகில்)



## மரண அறிவித்தல்

### இராமன் தம்பிராசா



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராமன் தம்பிராசா நேற்று (13.02.2012) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான இராமன் - சோதி தம்பதியரின் இளைய புதல்வனும், காலஞ்சென்றவர்களான குட்டியன் - சின்னம்மா தம்பதியரின் மூத்த மருமகனும், திலகவதியின் அன் புக் கணவரும், விண்மதி, குமுதம், சூரியகுமார், சந்திரகுமார், மகேந்திர குமார், ஜமுலா, முக்கேஸ்குமார், தாட்சாயினி, சாருசாந், கௌதமி ஆகி யோரின் பாசமிகு தந்தையும், செல்வரத் தினம், பரமேஸ்வரன், றஜனி, பால கௌசல்யா, ராஜினி, பாஸ்கரன், ராஜன் ஆகியோரின் பாசமிகு மாமனும் பார்வின், சார்வின், ஸ்ரீபன், கோபிநாத், ஷாலினி, துஷாந், ஆறுஷா, சலக்சிகன், மகிஷா, பிரியவர்த்தனன், பிரகஜன், ஜத்ரா, ஷாயித்ரா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2012) செவ்வாய்க்கிழமை அவ ரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக அச்சுவேலி வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிரதான வீதி,
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தில் போராட்டம்

## மனோகணேசன் நேற்று முழக்கம்



**தோட்ட தொழிலாளர்கள் வறுமையின் கோரப்பிடியில் சிக்கி தவிக்கும் வேளையிலே இந்த மண்ணெண்ணெய் விலை ஒரேயடியாக 50 சதவீதத்தால் எந்தவித தயவு தாட்சண்யமும் இல்லாமல் உயர்த்தப்பட்டுள்ளது.**

கொழும்பு, பெப்.14

மண்ணெண்ணெய் மற்றும் அத்தியாவசிய பண்டங்களின் விலை உயர்வுக்கு எதிராக மலையகத்தில் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் மேற்கொள்வதற்கு ஜனநாயக மக்கள் முன்னணி மற்றும் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவற்றின் தலைவரான மனோ கணேசன் நேற்று திங்கட்கிழமை அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் மனோ கணேசன் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மண்ணெண்ணெய் விலையை 50 சதவீதத்தால் உயர்த்தி அரசாங்கம் உழைக்கும் தோட்டத் தொழிலாளர்களின் தலையில் ஓங்கி அடித்துள்ளது. ஏற்கனவே கூட்டு ஒப்பந்த நடைமுறையில் நாள் ஒன்றுக்கு பறிக்கப்படும் கொழுந்து நிறை தொடர்பில் ஏற்பட்டுள்ள குளறுபடிகளினால் நமது தொழிலாளர்களுக்கு உழைப்புக்கு உரிய ஊதியம் கிடைப்பதில்லை.

இதன் காரணமாக தோட்ட தொழிலாளர்கள் வறுமையின் கோரப்பிடியில் சிக்கி தவிக்கும் இன்றைய வேளையிலே இந்த மண்ணெண்ணெய் விலை ஒரேயடியாக 50 சதவீதத்தால் எந்தவித தயவு தாட்சண்யமும் இல்லாமல் உயர்த்தப்பட்டுள்ளது.

அத்துடன் எரிபொருள் விலையேற்றம் காரணமாக இன்னும் சில நாள்களில் ஏனைய அத்தியாவசிய பொருள்களின் விலைகளும் உயரப்போகின்றன.

தோட்ட தொழிலாளர்கள் மத்தியில் இன்று நிலவுகின்ற இந்த மோசமான நிலைமையை அரசுக்கும் நாட்டுக்கும் எடுத்து காட்டி உரிய நிவாரணங்களை கோரும் முகமாக ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தமொன்று மலையகம் முழுதும் அரசியல் மற்றும் தொழிசங்க பேதங்களுக்கு அப்பாற்பட்ட ஐக்கியத்துடன் நடத்தப்பட வேண்டும்.- என்றார்.

(ந)

# சினிமாப் பாணியில் சிறைக் கைதி கடத்தல்!

## பலபேர் பார்த்திருக்க பரபரப்பு

கொழும்பு, பெப். 14

சினிமாப் படங்களில் மட்டுமே காணக்கூடிய அதிதுணிகர கடத்தல் காட்சி போன்று நேற்றுக் கொழும்பு நகரிலும் இடம்பெற்றுள்ளது.

பட்டப்பகலில் இடம்பெற்ற இக்கடத்தல் சம்பவத்தை நேரில் கண்டவர்களுக்கு ஏதோ சினிமாப் படப்பிடிப்பு நடைபெறுவ்தைப் போன்றே உணர முடிந்துள்ளது.

வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்து கொழும்பு நீதிவான் நீதிமன்றுக்கு அழைத்துவரப்பட்ட கைதி ஒருவரே மேற்படி சினிமாப் பாணியில் கடத்தப்பட்டுள்ளார்.

நீதிமன்ற வளாகத்திற்குள் வைத்து இனந்தெரியாத ஆயுதக்குழுவினரால் வழிமறிக்கப்பட்ட கைதி, துப்பாக்கி முனையில் கடத்தப்பட்டுள்ளார்.

பரபரப்பாகக் காணப்பட்ட நீதிமன்ற வளாகத்தினுள்ளே இக்கடத்தல் சம்பவம் இடம்பெற்றதானது பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளதுடன், மயிர் சிலிர்க்க வைத்துள்ளது.

களனி, பட்டியஹந்திய பகுதியைச் சேர்ந்த 52 வயதான நபரொருவரே இவ்வாறு பகல் 1.15 மணியளவில் கடத்தப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

அண்மைக்காலமாக பட்டப் பகல் கடத்தல் சம்பவங்கள் கொழும்பில் அதிகரித்துள்ளதால் மக்களிடையே பெரும் பீதிநிலை உருவாகியுள்ளது. இது குறித்து உரிய நடவடிக்கைகள் எடுத்து பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்- என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ந-சி)

# இங்கிலாந்து பதிலடி



டுவாய், பெப். 14

இங்கிலாந்து, பாகிஸ்தான் அணிகள் மோதிய முதலாவது ஒரு நாள் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 130 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

பாகிஸ்தான் மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையே டுபாயில் ஒரு நாள் கிரிக்கெட் தொடர் இடம் பெற்று வருகின்றது. முதலாவது ஒரு நாள் ஆட்டம் நேற்று இடம் பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்து பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 260 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் குக் 142 பந்துகளில் 14 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 137 ஓட்டங்களையும், ரவி போபரா 50, ஸ்மித் பட்டேல் 17 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் பாகிஸ்தான் அணி சார்பில் அஜ்மல் 43 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளையும், அப்ரிடி 55 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடத் தொடங்கிய பாகிஸ்தான் அணி இங்கிலாந்தின் வேகப் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் ஆரம்பத்திலிருந்தே இலக்குகளை இழந்தது. 35 பந்து பரிமாற்றங்களில் 130 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்து 130 ஓட்டங்களால் பாகிஸ்தான் தோல்வியடைந்தது.

பாகிஸ்தான் சார்பில் துடுப்பாட்டத்தில் அப்ரிடி 22 பந்துகளில் 28, உமர் அக்மல் 22, யுனிஸ்கான் 15 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் இங்கிலாந்து அணி சார்பில் ப்வின் 34 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், பட்டேல் 26 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், ஸ்வான் 19 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக இங்கிலாந்தின் குக் தெரிவானார்.

(ந-5)




**பணி சிறந்து நிலம் செழிக்க**
**வாழ்த்தி வரவேற்கின்றோம்**


ஊர்போற்ற ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபராய் பணிபுரிந்து இன்று தன் நிர்வாகத் திறனால் வளம் கொழிக்கும் வலி வடக்கின் பிரதேச செயலராய் பணி நிமிரும்

மதிப்புமிகு **கனகராஜா ஸ்ரீமோகனன்** (S.L.A.S)

அவர்களை வாழ்த்தி வரவேற்று இடரின்றி பணி தொடர இறையருள் துணை நிற்க பிரார்த்திக்கின்றோம்.

*அளவெட்டி மகாஜன சபையினர்,*
*அளவெட்டி அபிவிருத்தி மன்றத்தினர்.*


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணின் மடியில் | | ஆண்டவன் அடியில் |
|---|---|---|
| 10 ★ 06 ★ 1930 |  | 07 ★ 03 ★ 2010 |

அமரர் திருமதி **மகேஸ்வரி தில்லையம்பலம்**

*திதி - 14/02/2012*

தெய்வங்கள் மரணிப்பதில்லை
தெய்வத் தாயாகிய நீங்களும்
ஏன்றென்றும் எம் நெஞ்சங்களில்
வாழ்ந்து ஒளி தந்து வழி நடத்துவீர்கள்.

கதிர்காம கோயிலடி,
வதிரி, கரவெட்டி.

என்றும் உங்கள் நினைவுகளுடன் பாசமிகு
(சி/8937) குடும்பத்தினரும், அன்பான உறவுகளும்.

# மரண அறிவித்தல்கள்



## Dr.அ.மரியதாஸ்

(ஓய்வுபெற்ற வைத்தியர்)

அடம்பன் வீதி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் நவாலியை வதிவிடமாகவும் கொண்ட Dr.அ.மரியதாஸ் நேற்று (13.02.2012) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் திருமதி மேரி நாயகியின் (ஓய்வுபெற்ற அதிபர்) அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான திருமதி மேரிஜோசேபின் ஜேம்ஸ், அ.அரசரட்ணம், அ.ஜேம்ஸ் மற் றும் திருமதி ஜெயராணி தொம்மைக்குட்டி, திரு மதி ரஞ்சிதம் ஏகாம்பரம் ஆகியோரின் சகோ தரனும் A.C.ஆனந்தராஜா (பொறியியலாளர் சுவிற்சிலாந்து), E. ரவீந்தரராஜா (ஆசிரியர்-சென் பீற்ற ரேஸ் கல்லூரி பம்பலப்பிட்டி), M.R.மோகன தாஸ் (யாழ்மாவட்ட மெய்வல்லுனர் பயிற்றுனர்), Dr.ஜோய் ஜேசுதாஸ் (ஆஸ்திரேலியா),றோய் மேவின் (ஆசிரியர் Bond international college கிரலப்பினை) ஆகியோரின் அன்புத்தந்தையும் அஞ்சலிகா, தர்சினி, செல்வமகள், சுகிர்தா, ஆகியோரின் அன்பு மாமனும் வோகான்,ஹம்லின் ஆகியோரின்-பிரியமுள்ள பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

நவாலி தெற்கு,
மானிப்பாய்

தகவல்:
M.R.மோகனதாஸ் (மகன்)



## கந்தையா ஞானம்மா

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், ஸ்கந்தபுரத்தை வசிப்பிடமாகவும் தற்போது திருநெல்வேலியில் வசித்து வந்த வருமான கந்தையா ஞானம்மா நேற்று (13.02.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14.02.2012) செவ்வாய்க்கிழமை பி.ப. 3.00 மணியளவில் கிளிநொச்சி ஸ்கந்தபுரத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 50/1, பலாலி றோட்,
திருநெல்வேலி.

தகவல்:
கே. யோகராஜா (மருமகன்).



## ஆறுமுகம் யோகநாதன்

நயினாதீவு, 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் யோகநாதன் நேற்று முன்தினம் (12.02.2012) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சின்னத்தங்கம் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சிதம்பரத்தின் அன்புக் கணவரும் பிரகாஸ், பிரதீபன், தர்சினி, ரஜீவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் விஸ்வலிங்கம், செல்லத்துரை, முத்துலெட்சுமி, காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் கோபாலன், சிவசிதம்பரம், சண்முகநாதன், கமலேஸ்வரி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற நாகம்மா மற்றும் கோவிந்தபிள்ளை, நடராசா, விசாலாட்சி, செல்லம்மா, பொன்னுத்துரை, நல்லதம்பி, சிவக்கொழுந்து, யோகாம்பிகை, வரலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

237, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்
ஆறுமுகம் - விஸ்வலிங்கம்
(சகோதரன்)


**வாகனம் விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள Shell model A/C 50-XXXX
[illegible] விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-0771176689


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைச்சர் ஹக்கீமுடன் பிளேக் குழுவினர் பேச்சு

கொழும்பு,பெப் 14

இனப்பிரச்சினை தீர்வில் முஸ்லிம்களின் பரிமாணம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதன் முக்கியத்துவம் பற்றி இலங்கை வந்துள்ள தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி ராஜாங்கச் செயலாளர் ரொபேட் ஓ பிளெக் மற்றும் துணை இராஜாங்கச் செயலாளர் மரியா ஒட்டேரோ ஆகியோரிடம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதி அமைச்சருமான ஹக்கீம் விளக்கமளித்துள்ளார்.

இலங்கை வந்துள்ள அமெரிக்கப் பிரதிநிதிகள் அமைச்சர் ரவூப் ஹக்கீமை நேற்று திங்கட்கிழமை சந்தித்து கலந் துரையாடினர்.

இதனையடுத்து அமைச்சரின் ஊடக பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

போரின் பின்னரான நாட்டின் தற்போதைய நிலைமை, நாடாளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படவுள்ள புதிய சட்டங்கள், சட்டத்திருத்தங்கள் தொடர்பிலும் அமைச்சர் அமெரிக்கப் பிரதிநிதிகளுக்கு விளக்கமளித்தார். அதன் பின்னர், சட்ட விரோதமாக வெளி நாடுகளுக்கு ஆள்களை கடத்தல் மற்றும் களவாக கொண்டு செல்வது பற்றி நீதி அமைச்சின் செயலாளர் கமலினி டி சில்வா தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலிலும் ரொபேர்ட் ஓ பிளேக் மற்றும் மரியா ஒடேரோ ஆகியோரும் பங்குபற்றினர்.

அதில் சட்டமா அதிபர் திணைக்களம், குற்றப்புலனாய்வு திணைக்களம், மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் விவகார பிரிவு மற்றும் வெளிநாட்டு அமைச்சு ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். (த)

## தனியார் பஸ்கள் இன்று சேவையில்

1 இதேவேளை- தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு முதல் நாடாளாவிய ரீதியில் மேற்கொண்டு வந்த பணி புறக்கணிப்பை கைவிடப்பட்டுள்ளதாகக் நேற்று மாலை அறிவித்தது.

அதிகாரிகளுடன் இடம்பெற்ற பேச்சுகளை அடுத்தே பணிப் புறக்கணிப்பு முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இதற்கிணங் பஸ் கட்டணங்கள் 20 வீதத்தினால் அதிகரிக்கப்படுவதுடன் ஆகக் குறைந்த பஸ் கட்டணமாக 9 ரூபா அறவிடப்படும் எனவும் அந்தச் சங்கம் அறிவித்துள்ளது. (த-3)

## வீழ்ந்து நொருங்கியது மிக்



1 தில் இருந்து புறப்பட்டு வழக்கமான பயிற்சியில் ஈடுபட்ட போதே இந்த விமானம் விபத்துக்குள்ளானது.

இந்த விமானத்தில் இருந்த விமானி பிளைட் லெப்டினன்ட் ஹேரத் எந்தக் காயமும் இன்றி உயிர்தப்பியுள்ளதாக விமானப்படைப் பேச்சாளர் குறூப் கப்டன் அன்றூ விஜேசூரிய தெரிவித்துள்ளார். இந்த விபத்துக்கான காரணம் இன்னமும் தெரியவராத போதும் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. விமானப் படை மிக்-27 போர்விமானங்களை தரைத் தாக்குதல் மற்றும் நெருக்கமான வான் உதவி நடவடிக்கைளுக்குப் பயன்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (த)

## விஞ்ஞானபீட மாணவர்கள் விரிவுரைகளைப் புறக்கணிப்பு

1 வர்களும் தெரிவாகியிருந்தனர். பல்கலைக்கழக மாணவர் விடுதியில் தங்கியிருந்த சிங்கள மாணவர்களில் ஒருவர், 'மூன்றாம் வருட மாணவர் ஒருவர் தனக்கு பகிடிவதை செய்து துன்புறுத்தினார்' என்று பல்கலைக்கழக நிர்வாகத்திடம் முறைப்பாடு ஒன்றைக் கொடுத்தார்.

இந்த முறைப்பாட்டைச் சாட்டாக வைத்து அவர் தற்போது தென்னிலங்கையிலுள்ள பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்றுக் கற்கையைத் தொடர்ந்து வருகின்றார். இந்த நிலையில் சிங்கள மாணவரின் முறைப்பாட்டை அடிப்படையாக வைத்து குறித்த விஞ்ஞானபீட மூன்றாம் வருட மாணவரை பல்கலைக்கழக நிர்வாகம் ஆறு மாதங்களுக்கு இடைநிறுத்தும் முடிவை கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்தது.

இந்த அறிவிப்பு பக்கச்சார்பானது எனத் தெரிவித்து, இடைநிறுத்தப்பட்ட மாணவனை மீண்டும் கல்வியைத் தொடர அனுமதிக்க வேண்டும் என்று கோரி நேற்று திங்கட்கிழமை முதல் விஞ்ஞானபீட மாணவர்கள் விரிவுரைகளைப் புறக் கணித்து எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

''குறித்த சிங்கள மாணவன் யாழ். பல்கலையில் கற்பதை ஆரம்பம் முதலே விரும்பவில்லை. பகிடிவதை முறைப்பாடொன்றைக் கொடுத்துவிட்டு, அதனைக் காரணங்காட்டி தான் நினைத்தபடி வேறொரு பல்கலைக் கழகத்துக்குச் சென்றுவிட்டார். குறித்த சிங்கள மாணவர் தெரிவித்த முறைப்பாடு தவறானதென்றும், மாணவர் விடுதியில் அவ்வாறான பகிடிவதை எதுவும் நடக்கவில்லை என்றும் அங்குள்ள சிங்கள மாணவர் உள்ளிட்ட அனைத்து மாணவர்களும் துணை வேந்தருக்குக் கடிதமூலம் அறிவித்திருந்தனர். அதனைக் கணக்கிலெடுக்காது, முறைப்பாடு கொடுத்த சிங்கள மாணவர் சமுகமளிக்காத நிலையிலும் கூட, எமது சகமாணவன் மீது நியாயமற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முறைப்பாடு செய்த சிங்கள மாணவர் பலமான அரசியல் பின்புலம் ஒன்றை கொண்டிருக்க வேண்டும். அதனாலேயே இவ்வாறான பக்கச்சார்பான முடிவு எடுக்கப்பட்டுள்ளது. எனவே இதனைக் கண்டித்து விரிவுரைகளைப் புறக்கணித்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். விரைவில் சாதகமான முடிவு கிடைக்காத பட்சத்தில் சகல பீடங்களையும் இந்தப் போராட்டத்தில் இணைத்துக் கொள்வதுபற்றி ஆராய உள்ளோம்.''-

என்று விஞ்ஞானபீட மாணவர்கள் உதயனுக்குத் தெரிவித்தார். (ங)

## இ.போ.ச.பஸ் தாக்கப்பட்டது; சாரதி காயம்

1 நெஞ்சுப் பகுதியில் காயமடைந்த பஸ் சாரதியான எம்.எஸ். யோகராஜா (வயது-53) யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து ஆழியவளை நோக்கி சேவையில் ஈடுபட்டிருந்த போதே நேற்று முற்பகல் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இனந்தெரியாத நபர்களால் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவருக்கு தெரியப்படுத்தியுள்ளதாகச் சபையின் வட பிராந்தியப் பிரதம முகாமையாளர் ச.கணேசபிள்ளை தெரிவித்தார்.

இதேவேளை

தென் பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பஸ் ஒன்றின் மீதும் நேற்று மிருசுவில் பகுதியில் வைத்துத் தாக்குதல் நடத்தப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.

எரிபொருள் விலையேற்றத்துக்கு ஈடுகொடுக்க முடியாத நிலையில் தனியார் பஸ்கள் அனைத்தும் நேற்றுப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டதன் காரணமாக இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்கள் நேற்றுப் பயணிகளால் நிரம்பி வழிந்ததைக் காண முடிந்தது. (த-3-5-228)

## எரிபொருள் விலையேற்றம் ஆசியாவின் அதிசயமா?

1 இதுவரை மின்சார வசதிகள் இல்லை. இந்தப் பகுதி மக்கள் மண்ணெண்ணெயைப் பயன்படுத்தியே விளக்குகளை எரிக்கின்றனர். இந்த 35 ரூபா விலையேற்றத்தால் மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

மனிதராகப் பிறந்த எவராலுமே ஏற்றுக்கொள்ள முடியாத அளவுக்கு எரிபொருள்களின் விலையை அரசு உயர்த்தியுள்ளது. எரிபொருள்களின் விலையை உயர்த்துவதுதான் ஆசியாவின் அதிசயமா? மக்களை தொடர்ந்தும் வறுமைக்குள்ளாக்குவதோடு மக்களின் வாழ்க்கையோடு அரசு விளையாடுகின்றது.

நகரை அழகுபடுத்துவதாகக் கூறி கொண்டு அரசு போலித்தனமான வேலைகளை மேற்கொண்டு அதற்கு நிறைய பணத்தை வீண் விரயமாக்குகின்றது. இவ்வாறான பகட்டு வேலைகள் மேற்கொள்வதை விடுத்து மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் இறங்க வேண்டும்.

அரசின் இவ்வாறான செயற்பாடுகளும், எரிபொருள் விலையேற்றமும் எதிர்க்கப்பட வேண்டியதொன்றுடன் உடனடியாகவே இதற்கான மாற்று நடவடிகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரித்ததால் இங்கு விலை அதிகரிக்க வேண்டி ஏற்பட்டதாக அரசு சொல்ல முடியாது. அப்படியானால் அந்த அரசு தேவையில்லை. ஒட்டு மொத்தமாக பேரழிவை ஏற்படுத்தும் இந்த எரிபொருள் விலையேற்றத்துக்கு அரசு மானியம் வழங்க வேண்டும்.

எரிபொருள் விலையேற்றத்துக்கு எதிராக எவர் போராட்டங்களை முன்னெடுத்தாலும் அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கும் - என்றார். (த-5)

## கடும் வெயிலில் கால் கடுக்க வீதியில் அந்தரித்த பயணிகள்

1 பினரும் தமது அன்றாடக் கடமைகளுக்காகப் பயணம் செய்வதில் பலத்த நெருக்கடிகளைச் சந்தித்தார்கள்.

குடாநாட்டில் உள்ள யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காரைநகர் இ.போ.ச. டிப்போக்கள் சேவைகளை நடத்தியபோதிலும் ஏற்கனவே போதியளவு பஸ்கள் இன்றி மட்டுப்படுத்திய பஸ்சேவைகளை நடத்தி வரும் இந்த டிப்போக்களினால் நெருக்கடியைத் தீர்க்கும் விதத்தில் பஸ்சேவைகளை நடத்த முடியவில்லை.

குடாநாட்டின் பல பிரதான பாதைகளில் நீண்ட நேர இடைவெளியில் இ.போ.ச. பஸ்சேவைகள் இடம்பெற்றன. எனினும் அதிகமான பயணிகள் பல இடங்களில் பஸ்களை மறித்த போதிலும் அவை பிரயாணிகளால் நிறைந்திருந்தமையால் நிற்காமலே சென்றன.

குறிப்பிட்ட இடங்களுக்குப் பயணிப்பதற்காக பெருந்தொகையான பொது மக்களும், மாணவர்களும் நீண்ட நேரம் வெயிலில் கால்கடுக்கக் காத்திருந்ததையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

யாழ். குடாநாட்டில் பெரும்பாலான வழித் தடங்களில் தனியார் பஸ்கள் வேவையாற்றி வருகின்றன. இ.போ.ச. பஸ்களின் சேவை போதிய அளவு இல்லாமையால் தனியார் பஸ்களையும் குடாநாட்டு மக்கள் அதிக அளவில் பயன்படுத்தி வருகின்றனர். இந்த நிலையில் நேற்றைய வேலை நிறுத்தத்தால் மக்களின் அன்றாட கருமங்களில் பெரும்பாதிப்பு ஏற்பட்டுள்ளது. (விரிவான செய்தி ஐந்தாம் பக்கத்தில்) (த-3-5-8-9-17)

## இலங்கைப் போர்க்குற்றங்களை ஐ.நா.சபை விசாரிக்க வேண்டும்

1 இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமைமீறல்களுக்குப் பொறுப்புக் கூறுவது தொடர்பாக அமெரிக்காவின் துணை இராஜாங்கச் செயலர் மரியா ஒட்டேரோ, தெற்கு, மத்திய ஆசியாவுக்கான உதவி இராஜாங்கச் செயலர் ரொபேட் ஓ பிளேக் ஆகியோர் இலங்கையில் பலதரப்பினரையும் சந்தித்து பேச்சு நடத்திய நிலையிலேயே ஐரோப்பிய நாடாளுமன்றம் இந்தப் பிரேரணையை முன்வைத்துள்ளது.

ஜெனிவாவில் எதிர் வரும் 27ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக் நாடுகள் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வரத் திட்டமிட்டுள்ளன. இத்தகைய நெருக்கடிக்கு மத்தியில், ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் இந்தத் தீர்மானமானது இலங்கை அரசுக்கு மேலும் அழுத்தங்களை ஏற்படுத்தியுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கத்துவ நாடுகள், ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபைமற்றும் மனித உரிமைகள் ஆணைக் குழு போன்ற சர்வதேச அமைப்புகளுக்கும் இந்தப் பிரேரணையை அனுப்பி வைக்குமாறு ஐரோப்பிய நாடாளுமன்றம் கேட்டுள்ளது.

''இலங்கையின் இறுதிப் போரின்போது சர்வதேச மனித உரிமைகள் சட்டங்கள் மீறப்பட்டமைக்கும் போர்க் குற்றங்கள் புரியப் பட்டமைக்கும் நம்பத்தகுந்த சாட்சியங்கள் இருப்பதால் அது பற்றி சுயாதீனமான பக்கச் சார்பற்ற சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும்'' என்று ஐ.நா. நிபுணர் குழு தனது பரிந்துரையில் தெரிவித்திருந்தது. (உ-த)

## அடிமைச்சின்னம் அழகுபடுத்தப்படுவதா?

15 அதனைப் பயன்படுத்தலாம் என்று யாராவது கருதுவார்களாக இருந்தால் அதன் முகப்பையும், வாயிலையும் அதனோடு இணைந்த பகுதிகளையும் விட்டு மீதியாகவுள்ள பெரும் பகுதியை உடைத்தழிக்கலாம். இதனால் பெரும் நிலப்பரப்பு வேறு தேவைகளுக்குக் கிடைக்கும்.

அப்படியும் இல்லையாயின் அருகில் உள்ள சுப்பிரமணியம் சிறுவர் பூங்காவை கோட்டையின் உட்பகுதிக்கு மாற்றிவிட்டு பூங்கா இருக்கும் பகுதியை வேறு தேவைக்கும் பயன்படுத்தலாம். தமிழர் நிலத்தை நிமிர வைக்க, உரிய முறையில் அழகுபடுத்த, தேவைக்கு ஏற்ப மாற்றியமைக்க சிந்திப்பவர்கள் யாருமற்ற நிலை தொடருமானால் யாழ்ப்பாணத் தமிழர்களின் தலை நிமிர்வுக்கு வரலாறுகளில் இடமில்லாமலே போய்க் கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.அடுத்தவர்களைக் குளிர்விப்பதற்கும், பதவிகளைத் தக்கவைக்கவும் தமிழர் அரசியல் செயற்படுமானால் அடுத்தவன் எமக்குள் புகுந்து கொடி ஏற்றுவான். அவன் நிமிர நாம் குனிய வேண்டியதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸ், மின்சாரக் கட்டணமும் அதிகரிக்கும்

## ஆரூடம் கூறுகிறது ஐ.தே.க

கொழும்பு, பெப்.14

மஹிந்த அரசு, வரலாறு காணாத அளவில் - ஒரே தடவையில் எரிபொருள்களின் விலையை பெருமளவில் அதிகரித்து ஏழை மக்களின் வயிற்றில் அடித்துள்ளது. அத்துடன், மக்களின் பணத்தையும் அரசு சூறையாட முயற்சிக்கின்றது.

அரசு தனது நாசகார, வஞ்சக செயல்கள் மற்றும் சர்வதேசத்திடம் பெற்ற கடன்கள் ஆகியவற்றை மூடி மறைப்பதற்காகவே எரிபொருள்களின் விலையை அதிகரித்துள்ளது. அரசின் 'மஹிந்த சிந்தனை' இதயம், வயிறு இல்லாத செயற்றிட்டம் போல செயற்பட்டு வருகின்றது.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

எரிபொருள் விலையேற்றத்தால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள உச்சரீதியான பாதிப்பைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு உடனே எரிபொருள் விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும், அத்தியாவசிய பொருள்களின் வரிப்பணத்தை அறவிடுவதை நீக்க வேண்டுமெனவும் ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்துகின்றது.

அரசின் செயற்பாடுகளுக்கு எதிராகக் கண்டனம் தெரிவிக்கவும், குற்றம் சுமத்தவும் எதிர்க்கட்சி என்றவகையில் எமக்கு உரிமை உள்ளது. எனவே, அரசின் இச்செயலுக்கு ஜனநாயக ரீதியில் தமது கட்சி எதிர்ப்பை வெளியிடுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக எம்.பி. கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கையில் வரலாறு காணாத அளவுக்கு மஹிந்த அரசால் எரிபொருள் விலையேற்றம் அசுரவேகத்தில் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னைய காலகட்டங்களில் ஒன்று அல்லது இரண்டு ரூபாவாலேயே எரிபொருள் விலையேற்றமடையும். ஆனால், இன்றோ மண்ணெண்ணெய் - 35 ரூபாவாலும், டீசல் - 31 ரூபாவாலும், பெற்றோல் - 12 ரூபாவாலும் அசாதாரணமான முறையில் அதிகரிக்கப்பட்டுள்ளன.

உலக வர்த்தக சந்தையில் எரிபொருள் விலை அதிகரிக்கும்போது, விலையை அதிகரிக்கவும், விலை குறையும்போது விலையைக் குறைக்கவும் முடியும். உலக வர்த்தக சந்தையில் கணிசமான அளவில் எரிபொருள் விலை அதிகரித்துள்ளபோது நமது நாட்டில் அசுரவேகத்தில் அதிகரித்துள்ளது.

> இந்நிலை நீடித்தால் நாட்டிலுள்ள அப்பாவி மக்களே பெரும் பாதிப்புக்கு உள்ளாவார்கள். அதனால், எரிபொருள் விலையைக் குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்

இதன்மூலம் மக்களின் பணத்தைச் சூறையாடுவதற்கே அரசு முயற்சிக்கின்றது எனத் தெரிகின்றது. மக்களுக்கு அசாதாரண நிலை ஏற்படுகின்ற சமயத்தில் உலகவங்கியின் இருப்பை எடுத்தாவது மக்களைப் பாதுகாப்போம் என அரசு கூறியது. அதை அவர்கள் மறந்திருக்கலாம். ஆனால், மக்கள் மறக்கவில்லை.

கொலன்னாவ, முத்துராஜவல முதலான கனிய எண்ணெய் களஞ்சியசாலைகளில் இருமாதங்களுக்கு நாட்டிற்குத் தேவையான கனிய எண்ணெய்யைக் களஞ்சியப்படுத்தலாம். ஆனால், இன்றைய அரசால் 2 கிழமைகளுக்குத் தேவையான எண்ணெய்யைக் கூட களஞ்சியப்படுத்த முடியாதுள்ளது. உலக வர்த்தக சந்தையின் விலைக்கேற்பவே எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதெனப் பல்வேறு அரசியல் காரணங்களை முன்வைத்து அரசியல் அரங்கில் கூறிவருகின்றது.

உலக வர்த்தக சந்தையில் பெற்றோல் ஒரு பீப்பாவின் விலை 96, 97 அமெரிக்க டொலர்களாக உள்ளது. ஆனால், 112 தொடக்கம் 115 அமெரிக்க டொலர் என அரசு கூறுகின்றது. மேலும் ஈரானிய லைட், சவூதி லைட் முதலான பாரங்குறைந்த பெற்றோல் ஒரு பீப்பா 126, 127 அமெரிக்க டொலர் அளவில் உள்ளது.

இதற்கேற்ப பெற்றோல் ஒரு லீட்டரின் விலை 91 ரூபா அளவில் விற்பனை செய்யவேண்டும். ஆனால், அரசோ 149 ரூபாவுக்கு விற்பனை செய்கின்றது. டீசல் ஒரு பீப்பாவின் விலை 137 அமெரிக்க டொலர்கள் மட்டுமே. இதற்கமைய் அரசு டீசல் ஒரு லீற்றரை 99,100 ரூபாவுக்கு வாங்கி 115 ரூபாவுக்கு விற்பனை செய்கின்றது.

மண்ணெண்ணெய் 35 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. மண்ணெண்ணெய் விலையில் ஏற்பட்டுள்ள இந்த அசுரவேக அதிகரிப்பானது குப்பிலாம்பில் தமது வாழ்க்கையை நடத்துகின்ற சமுர்த்திப் பயனாளிகள், விவசாயிகள், தோட்ட மக்களின் வயிற்றிலடிக்கும் வகையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதன் பிரகாரம் ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 85 ரூபாவிலிருந்து 106 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் விலையேற்றத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள மக்கள், இது மக்கள் தலைவரின் ஆட்சிதானா? - எனக் கேள்வி எழுப்புகின்றனர்.

எரிபொருள் விலையை அசுரவேகத்தில் அதிகரித்துவிட்டு, மக்களுக்கு மானிய முறையில் எரிபொருள் வழங்கப்படும் என்ற அரசின் கூற்றானது அதன்வஞ்சகச்செயலை மூடி மறைக்கவேயாகும்.

மானிய முறையில் எரிபொருள் வழங்கப்படும் என்றால் அதற்கு ஒரு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டுமெனத் தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் கேட்டபோது, அரசு உடன்படிக்கை தேவையில்லையென மறுத்துள்ளது. எரிபொருள் விலையேற்றத்தால் நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமையைக் கட்டுப்படுத்த மானியங்கள் வழங்கினால் அது பயனளிக்காது.

அடுத்த வாரங்களில் காஸ் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கப்படும் என அறியமுடிகின்றது. இந்நிலை நீடித்தால் நாட்டிலுள்ள அப்பாவி மக்களே பெரும் பாதிப்புக்கு உள்ளாவார்கள். அதனால், எரிபொருள் விலையைக் குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (சி)

## வடமராட்சி வடக்கு மீனவர்கள் இன்று முதல் தொழிற் புறக்கணிப்பு

வடமராட்சி, பெப்.14

வடமராட்சி வடக்கு, கடற்றொழிலாளர் சங்கங்களும் இடம்பெயர்ந்த அந்தப் பகுதி மயிலிட்டிக் கடற்றொழிலாளர் சங்கமும் இணைந்து இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியிலிருந்து காலவரையறையற்ற தொழிற் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளன.

எரிபொருள்களின் திடீர் விலையேற்றத்தை ஆட்சேபித்து இந்தப் புறக்கணிப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளதாக இன்பருட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் தெரிவித்தார். அத்தோடு தென்னிலங்கை மீனவர்களின் புறக்கணிப்பு ஆதரவாகவும் தாம் இந்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் இந்த முடிவில் எந்தவித மாற்றமும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார். தமது போராட்டம் குறித்து யாழ். மாவட்ட சமாசத்துக்கும் அறிவித்ததாக அவர் தெரிவித்தார். (ங-8)

## வாக்காளராகப் பெயர் இல்லையேல் சமுர்த்திக் கொடுப்பனவும் இல்லை

யாழ்ப்பாணம், பெப்.14

வாக்காளர் பெயர்ப் பட்டியலில் பெயர் இல்லாதவர்களுக்கு சமுர்த்திக் கொடுப்பனவு எதிர்காலத்தில் வழங்கப்படமாட்டாது என்று யாழ். மாவட்ட செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பில் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:

2011 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பதிவுகள் கடந்த வருடம் ஜூன் மாதம் முதல் ஆரம்பமாகியிருந்தன. இதன்போது பதிவு செய்யத் தவறியவர்களுக்காக உரிமைக் கோரிக்கை படிவத்தினூடாகவும் பதிவு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் பின்னரும் யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் வாக்காளர்களாகப் பலர் பதிவு செய்யவில்லை. இந்த நிலையில் சமுர்த்தி உதவி பெறுபவர்கள் கட்டாயமாக வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சமுர்த்தி உதவிகளைப் பெறுபவர்களின் பெயர் விவரங்களை பதிவு செய்யும் போது அவர்களது வாக்காளர் பெயர்ப் பட்டியல் இலக்கத்தையும் பதிவு செய்யுமாறு சமுர்த்தி ஆணையம் அறிவித்துள்ளதாக மாவட்ட செயலக வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

மேலும் வாக்காளர்களது பெயர்களைப் பதிவு செய்யத் தவறிய கிராம சேவகர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஒ-5)

## தனியார் பஸ் புறக்கணிப்பு முடங்கியது இலங்கை

எரிபொருள் விலையேற்றத்தைக் கண்டித்தும் பஸ் கட்டணத்தை உயர்த்தக் கோரியும் தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் நாடு முழுவதும் மேற்கொண்டு வரும் பணிப்பகிஷ்கரிப்பால் நாட்டின் பலபாகங்களிலும் போக்குவரத்து முடங்கியது. இதனால், பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

காலை முதல் பாடசாலை மாணவர்கள் அரச ஊழியர்கள், தனியார்துறை சார்ந்தவர்கள், வைத்தியசாலை செல்பவர்கள் மற்றும் தனிப்பட்ட அலுவல்கள் காரணமாக பயணம் செய்யவேண்டியவர்கள் என பல தரப்பினரும் தமது கடமைகளுக்குச் செல்ல முடியாது பெரும் பதற்றத்துடன் பஸ் நிலையங்களில் காத்திருந்தார்கள்.

இதேவேளை, தனியார் பஸ் பணிப்புறக்கணிப்புக் காரணமாக பல பகுதிகளிலும் இருந்து கொழும்பு கோட்டைக்கு ஆறு அதிவேக ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டதாக ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய ராகமை, நீர்கொழும்பு, ஹோமாகம, வெயாங்கொட, களுத்துறை ஆகிய பகுதிகளில் இருந்து இந்த ரயில் சேவைகள் மேற்கொள்ளப்பட்டன.

### 17 பேர் கைது

இந்நிலையில், பணிப்பகிஷ்கரிப்பில் கலந்துகொள்ளாது கொழும்பு - நாரஹேன்பிட்டிய பஸ் நிலையத்திலிருந்து சேவையில் ஈடுபட்டுவரும் தனியார் பஸ்கள் மீது தாக்குதல் நடத்திய 17 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அதன்காரணமாக, நாரஹேன்பிட்டிய பஸ் நிலையப் பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டுள்ளது என அறியமுடிகிறது.

இதேவேளை, சேவையில் ஈடுபட்ட ஐந்து தனியார் பஸ்கள் மீது காலி மற்றும் மாத்தறை பிரதேசங்களிலும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த தாக்குதல் தொடர்பில் நான்கு சந்தேகநபர்கள் மாத்தறையில் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

பிரபல காப்புறுதிக் கம்பனி ஒன்றுக்கு விற்பனை ஆலோசகர்கள், அணித் தலைவர்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரிடம் இருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

O/L தகைமை போதுமானது.

★ கவர்ச்சிகரமான சம்பளம்,

★ வாகன வசதி

★ நீங்கள் நினைப்பதற்கு மேல் உழைக்க அரிய வாய்ப்பு. தவறவிடாதீர்கள்.

தொடர்புகளுக்கு: எஸ். மதன்

0777289283, 0778096873

திரைகாட்டியில் பதவி வெற்றிடம்

வடக்கு பிரதேச முகாமையாளர் பதவி (ஒப்பந்த அடிப்படை)

முகாமைத்துவ பட்டதாரியாக இருப்பதுடன் சந்தைப்படுத்தல் விற்பனை மேம்படுத்தலில் யுத்தியும் அனுபவமும் அவசியம். ஆண்கள் மட்டும்.

வேதனம் - 20,000/- உரிய படிகளும்

சேவை அடங்கும் பிரதேசம்: யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு. கடும் முயற்சியுடையவர்களுக்கு இலவச வெளிநாடு சுற்றுலா வசதிகள் அளிக்கப்படும்.

நேர்முகத்தேர்வு: நாளை (15.02.2012) புதன்கிழமை பி.ப. 4.30 மணிக்கு.

பொது முகாமையாளர்

திரைகாட்டி பிறைவேற் லிமிட்டெட்

37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

பாமசி, கிளினிக்குக்கு ஆள் தேவை

நெல்லியடியில் உள்ள பாமசிக்கு பாமசியில் வேலைபழகிய அனுபவம் உள்ளவர்கள் தேவை. 'கிளினிக்'கிற்கும் ஆள் தேவை. அருகில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு- 0777296540

ஆங்கிலம், சிங்களம், பிரெஞ்ச், ஜெர்மன்

Free Workshop

ஒரு மணிநேர இலவச பயிற்சிநெறி

| யாழ்ப்பாணம் 14.02.2012 செவ்வாய் | நெல்லியடி 15.02.2012 புதன் |
|---|---|
| காலை 8.00 - 9.00 | ஆங்கிலம் |
| காலை 9.00 - 10.00 | சிங்களம் |
| காலை 10.00 - 11.00 | பிரெஞ்ச் |
| காலை 11.00 - 12.00 | ஜெர்மன் |
| மாலை 4.00 - 5.00 | ஆங்கிலம் |
| மாலை 5.00 - 6.00 | ஆங்கிலம் |

அனுமதி இலவசம்
பயிற்சி புத்தகம் இலவசம்
CD இலவசம்
சான்றிதழ் இலவசம்

ஒருவர் ஒரு பயிற்சிநெறிக்கு மட்டும் அனுமதிக்கப்படுவார்

MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.02.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



# காதலர் தினம்
## பெப்ரவரி 14




I ♥ you

# விடுதலைக்கான காதல்



தாயகத்தில் தமிழீழ விடுதலைக்கான போராட்டம் முனைப்புப் பெற்றிருந்த காலப்பகுதி அது..... நெருப்பாற்றைக் கடந்து விடுதலைக் குழந்தையைப் பிரசவித்து விடப் போராளிகள் முயன்று கொண்டிருந்த நேரம்...

அக்கினிக் குழந்தைகள் தாக்குதல் ஒன்றுக்கான தயார்படுத்தலில் இறங்கியிருந்தார்கள். ஓய்வே இல்லாத கடும் பயிற்சி. அந்தத் தாக்குதலுக்கான வழிப்படுத்தும் தளபதியாகவும் பயிற்சி ஆசானாகவும் அவன்...., பயிற்சிகளில் வேகம், துடிப்பு, செல்லக் கதை பேசி விழியாலே மொழி பேசும் அவள் அழகு, எப்படித்தான் கடின பயிற்சி எடுத்தாலும் முகத்தில் புன்னகையை தவளவிட்ட படி இருக்கும் அவள்....

அவர்களுக்குள் அழகாய் அரும்பிய காதல்... அந்தக் காதல் வாழ வேண்டும் என்பதற்கானது அல்ல, தேசத்தின் மீது அவர்களுக்கு இருந்த நேசிப்பின் உச்சமானதாய்.... எப்போதாவது கிடைக்கின்ற ஓய்வில் இருவரும் பரிமாறிக் கொள்வதெல்லாம் தங்கள் இலக்குகள் வெற்றிகரமானதாக அமைய வேண்டும். தங்கள் சாவின் மூலம் மக்களுக்கு ஏதாவது நன்மை எட்ட வேண்டும். அவர்களின் முகத்தில் மகிழ்ச்சி பொங்க வேண்டும். அந்த மக்களின் மகிழ்ச்சிக்காக எத்தனை தடவையும் தங்கள் உயிர்களைக் கொடுக்க அவர்கள் தயாராக இருந்தார்கள்.

'என்னுடைய இலக்கு வெற்றிகரமாக அமைய கடவுளிடம் வேண்டிக் கொள்ளுங்கோ....' அவனிடம் அவள் யாசிப்பாள்.

'எனக்காக நீரும் வேண்டிக் கொள்ளும் இரண்டு பேரும் ஒரே தாக்குதலில் எங்கட இலட்சியங்களை நிறைவேற்ற வேணும் என்றும்.... அவனும் சொல்லுவான்.

சாகும் தேதி தெரிந்த பின்னும் காதலிக்க யாரால் முடியும் அவர்களைத் தவிர..., யாருக்குமே புரியாத அழகான காதல் அது.

யார் முதல் - தம் இலட்சியத்தை நிறைவேற்றிக் கொள்வது....., இது தான் அவர்களுக்குள் அடிக்கடி வரும் போட்டி. அவர்கள் வெடி மருந்துகளை தம் உடல்களில் சுமந்து தாக்குதலுக்குத் தயாரான கடைசிப் பொழுது...., இறுதி விடை பகர, அவள் அவனிடம் சென்ற போது 'எனக்காக அழ வேண்டாம்..... உங்கட கண்ணில இருந்து நீர் வந்தால் அது என்னுடைய இலட்சியத்தை மாசுபடுத்தி விட்டிடும். அடுத்த பிறப்பில... அழகான எங்கட மண்ணில.. உங்களுக்காக நான் பிறப்பன், அப்ப மீண்டும் சந்திப்போம்.... அவள் அழகிய விழிகளில் இப்போதும் புன்னகையே விரிந்திருந்தது. அவள் விடைபெற்றாள்.

நெருப்பு மனிதர்கள் மெல்ல நகர்ந்து தம் இலக்குகளை நெருங்கிக் கொண்டிருந்தார்கள். அவனும் கட்டளையை வழங்கிக் கொண்டு உள் நகர்ந்து கொண்டிருந்தான். அவனது செல்லிடப்பேசி ஒலித்தது. அவள் தான் ''நான் என்னுடைய இலக்கை அடைந்து விட்டேன். 'சாச்' பண்ணப் போறன்...'

ஒரு கணம் அவனுக்குள் தடுமாற்றம். மறுகணமே அவன் தன்னைச் சுதாரித்துக் கொண்டான் நேர்த்தியான கட்டளைகளை அவன் வழங்கினான்.

முதல் வெடி அதிர்வு அவன் காதுக்குள்... தொடர்ந்தன கட்டளைகள். அதிர்ந்தன வெடி அதிர்வுகள். வெற்றிச் செய்தி காதோரம் வந்தது, ஊரெல்லாம் வெடி கொழுத்தி மகிழ்ந்தது. அவன் மட்டும் ஊமையாய்......

நாள்கள் நகர்ந்தன. அடுத்த தாக்குதலுக்கான திட்டம்... வெடி மருந்து சுமந்த வேங்கையாய் அவன்.... அவளோடு இறுதியாய் ஒரு நிமிடம் அவன் மனம் திறந்து கொண்டான்.... 'அவளுடையது போலவே, எனது இலக்கும் வெற்றியானதாய் அமைய வேண்டும் அப்ப தான் எங்கட காதல் வாழும்.' அவன் விடைபெற்றான், வெற்றிச் செய்தியைக் காவி வந்து காதோரம் உரைத்தது காற்று.....

கல்லுக்குள்ளும் ஈரம் கசிந்தது புனிதமான இந்தக் காதல் வரலாற்றில் பதியப்படட்டும்.

-மேழி

# என் காதலர்களுக்கு

என் காதலர்களுக்கு
தாய் மண்ணே உன்னை - நான்
காதலிக்கின்றேன் ஏனெனில்
உன்னை முத்தமிட்டே பிறந்தேன்
உன்னை முத்தமிட்டே இறப்பேன்
அதுவரை காப்பாய் வாழ வைப்பாய் என்பதால்

அன்னையே உன்னை - நான்
காதலிக்கின்றேன் ஏனெனில்
இப்புனித பூமியில் வாழும்வரை
நீ என்னை சத்தியமாய்
காதலிப்பாய் என்பதால்

நீதி தேவதையே உன்னை - நான்
காதலிக்கின்றேன் ஏனெனில்
உன் சாட்சி அரங்கம்
காணவிடினும் என்றோ ஒரு நாள்
நியாயம் வழங்குவாய் என்பதால்

வனப்புமிகு இயற்கையே உன்னை - நான்
காதலிக்கின்றேன் ஏனெனில்
ஆற நிழலும்
ஆறுதலுக்கு தனிமையும்
கொடுத்து ஆதரித்தாய் என்பதால்

காலமே உன்னை நான்
காதலிக்கின்றேன் ஏனெனில்
உன் கொடுமை எவ்வளவு
கொடியதானாலும் அனுபவங்களை
எனக்குப் பாடமாக புகட்டுகிறாய் என்பதால்

என் வீட்டு நாயே உன்னை - நான்
காதலிக்கின்றேன் - ஏனெனில்
நிஜமாக நீ என்னை
மறக்காது நன்றியுடன்
இருப்பாய் என்பதால்

என் நிழலே உன்னை - நான்
காதலிக்கின்றேன் ஏனெனில்
நிச்சயமாக நீ என்னை
என்றும் பிரியாது
தொடர்வாய் என்பதால்

என் அன்பனே உன்னை - நான்
காதலிக்கின்றேன் ஏனெனில்
உண்ணப் பிடிக்கவில்லை
உறங்கப் பிடிக்கவில்லை
I Love you என்றாய்


இன்னோர் இதயம் உனக்கு
வேண்டியபோது
உன்னை பிடிக்கவில்லை
உன்னுடன் கதைக்கப்பிடிக்கவில்லை
ஏன் ஏன் உன்னை
மறக்கத்தான் பிடிக்கும்
Iam very sorry என்றாய்

என் இதயமே உன்னை - நான்
காதலிக்கிறேன் ஏனெனில்
எது வந்தாலும் ஏற்றுக்கொள்கிறாய்
எனக்காகப் புன்னகைத்து
மகிழ்வளிக்கிறாய் என்பதால்

க.ரஞ்சீ.
உடுவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# துன்பத்திலும் ஓர் இன்பம்

காதல்...காதல்...காதல் அப்பாடா இந்தக் காதலுக்குள் எத்தனை அர்த்தங்கள் புரிந்துகொள்ள முடியவில்லை. அப்பாடி என்னதான் இதற்கு ஒரு காந்தசக்தி என்று.

நினைத்துப் பார்க்க முடியாத மாபெரும் உணர்வு இதற்குள் அடங்கி இருக்கிறது என்று நானும் காதலித்தபோதுதான் அருமை பெருமைகளை உணர்ந்து கொள்ள முடிந்தது.

''காதலித்துப்பார்...'' அதன் இன்பம் புரியும்! அதுதரும் துன்பமும் தெரியும்! என்று நண்பி விளையாட்டாகச் சொன்னதைக்கூட நாம் நம்பவில்லை. காதலித்த பின்புதான் புரிந்து கொண்டேன் துன்பத்திலும் ஓர் இன்பம் இருக்கிறது என்று.

அதன் புனிதம், ஆழம், மதிப்பு, பெருமை, சக்தி, உண்மை உணர்வுடன் காதலிப்பவனுக்கு மட்டுமே புரியும் என்று எனக்குள் காதல் உணர்வு வந்தபோது நானாகவே நினைத்துக்கொண்டேன்.

வெறும் காமத்துக்காய் அலைந்து திரியும் காமக்காதலும், ஒன்றைவிட்டு ஒன்றாய்ப் பாயும் ஒன்றைவிட்ட காதலும் உண்மைக் காதலின் அர்த்தத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிடும். எதைப்பற்றியும் சிந்திக் காமல் தானாக உளமாக தோன்றும் உண்மைக் காதல். காதல், நேரம், காலம், மதம், இனம் எது கடந்தும் நினைத்தவுடன் நிலையாய் இடம்பிடித்துவிடும்.

பருவ வயதில் பட்டென பற்றிக்கொண்ட என்காதல் பம்பரமாய் சுழன்றாலும் நீடிக்கும் என்றே நானும் அவனும் நினைத்தோம். நினைக்கின்றோம். நினைப் போம். ஏனென்றால் என் காதல் உணர்வும் அவனது காதல் உணர்வும் ஒன்றானதே.

இந்த நாளில் நானும் எனது காதல் உணர்வைப் பகிர்ந்துகொள்ளச் சந்தர்ப்பம் கிடைக்கும் என்று நான் நினைக்கவில்லை. கிடைத்தது மகிழ்ச்சி. அதனால் இப்போது சொல்கிறேன்.

அவனோ தொலைதூரம் இருந்தான். எனக்காய்ப் பிறந்தவன் என்று இப் போது நினைத்துக் கொள் கிறேன்.

அவன் எமது உற வுக்காரன் என்பதால் ஒரு திருமண வீட்டில் சந்தித்துக் கொண்டோம்.



அவன் என்னையே பார்த்துக் கொண்டிருந் தான். உறவினர் என்பதால் நான் பெரிதாக அலட்டிக் கொள்ள வில்லை.

அவனின் பார்வை மட்டும் எனக்குள் ஓர் உணர்வை தோற்றுவித்தது. நான் சற்றுக் கலகலப்பானவள் எனக்கு எப்போதும் சந்தோஷமாக இருப்பதே பிடிக்கும்.

அந்தத் திருமண வீட்டில் நான் ஒரு கதாநாயகிதான். அனைவரும் என்னிடம் ஒட்டிக்கொண்டார்கள். எனது பேச்சு மொழிக்காக நான் சற்று அழகாய் இல்லாவிட்டாலும் ஏதோ ஒன்று அவனுக்கு என்னிடம் பிடித்துவிட்டது. எங்கிருந்தோ திடீரென வந்தவன் எனது கைகளைப் பிடித்துச் சம்மதம் கேட்டபோது என்னை நான் நம்பவில்லை. சற்றும் அவனுக்கு நான் பொருத்தமானவள் இல்லை. அழகிலும் சரி, அந்தஸ் திலும் சரி அறிவிலும் சரி அவன் சற்று அதிகமாகத்தான் இருந்தான்.

எனது மனம் இடம்கொடுக்க மறுத்தாலும் உணர்வுகள் விட்டுக்கொடுக்கவில்லை. ஏக்கப் பார்வையுடன் ஓகே சொன்னேன். ஒரு கணத்தில் எமது ''காதல்'' இணைந்தது.

அந்த நேரம் எனது நண்பி கூறிய ''காதலித்துப்பார்...'' எனும் கவிதை வரிகள் எனக்குள் வந்துபோனது. ஆண்டுகள் தானாகக் கழிந்தன. அப்போதும் எமது அன்பு சற்றும் குறையவில்லை. இருவரும் தொலை தூரமாக இருந்தாலும் தொல்லை கொடுக்கும் தொலைபேசி என்பார்கள். ஆனால் அதுதான் எனக்கும் அவனுக்கும் உள்ள அன்பை நெருக்கமாக்கிக் கொண்டிருக்கிறது. அதனால் நான் அதனை தொல்லைபேசி என்று சொல்லமாட்டேன்.

இப்போதும் தொடர்கிறது எனக்குத் தோன்றிய காதல்... நீங்களும் காதலிப்பவரா? இல்லை காதலிக்கப்படுபவரா என்று நண்பி எனக்குக் கூறிய அறிவுரை ஒன்றை உங்களுக்குச் சொல்லுகிறேன்.

காதலியுங்கள்.... ஆனால் அலைந்து திரியாதீர்கள், கண்ணியமான ''காதல்'' வார்த்தையைப் பயன் படுத்தி நாய்க்காதல் என்று சொல்ல வைக்காதீர்கள்.

இது உண்மைக் காதலையும் புனிதம் இழக்கச் செய்யும்.


அதனால் காதலித்துப் பாருங் கள்... தொடர்ந்து ஒருவன், ஒருத்தி என்ற வைராக் கியத்துடன் மட்டும்.

**ஜீவனா,**
**மானிப்பாய்.**

எதைக்
கேட்டாலும்
வெட்கத்தை தருகிறாய்
வெட்கத்தைக் கேட்டால்
என்ன தருவாய்?

கவிஞர்
-தபூ.சங்கர்.

# காதல்



படிக்கும் போது கூட-நான்
அலாரம் வைத்துப் படிக்கவில்லை
ஆனால் இப்போது அலாரம்
வைத்துத் தான் தூங்குகிறேன்
உனக்கு 'குட்மோனிங்'
சொல்ல வேண்டும் என்பதற்காக
தூங்கும்போதும்
கண் விழிக்கும்போதும்
அடிக்கடி உனது நினைவுகள்
எனக்குள் ஒட்டிக்கொள்கின்றன.
காதலின் உணர்வை ஆழத்தை
நீயும் நானும் -எப்போதும்
விட்டுக் கொடுக்கக் கூடாது
ஏனென்றால்?
எமது காதல் புனிதமானது
கண்ணிமைக்கும் நொடிப் பொழுதினில்
எனக்குள் உனது நினைவலைகள்
தொலைதூரம் நீ இருந்தாலும் நம்
நினைவலைகள் எப்போதும் அருகினிலே
காதலின் இன்பத்தை நானும்
காதலித்தபோது தான் உணர்ந்து
கொண்டேன்
நாள்கள் இப்போது ரணமாகிறது
உனது பார்வைக்காக
காத்திருப்பேன் உனக்காக
நீ-வரும் வழி பார்த்து

நிஷா.



## யாருக்கு ஆர்வம்

காதலர் தினத்தை யார் ரொம்ப
ஆர்வமாய் வரவேற்பது ?
காதலர்கள் என்பது உங்கள்
பதிலென்றால் அது தவறு.
உண்மையில் காதலர் தினத்தை
பெரிதும் எதிர்பார்ப்பது
வியாபாரிகள்தான். வாழ்த்து
அட்டைகள், பரிசுகள்,
சாக்லேட்கள், மலர்கள், சிடிக்கள்,
புத்தகங்கள் என அன்றைய
தினத்தின் விற்பனை பல
பில்லியன் டொலர்கள்.
ஹால்மார்க் எனும் ஒரு நிறுவனம்
காதலர் தினத்துக்காக வெளியிடும்
வாழ்த்து அட்டைகளின்
எண்ணிக்கை மட்டுமே
ஆண்டுக்கு 20 கோடி.

## அறிவித்தல்

எனக்குள்ளே வாழ்ந்தவள்
என்னோடு உறவாடியவள்
பெப். 14 அன்று காலமானாள்
இறுதிக் கிரியைகள்
இனிதே பின் நடத்தப்பட்டு...
அவளுக்கு இப்போ பிடித்திருக்கும்
அவனது இதயத்தில்
அஸ்தி கரைக்கப்பட்டது
என் காதலியின் துரோகத்தை .
உண்மைக் காதலர்கள் அனைவரும்
அறிந்து கொள்ளவும்.

கவிநேசன்.







தினம் தினம் ஒரு கவி
உனக்காகதான் எழுதினேன்
என்னருகில் நீ இல்லாத போது
கவிதையின் வடிவில்
உன்னை நான் காண்கிறேன்.

நானும் சிலுவைப் பாடுகளை
அனுபவித்துளேன்
உன் வருகை
தாமதமான போது,

உன்னைத் தினம் பார்க்க
வேண்டும்
உளமாற பேச வேண்டும்
உன் அருகில் நான் வேண்டும்
உன் இதழ் கொடுக்கும்
முத்தங்கள் வேண்டும்
நம் உயிர் இரண்டறமக்
கலக்க வேண்டும்.

ஹர்ணிகா, கொக்குவில்.

## 22 கோடி ரோஜாக்கள் விற்பனையில்



அமெரிக்காவில் சராசரியாக இந்த காதலர் தினத்தன்று செலவாகும் ரோஜாக்களின் எண்ணிக்கை சுமார் 22 கோடி. பூக்களைப் போட்டி போட்டு வாங்குவது ஆண்கள் தான். 73 சதவீத விற்பனை அவர்களால் தான் நடக்கிறது. பூவுக்கே பூ கொடுக்கிறேன் என காதலுடன் பூ நீட்டுகிறார்கள் ஆண்கள். அப்படியானால் பெண்கள் ? வாழ்த்து அட்டைகள் வாங்குவதில் அவர்கள் தான் முதலிடத்தில் நிற்கிறார்களாம். காதலர் தினத்தன்று சந்திக்கும் ஆணைத் திருமணம் செய்து கொள்வோம் எனும் நம்பிக்கை பண்டைக் காலத்தில் பரவியிருந்தது. அதனால் தன் மனதுக்குப் பிடித்தவரைச் சந்திக்க வேண்டுமே என பெண்கள் காத்தி ருப்பார்களாம். தனக்கு ஒரு காதலி கிடைப்பாளா என ஆண்களும் காதலர் தினத்தன்று அங்கும் இங்கும் அலைந்து திரிவார்களாம்.

'கிரீட்டிங் கார்ட்' பரிமாறும் வழக்கம் பதினேழாம் நூற்றாண்டிலேயே ஆரம்பமாகிவிட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் அது கிளைவிட்டுப் பரவியது. இன்றைக்கு அது மிகப்பெரிய வணிகத் தளமாகவும் விஸ்வரூபம் எடுத்து விட்டது. உலக அளவில் கிறிஸ்மஸ் தினத்துக்கு அடுத்த படியாக ஒரு பில்லியன் எண்ணிக்கை தாண்டி வாழ்த்து அட் டைகள் விற்பனையாவது காதலர் தினத்தில்தான். இமெயில், எஸ். எம். எஸ்., இ-கார்ட், இண்டர் நெட் என ஹைடெக் வாசமடிக்கும் டிஜிட்டல் உலகம் இது. ஆனாலும் எந்த தொழில்நுட்ப வளர்ச்சியா லும் வாழ்த்து அட்டைகளை முழுமையாய் அழிக்க முடிய வில்லை என்பது வியப்பு.

## காதலர் தின பரிசு

பெப். 14 இல் என்
நினைவு பரிசுக்காக
அடம் பிடிப்பாள்
இம் முறை மௌனித்திருந்தாள்
உனக்குப் பிடித்தது எது என்று
ஆர்வமாய் கேட்டேன்
இன்னொருவனை காட்டி
ரொம்ப பிடிக்கும் என்றாள்
வாழ்க காதல் என்று
வாழ்த்திவிட்டு
விடைபெற்றேன் கண்ணீரோடு....

எஸ். கவிதரன், சுவிஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# காதல் சோதிடம்



**மேஷம்**

இவர்கள் காதலில் நாயகனாக திகழ்வர். ஆனால் இவர்கள் எதிலும் நாட்டமில்லாமலும், எதற்கும் திருப்தி அடையாதவர்களாகவும் இருப்பர். இவர்களது குணம் காதலிக்கும்படி இருந்தாலும், இவர்களது எண்ணம் காதலிக்க விடாமல் தடுக்கும். ஆனால் இவர் நிச்சயம் காதலிப்பார், காதலிக்கப்படுவார்.

**ரிஷபம்**

ரிஷப ராசிக்காரர்கள் காதலில் கை தேர்ந்தவர்களாக இருப்பர். இவர்கள் தாங்கள் விரும்பும் ஒருவரை எளிதாக கவர்ந்து அவரை காதலில் விழ வைப்பதில் கில்லாடி. இவர்கள் காதல் உண்மையானதாகவும், தூய்மையானதாகவும் இருக்கும்.

**மிதுனம்**

மிதுன ராசிக்காரர்கள் தங்களைத் தாங்களே காதலிக்கும் குணமுடையவர்கள். எதிர்பாலருடன் ஏற்படும் ஆர்வம் நாளடைவில் மறையும். காதல் ஏற்படுவது இவர்களுக்கு அரிதே. ஆனால் இவர்களது ஆர்வம் காதலாக மாறாது.

**கடகம்**

இவர்களுக்கு காதல் எந்த வகையிலும் ஒத்துவராது. இவர்கள் உறவினர்கள், குழந்தைகள் மீதே அன்பு செலுத்தலாம். கடக ராசிக்காரர்களை காதலிப் பவர்கள் சுய மரியாதையையும், யதார்த்தத்தையும் இழக்க நேரிடும். கடக ராசிக்காரர்கள் சில நேரங்களில் காதலில் விழ வாய்ப்புண்டு. அது தோல்வியிலும் முடியலாம். கடக ராசிக்காரர்கள் காதலிப்பதை தவிர்ப்பது நல்லது.

**சிம்மம்**

சிம்ம ராசிக்காரர்களுக்கு காதல் என்பது மகத்துவம் வாய்ந்தது. காதலிப்பதையும், காதலிக்கப்படுவதையும் மிக மிக விரும்புவர். காதல் திருமணம் செய்யும் யோகம் உள்ளது. இவர்களது மனதில் இருக்கும் காதல் சிறப்பாக இருந்தாலும், இவர்கள் சிறந்த காதலராக இருக்க மாட்டார்கள். ஒருவரை விட்டுவிட்டு மற்றொருவரை காதலிக்கும் மனப்பாங்கு இருக்கும். சிம்ம ராசிக்காரர்கள் யாரை வேண்டுமானாலும் தன் பக்கம் கவர இயலும்.

**கன்னி**

கன்னி ராசி உள்ளவர்கள் அன்பு மட்டும் இல்லாமல் கடமை உணர்வும் கொண் டவர். காதலையும், அன்பையும் யோசித்து செயல்படுபவர். காதலையும், அன்பையும் உடலால் இல்லாமல் மனதளவில் நினைப்பவர். இவர்கள் கொடுக்கல், வாங்கல் விஷயத்தில் விருப்பமுடையவர்கள்.

**துலாம்**

எப்போதும் அடாவடியாக பேசிக் கொண்டிருக்கும் தனுசு ராசிக்காரர்களுக்கு காதல் கை வந்த கலை. ஆனால் இவர்கள் காதல் திருமணம் செய்து கொள்வது உகந்தது அல்ல. காதல் திருமணம் பெரும்பாலும் தோல்வி யிலேயே முடியும் வாய்ப்பு உள்ளது. துலாம் ராசிக்காரர்களுக்கு காதல் உணர்வு அதிகமாக இருக்கும். பெண்ணாக இருந்தால் சிறந்த காதலி யாக இருப்பார்.

**விருட்சிகம்**

விருட்சிக ராசிக்காரர்கள் காதலை விரும்புவர். தான் காதலிப்பதை விட, தன்னை காதலிப்பதையே அதிகம் விரும்புவர். பெண்கள் தன்னைப் பார்க்க வேண்டும் என்று எண்ணுவதால் இவருக்கு காதல் என்பது எட்டாத கனியாகும். இவர்களது வயது ஆக ஆக காதல் எண்ணம் அதிகரிக்கும்.

**தனுசு**

இவர்கள் காதல் வெற்றி அடையும். காதலில் திறமைசாலிகளாக இருப்பர். காதலில் வெற்றி அடைய அதிகமாக கஷ்டப்படுவர். காதலிப்பதிலேயே தனது ஆயுளில் பெரும்பாலான நேரத்தை செலவழிப்பார். இவர்களுக்கு காதல் எண்ணம் அதிகம் இருக்கும். துணையை வெகுவாக விரும்புவர்.

**மகரம்**


இவர்களுக்கு காதல் என்பது முக்கியத்துவம் வாய்ந்தது. உண்ணாமல் உறங்காமல் கூட இருப்பார்கள். ஆனால் காதல் இல்லாமல் இருக்க மாட்டார்கள். மகர ராசிக்காரர் காதலியாக இருந்தால் அவரது அன்பு குறைவுதான். அதே சமயம் காதலராக இருந்தால் அவரது காதலுக்கு அதிக வலிமை உண்டு. யாரையும் நம்பவிடுவர். மகர ராசிக்காரர்களின் காதல் ஆத்மார்த்தமாக இருக்கும். இவர்களது காதல் எந்த வகையிலும் தவறாக இருக்காது.

**கும்பம்**

கும்ப ராசிக்காரர்கள் உண்மையான காதலராக இருப்பர். ஆனால் காதல்தான் வாழ்க்கை என்ற அளவிற்கு அவர்களிடம் முக்கியத்துவம் இருக்காது. காதலைப் பற்றி இவர்கள் கற்பனை செய்து வைத்திருப்பர். காதல் என்பதை மன ரீதியான உணர்வாக மதித்து, காதலரை விரும்பினால் வெற்றி நிச்சயம் கிட்டும். உயர்ந்த பதவியில் அமர்ந்த பின்னர் உங்கள் காதலை தெரிவிப்பது உத்தமம்.

**மீனம்**

மீன ராசி காரர்களிடம் அன்பும், பொறுமையும் நிலைத்திருக்கும். எப்பொழுதும் அவர்களின் வாழ்க்கையில் வெற்றி நிலைபெற்றிருப்பதில் மீனராசிக் காரர்களின் சுபாவம் எப்பொழுதும் காம இச்சை கொண்டவராக இருப்பர். இவர்களை யார் நேசிக்கின்றனரோ அவர்களை இவர் நேசிப்பார். அன்பிற்காக இவர் அனைத்தையும் அழிக்கவும் முடிவு செய்பவர்.






மனதிற்குள் சஞ்சரித்த
ஓராயிரம் நினைவுகளுக்குள்
அவனால் நெறிப்படுத்தப்பட்ட
அற்புத உணர்வு!
எந்தச் செயல்களுக்குள்ளும்
செயலற்றுப் போய்விட

எனக்குக் கிடைத்த
மறக்க முடியாத
நினைவு
என் இளமையை
கௌரவப்படுத்திய
நான்கு விழிகளுக்கு
விதிக்கப்பட்ட
மாறாத சட்டம்
நம் வயதுக்கு
வரைவிலக்கணம்
எழுதி நாமே நமக்கு
விதித்த வாழ்க்கை விதி




*சிந்துஜா,*
*கோண்டாவில்.*



## காதலர்களால் முன்வைக்கப்படும் சவால்கள்

நம் தமிழ்க் கலாசாரத்தில் பெண் என்றாலே அவள் தனக்குப் பிடித்தக் காதலைக் கூட முதலில் மறுத்து, பிறகு தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற செயற்கையான தர்க்கமாக இருப்பதால், மனம் துணிந்து காதலைச் சொன்னால் அது வெற்றியாக முடிந்தே ஆக வேண்டும் என்ற உளவியல் அழுத்தம் பெண்கள் மத்தியில் தோன்றிவிடுகிறது.

சிலர் நினைக்கலாம். ஆணும் பெண்ணும் சகஜமாக பழகுவது என்பது தவறே இல்லை. அதைக் கூடாது என்று கண்டிப்பது பிற்போக்குத்தனம்தான். ஆனால், எதற்குமே ஒரு எல்லை இருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது. பெண்களே நீங்கள் ஒரு ஆணோடு களங்கமில்லாமல் பழகுவது போலவே அவனும் உங்களோடு பழகுவான் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? தோளில் கை போட்டுக் கொண்டு வலம் வருவது உங்களைப் பொறுத்தவரை நட்பாக இருக்கலாம். ஆனால், நம் சமூகம் இன்றுவரை கல்யாணம் செய்து கொள்வதையே கரம் பிடிப்பது என்று சொல்கிறது. உங்கள் மனதில் களங்கமில்லை, விரசமில்லை, தடுமாற்றம் இல்லை! ஆனால், நீங்கள் மட்டுமே உலகமில்லை என்பதை மனதில் ஆணி அடித்தாற்போல எப்போதும் நினைத்திருக்க வேண்டும்! பெண்களே நான் நல்லவளாக இருக்கும்போது, யார் என்னை என்ன செய்துவிட முடியும்? என்று கேட்பதை தைரியம் என்று சொல்வதைவிட அசட்டு தைரியம் என்று சொல்வதுதான் சரி. உங்களுடைய பாதுகாப்பு உங்களைப் பொறுத்தது மட்டுமல்ல. உங்களைச் சுற்றியிருக்கிற ஆண்களின் ஒழுக்கமும் அதில் பங்கு வகிக்கிறது. காதலில் ஆண்கள் உன்னையே காதலிக்கிறேன் உன்னையே திருமணம் செய்துகொள்வேன் என நம்ப வைத்து எல்லைமீறிவிட்டு ஆளே காணாமல் போயிடுவார்கள்.

பெண்களே..!உங்களை நோக்கி வீசப்படுவது தூண்டிலா, தூய அன்பா என்பதைத் துப்பறிந்து தப்பித்துக் கொள்வதுதான் இந்த வயதில் உங்கள் முன்னால் வைக்கப்படும் சவால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சண்டை பிடித்தாலும்
மறுகணம் சேர்ந்துவிடும்
நண்பர்கள்
சண்டை பிடிக்காமலும்
மறு ஜென்மங்களும்
சேரமுடியாத
காதலர்கள்

– செல்வா

# பெப்ரவரி 14 காதலர் தினம்



# கண்களுக்குத்தான் முதலிடம்

மனிதர்களாக பிறந்த ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் காதலை உணர்ந்திருப்பர். அது எங்கு, எவ்விதம், எப்படி நம்மைத் தாக்கும் என்பதை யாராலும் அறிய முடியாது.

காதல் சிலருக்கு சிறுகதையாக முடிந்திருக்கும், சிலரது வாழ்க்கையில் குறு நாவலாக இருந்திருக்கும். சிலருக்கு மட்டுமே காதலித்தவரையே கரம் பற்றி தொடர்கதையாக நீடிக்கும் வரம் கிடைத்திருக்கும்.

உங்கள் காதல் எப்படிப்பட்டது? உங்கள் வாழ்க்கையின் வசந்த காலப் பக்கங்களை எண்ணிப் பாருங்கள். முதல் சந்திப்பு, முதல் பரிசு என சுவாரஸ்யமான தகவல்களை தட்டி விடுங்கள்.

அவளின் ஞாபகம் அவனுக்கே சுவாசம். இது மனவலியின் பிரசவம். சொல்லாத காதலின் பிரசவம். இதனை எண்ணிப் பார்க்கையில் எங்கோ ஒரு மூலையில் நெருடுகிறது.

நீயும் என்னை நேசித்தாயா எனக் கேட்க வேண்டும் என்ற ஆவல் வேதனையின் சாரல்...
உண்மைக் காதல் வருடங்கள் பலவற்றை விழுங்கியிருந்தாலும், கொண்ட நேசம்
உயிருடன் கலந்திருக்கும் என்பது நிஜம்...
மௌனப் பூகம்பம் மனதை
சாய்த்துவிட்டது வேதனையோடு.

காதல் - இயற்கை மீது வந்தால் அழியாது.

காதல் - பெற்றோர் மீது வந்தால் என்றும் நிலைக்கும்.

காதல் - கூடப் பிறந்தவர் மீது வந்தால்.. அவர்கள் குடும்பமாகும்வரை நீடிக்கும்.

காதல் - தாய் நாட்டின் மீது.. தாயக விடுதலை மீது.. வந்தால்.. அந்தத் தேசம்.. இலட்சியம் உள்ளவரை அது கூட வரும்.

காதல் - கல்வி மேல வந்தால்.. ஆயுள்வரை அது வரும்..!

காதல் - பணத்தின் மேல வந்தால்.. இழப்பு வரை அது மகிழ்விக்கும்..! இழப்பின் பின்.. சோகமே கதியாகும்..!

காதல் - துன்பப்படும் மக்கள் மீது வந்தால் அவர் துன்பம் நீங்கும் வரை அதுவும் வாழும்.. அவர் துன்பம் தீரினும்.. செழிக்கும்..!

காதல் - ஒரு குமரி மீது வந்தால்.. அவள் ஏமாற்றாதவரை நீடிக்கும்.. ஏமாற்றும் போது கண்ணீரில் கரை யும்.. அதையும் தாண்டி நீண்டால் கலியாணச் சிறையில் உன் சுதந்திரத்தை அடைக்கும்..!

எந்தக் காதல் தேவை.. நீயே தீர்மானி மனித மனமே..

காதல் ஒரு உணர்வு. தும்முக்கு வாசிக்கிற மாதிரி எப்பவும் வரலாம்.





# சுவாரஸ்யமானது காதல் அத்தியாயம்

காதல் மொழி பேசுவதில் முக்கிய இடம் கண்களுக்குத்தான். அந்த கண்க ளின் பார்வையில் திருமணம் கைகூடும் வரையில் ஆபாசம் வெளிக்காட்டாமல் இருப்பது நல்லது. அவளே விருப்பப்பட்டு கவர்ச்சியான ஆடை அணிந்து வந்தாலும் கூட அழகாக இருக்கு என்று சொல்லலாமே ஒழிய.. அந்த ஆடையில், ஆபாசத்தை கண்களால் தேடுவது அழகல்ல.

காதலியுடன் நேருக்கு நேர் கதைக்கும் போது அவள் கண்ணைப் பார்த்து பேசுங்கள்/ பேசப் பழகுங்கள். அந்த கண்ணோடு கண் பார்வை உங்கள் கண்ணியத்தை மேம்படுத்தும்.

ஒரு நிமிடம் பேசினாலும் காதலியிடம் பேசும் போது வார்த்தைகளை கவனமாகப் பயன்படுத்தல் வேண்டும். அவளை அழகாக வர்ணிக்கலாமே ஒழிய ஆபாசமாக வர்ணிக்கக் கூடாது.

தனிமையில் அமர்ந்து பேசிக்கொண்டிருக்கும் போது, அவளுக்குத் தெரியாமல் அவள் அழகை ரசிப்பது நாகரீகம் அல்ல.

அதே நேரம் நீங்கள் பார்ப்பதை அவள் கண்டு கொள்ளாமல் விட்டுவிட்டால், அவளோடு அந்த செயலைத் தொடரலாம். இதே செயல் உங்களுக்குள் தொடர்ந்தால் , பின் நாளில் உங்களுக்குள் பிரச்சினை வருவது நிச்சயம். திருமணத் திற்குப் பின்னர் கூட.. அன்றே நீ அப்படித்தானே....?? என்ற ரீதியில் பிரச்சினைகள் ஏற்படலாம்.

முக்கியமாகக் காதலன் மனதில் காமம் வளர காதலி காரணமாக அமைகிறாள். அதற்கு அவள் ஆடைதான் காரணம் என்ற கருத்து பல்வேறு மட்டத்திலும் நிலவுகின்றது.

எப்பேற்பட்டவனாக இருந்தாலும் ஓர் பெண் நினைத்தால் அவனை இலகுவாக மாற்றிவிட முடியும்.

ஆதலாலேயே பெண்களுக்கு அதிகமாக முக்கியம் கொடுத்து எமது இலக்கியங்கள் எழுதப் பட்டன.

பெண்களைப் பலவீனப்படுத்த எடுக்கும் ஆயுதம் காமம்.

அதற்கு பெண்களின் நடை, உடை இரண்டுமே காரணமாகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org